உ

சிவமயம்

திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி

(மூலமும் உரையும்)

சைவ சித்தாந்த மகா சமாஜம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாதவூரடிகள்

அருளிய

திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி

(மூலமும் உரையும்)

ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார்

இயற்றிய உரை

சைவசித்தாந்த மகாசமாஜத்துப்

பொன்விழா வெளியீடு

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1

மன்மத௵ மார்கழிமீ முதல் தேதி

1955

தனிப் பிரதி

விலை ரூபா ஒன்று

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை-14

உ

சிவமயம்

அணிந்துரை

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L., அவர்கள் எழுதியது.

திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் திருவாசகத்துள் மிகச் சிறந்த பகுதிகள். இவற்றுள் திருப்பள்ளியெழுச்சியை எல்லா மாதங்களிலும் நாடோறும் அதிகாலையில் ஓதுவது சிறந்த சிவாநுபூதிச் செல்வர்கள் கடைப்பிடித்த நல்லொழுக்கங்களுள் ஒன்று. சிற்சில சிவாலயங்களில் அதிகாலையில், பள்ளியறையிலிருந்து பாதுகைகளையேனும் பள்ளியறை நாயகரையேனும் எழுந்தருளச் செய்யும்போது, திருப்பள்ளியெழுச்சி ஓதப்பெற்று, அஷ்டமங்களப் பொருள்கள் தர்சநீயமாகக் காட்டப் பெறுவதுண்டு. திருவெம்பாவை இருபது பாசுரங்களையும் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் சைவநற் குடும்பங்களில் ஓதுவது வழக்கம். சிவாலயங்களில் மார்கழித் திருவாதிரையை இறுதியாகக் கொண்ட பத்து நாட்களில், இதனையே எல்லாச் சந்நிதிகளிலும் எல்லாக் கால பூஜைகளிலும் பஞ்சபுராணத்திற்குப் பதிலாக ஓதுவது முறையாக உள்ளது. இதற்குப் பல காரணங்களுண்டு. ஆண்டாள் அருளிய திருப்பாவை வைணவ அன்பர்களால் மார்கழிமாதம் முழுமையும் ஓதப்பெறும். திருப்பாவை காலக்ஷேபங்கள் பல பேரறிஞர்களால் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடக்கின்றன. சில ஆண்டுகளாகத் திருவெம்பாவை திருப்பாவை மகாநாடுகள் நூற்றுக்கணக்கான இடங்களில் சிறப்பாகக் கூட்டப்பெறுகின்றன. இவைகளைக் கூட்டுவதில் காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அதிகமான ஊக்கம் செலுத்திவருகின்றனர். இம்மகாநாடுகளில் சைவ வைணவப் பேரறிஞர்கள் கலந்து

சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர். மார்கழிப் பனுவல்களாகிய திருவெம்பாவை திருப்பாவைகட்கு நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அதிகமான சிறப்பு ஏற்பட்டுள்ளது என்றே சொல்லலாம். கடவுள் திருவருள் இவ்வாறு தமிழ் மக்களை நன்னெறியிற் செலுத்துகின்றது.

திருப்பாவைக்குப் பல வியாக்கியானங்கள் பூர்வாசாரியர்களால் எழுதப்பெற்றன. இவற்றுள் சிறந்தது பெரியவாச்சான் பிள்ளை அருளிய மூவாயிரப்படி. இதனைத் தொடங்கும் அவதாரிகை (முன்னுரை)யில், முதலில் வக்த்ரு வைலக்ஷண்யம், ப்ரபந்த வைலக்ஷண்யம், ப்ரதிபாத்ய வைலக்ஷண்யம் எனும் மூன்றினையும் விவரிக்கின்றார். இவற்றைத் தமிழில் பாடினோர் சிறப்பு, பாட்டின் சிறப்பு, பாட்டின் பொருட்சிறப்பு என்று கூறலாம். திருவெம்பாவைக்கு இவ்வாறு பூர்வாசாரியர்கள் எவரும் உரை எழுதாமை சைவர்களுடைய தவக்குறையென்றே வருந்தற்குரியது. வைணவ முறையைப் பின்பற்றி, நாமும் திருவெமபாவையைப் பாடினோர் சிறப்பு, பாட்டின் சிறப்பு, பாட்டின் பொருட் சிறப்பு என்கிற மூன்று பகுதிகளில் சிறிது விரிவாகக் காணலாம்.

முதலாவதாகப் பாடினோர் சிறப்பைப் பார்க்கும்போது, மாணிக்கவாசகர் சிறப்பைப்போல், வேறு எவருக்கும் சிறப்பிருந்ததாகத் தமிழ்நாட்டில் வரலாறு தெரியவில்லை. சிவபெருமான் இவருடைய பாடல்களைப் புகழ்ந்து "மாணிக்கவாசகம்" என்று கொண்டாடினான். இவருக்கு உபதேசம் செய்வதற்கென்றே திருப்பெருந்துறையில் காத்திருந்து, திருவடி தீக்ஷையும் உபதேசமும் செய்தான். திருச்சிற்றம்பலக் கோவையைப் பாடும்படி விரும்பி, மாணிக்கவாசகர் பாடும்போது, தானே ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிப் பிறகு, திருச்சிற்றம்பலவன் பீடத்தடியில் மறைத்துவைத்துத் தில்லை மூவாயிரவர் மூலமாக அதனை வெளிப்படுத்தினான். ஆநந்த பரவச நிலையில் எற்புத் தொளைதொறும் நெக்கு நெக்குருக உள்ளம் கசிந்து கண்ணீர் வெள்ளம் பாய இவர் பாடினர் என்பதனைப் பரஞ்

சோதி முனிவர் "அழுதடி அடைந்த அன்பன்" எனப் புகழும் திருவாக்காலறியலாம். திருவாசகம் படிக்கும்போது நமது கல்நெஞ்சும் உருகுவதை அனுபவிக்கலாம். "திருவாசகத்துக் குருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" எனும் முதுமொழியும் இதனை உணர்த்தும். கிறிஸ்தவப் பாதிரியாகப் பணிபுரிந்த, போப் துரைமகனார் தாம் வெளியிட்ட திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பில், தாம் உருகி உருகிக் கண்ணீர் வடித்ததைத் தெரிவித்துள்ளார். திருவாசகம் திருக்கோவைகளின் பொருள் யாதெனை வினவிய தில்லைவாழந்தணர் முன்செல்லத் தாமும் தில்லைச் சிற்றம்பலவன் திருமுன் சென்று, அச்சிற்றம்பலவனே பொருள் எனச் சுட்டிக் காட்டி மாணிக்கவாசகர் தமது தூல உடலைச் சூக்குமத்திலும் அதனைக் காரணத்திலும் ஒடுக்கித் தமது ஆருயிரைத் தில்லைக் கூத்தன் தூக்கிய திருவடியில் ஒடுக்கி இரண்டறக் கலந்தனர். மேலும் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேச வைத்தது முதலிய பல அற்புதங்களும் இவர் சிறப்பை விளக்கும்.

பாட்டின் சிறப்பு :—இனி திருவெம்பாவை எனும் பாட்டின் சிறப்பைச் சிறிது காணலாம். தொடக்கத்தில் கூறியபடி, மார்கழிமாதத்தில் பத்து நாட்கள் திருவெம்பாவையைத் தவிர வேறு பன்னிரு திருமுறைகளுள் எப்பகுதியையும் ஓதக்கூடாதெனும் கட்டுப்பாடு பல நூற்றாண்டுகளாக வழக்கத்திலுள்ளது. இதனைத் "திருவெம்பாவைக் காப்பு" என்பர். இஃது அனுஷ்டிக்கப்பட்டு வந்ததனைப் பற்றி ஒரு சிறு வரலாறும் உண்டு. பல மெய்யடியார்கள் நாடோறும் "திருத்தொண்டத் தொகை" எனும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகத்தை ஓதிவந்தனர். திருவெம்பாவைக் காப்பு நாட்களில் தமிழ்மறையில் ஒன்றாகும் இப்பதிகத்தை ஓதாது விடுவதால், அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருப் பெயர்களைச் சொல்லி மகிழ இயலாமைக்கு மாற்று என்ன என்பதை மாதவச் சிவஞானயோகிகள் (சிவஞானமா பாடிய ஆசிரியர்) இடம் விண்ணப்பித்தனர். சிவஞான யோகிகள் "திருத்தொண்டர் திருநாமக்

கோவை" எனும் பனுவலை இயற்றி அதனை ஓதுமாறு பணித்தனர் எனும் வரலாறு இப்பழைய வழக்கத்தை வலியுறுத்தும். இறைவனுக்குத் திருவெம்பாவையிலுள்ள ஈடுபாடு வேறு திருவாசகப்பகுதி எதிலும் கிடையாது. திருக்கோவை பாடும்படி ஏடும் எழுத்தாணியும் கொண்டு மாணிக்க வாசகரை விரும்பியபோது "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்றுனே தவிர, சிவபுராணம் பாடிய வாயால், திருச்சதகம் பாடிய வாயால், நீத்தல் விண்ணப்பம் பாடிய வாயால் என்றெல்லாம் வேறு எப்பகுதியையும் குறித்திலன்.

திருவெம்பாவை தமிழ் மன்னர் மூவர் முடிசூட்டு விழாவில் ஓதப்பெற்ற செய்தியை ஊகிக்கலாம். இப்போது Thailand என வழங்கும் சீயம் (Siam) தேசத்தில் நடைபெறும் "மன்னர் அரசியல் சடங்குகள்" (Siamese State Ceremonies) எனும் நூல் ஒன்றை, Quaritch Wales எனும் ஆசிரியர் இயற்றியுள்ளார். அதில் முடிசூட்டு விழா முதலிய சில முக்கியமான சடங்குகளில் திருவெம்பாவை ஓதப்படுவதைக் குறித்துள்ளார். தமிழர் நாகரிகம் சில சோழ மன்னர்கள் ஆட்சியில் சீயம், கம்போடியா, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளில் பரவிய செய்தியைப் பல சான்றுகளால் அறியலாம். இதனைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி நூல்களை, திரு. நீலகண்ட சாஸ்திரியார் முதலிய பல பேரறிஞர்கள் இயற்றியிருக்கின்றனர். தமிழ் மன்னர்கள் முடிசூட்டு விழாவில் ஏற்பட்ட சடங்குகளையே, சீயம் முதலிய நாடுகளிலும் கைக்கொண்டிருக்க வேண்டும். எனவே பழைய காலத்தில் திருவெம்பாவை இவ்வாறு பயன்பட்ட தென்பதை நன்குக முடிவுகட்டலாம்.

பாட்டின் பொருட்சிறப்பு :— இனி, திருவெம்பாவை இருபது பாசுரங்களிலுள்ள பொருட் செறிவையும் நுட்பத்தையும் பார்க்கலாம். ஒவ்வொரு பாசுரத்திற்கும் இரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் விளக்க விரிவுரை நிகழ்த்தலாம் எனின், ஒரு சிறு அணிந்துரையில் இதனைக் கூறிமுடிப்பது இயலாது. பொதுவாகச் சைவ சித்தாந்தம் கூறும் சாத்திர

நுட்பங்களனைத்தையும் இப்பனுவலில் காணலாம் எனல் மிகையாகாது. முப்பொருளுண்மை, கடவுளைப் பற்றிய கருத்துக்கள், அவர் ஐந்தொழில் விவரங்கள், அவருக்கும் உயிர்கட்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு, உயிர்களைப் பற்றிய விவரங்கள், மும்மலங்களின் இலக்கணம் வகை தொகை, மும்மலங்களை ஒழிக்கும் உபாயங்கள், சரியை முதலிய நான்கு வழிகளின் நுட்பம், பாசநீக்கம், சிவப்பேறு, இரண்டறக் கலத்தல் முதலிய பற்பல செம்பொருள்கள் திருவெம்பாவையிலுண்டு.

முதற் பாசுரத்தின் முதலடி "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை" என்பது. நாம் ஊனக் கண்கொண்டு பார்க்கும் சோதிகளெல்லாம் ஆதியும் அந்தமும் உடையன, எளிய சிறிய நிலையிலிருப்பன. திருவெம்பாவை கூறும் சோதி இதற்கு முற்றிலும் மாறுபட்டது. இதனை ஞானக் கண்கொண்டு பார்த்து அனுபவத்திலறிய வேண்டும். உண்மையான பல பொருள்கள், நமது ஊனக் கண்ணிற்குப் புலப்படாத நிலையிலும் உள்ளன என்பதை William James என்ற ஆசிரியர் இயற்றிய The Varieties of Religious Experience நூலின் The Reality of the Unseen எனும் மூன்றும் அதிகாரத்திற் காணலாம். சமய குரவர் நால்வர், அருணகிரிநாதர், தாயுமானவர் முதலிய சைவப் பெரியார்கட்கு இவ்வனுபவம் இருந்ததனை அவர்கள் திருவாக்கு நன்கு விளக்கும். Saints Peter, Paul முதலிய கிறிஸ்தவப் பெரியார்கட்கு இவ்வனுபவம் இருந்ததை William James தமது நூலில் Photism எனும் தலைப்பில் விளக்குகிறார்.

இனி இரண்டாம் அடியில் "யாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்மாதே வளருதியோ, வன்செவியோ நின் செவிதான்" எனும் குறிப்புள்ளது. ஒளியனுபவம் உடைய பெண்கள் தம் பெருமை தோன்ற "யாம்" என்கின்றனர். ஒளி பொருந்திய அகன்ற கண்களோடு விழித்துக் கொண்டே, சமயானுபவத்தில் அழுந்திக் கிடந்து பேசாதிருக்கும் நிலையில் ஒரு பெண் இருப்பதையே "வாள்தடங்

கண்மாதே வளருதியோ " என்ற தொடர் குறிக்கின்றது. ஏனைய சொற்றொடர்கட்கும் இம்முறையில் பொருள் விரிவு செய்யலாம்.

முதல் எட்டுப் பாசுரங்களில் தூங்குபவரை எழுப்பும் குறிப்பும் கதவைத் திறக்குமாறு வேண்டும் குறிப்பும் இருத்தலால் மொத்தம் ஒன்பது பெண்கள் திருவெம்பாவையிற் கலந்து கொள்வதாக எண்ணி, நவசக்திகள் பிரபஞ்ச காரியத்தின் பொருட்டுத் தொழிற்படுதற்கு ஒருவரை ஒருவர் பிரேரித்தனர் எனும் தத்துவ நுட்பம் திருவெம்பாவைக்குக் கூறப்படுவதுண்டு. இதற்கியைய வேறு பல பொருத்தங்கள் அமைக்கப் பெறுவதுமுண்டு.

இனி ஒன்பதாம் பாசுரத்தில் " முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே " எனும் தொடர்மொழி, சிவபெருமானுடைய தொன்மைநிலை, புத்துணர்விற் கெளிவருநிலை, சொரூபலக்கணம், தடத்தலக்கணம் முதலிய பல நுட்பங்களைக் குறிக்கும். பெண்கள் விண்ணப்பிக்கும் பேறுகள் மிக மிக வியக்கத்தக்கன. சிவபெருமானைத் தலைவனாகப்பெறுதல், அவனுக்கு அடிமையாதல், அவனடியார்கட்கு அடிமை செய்தல், அவர்களையே வாழ்க்கைத் துணைவராகப் பெறுதல் முதலியன காண்க. இப்பேறுகள் கைவரப்பெற்றால் " என்ன குறையுமிலோம் " எனும் பெருமை இயற்கையாக வரும்.

இனி மேலுள்ள ஒவ்வொரு பாசுரத்திலும் பற்பல நுட்பங்கள் உள்ளன. பதின்மூன்றும் பாசுரத்தில் நீராடும் மடு, சிவபெருமானுக்கும் உமையம்மைக்கும் ஒப்பிடப்பெற்றுத் திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் செய்யப்பெறும் தீக்கை முறைகளும் குறிக்கப்படுகின்றன. பதினைந்தாம் பாசுரத்தில் மெய்யடியார் உணர்ச்சிக்குறிகள், சேக்கிழார் பத்தராய்ப்பணிவார் புராணத்துட் கூறும் மெய்ப்பாடுகள் முதலியவற்றைக் காணலாம். பதினாறும் பாசுரத்தில் உமையம்மையின் பாதாதிகேச வர்ணனையுள், மழை பெய்கிற விவரங்கள் மிக அழகாக உவமிக்கப்பெறு

கின்றன. அடுத்த பாசுரத்தில், சிவபெருமான் குருவாகவும் ஜங்கமரூபத்திலும் அடியவர் இல்லங்கட்கு எழுந்தருளி வந்து அருள் வழங்கும் சேவகப் பெருமை புகழப்படு கின்றது. அடுத்த பாசுரத்தில் அண்ணுமலையான் ஆண் ஆகிப் பெண்ணுகி வேருகி உடனுகி உயிர்கட்கு அருள் வழங்கும் நுட்பம் குறிக்கப்படுகின்றது. அடுத்த பாசுரத்தில் எத்தகுதியினரைத் தாம் விரும்பவில்லையென்பது (ஒன்பதாம் பாசுரம் கூறும் தகுதிகள் சிறிதுமில்லாதவரென்பது) கூறப் படுகின்றது.

இறுதிப் பாசுரத்தில், ஆதியும் அந்தமும் தோற்றம் நிலை இறுதி மறைப்பு அருள் ஆகிய ஐந்தும் தில்லைக்கூத்தன் திருவடியாகிய திருவருட் செயலே என்பது வற்புறுத்தப் பெற்று, மார்கழி நீராட்டு புகழப்பெற்று, மார்கழிப் பனுவ லாகிய திருவெம்பாவை வாழ்த்துக் கூறுகின்றது.

"திருவெம்பாவைக் கருத்து" என்று திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் பழைய குறிப்புக்கள் எழுதினுர்கள். சமீபகாலத்தில் காலஞ் சென்ற மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் ஒரு உரையெழுதி வெளியிட்டார்கள். இவை இப்போது கிடைத்தற் கரியனவாயுள்ளன. திருவெம்பாவைக்கும் திருப்பள்ளியெழுச்சிக்கும் திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியாரவர்கள் அருமையான உரை எழுதிப் பல மாதங்கட்குமுன் என்னிடம் காட்டினுர்கள். திரு. செட்டி யாரவர்கள் காலஞ் சென்ற சைவப் பெரியார் கயப் பாக்கம் - சதாசிவச் செட்டியாரவர்களிடம் திருமுறைகளை ஓதிப் பயின்று அன்னுர் பெரிய புராண விரிவுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றவர். அன்னுரிடம் சீடராக ஒழுகிப் பல நல்லுபதேசங்களையும் சித்தாந்த நுட்பங்களையும் பெற லரும் பொக்கிஷமாக மனத்துட் கொண்டவர். பல சைவச் சொற்பொழிவுகள் வாயிலாக இவற்றை நன்கு விளக்கும் ஆற்றலுடையவர். திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி விரிவுரைகளைப் பல ஆண்டுகளாக மார்கழி மாதந்தோறும் நடத்துபவர். இவ்வாறு பல வழிகளிலும் நல்ல சமயாநுபவம்

வாய்ந்த ஓர் அறிஞர் உரை எழுதி வெளியிடுவது சைவநன் மக்கள் செய்த பாக்கியம் என்றே சொல்லத்தகும். இதனை உணர்ந்த தில்லைச் சிற்றம்பலவன் திருத் தொண்டர்களாகிய திருவாளர்கள்-ஆடூர்-இரத்தினசபாபதிப் பிள்ளையவர்களும் இரத்தினசாமி செட்டியாரவர்களும் இதனை அச்சிற்பதித்து வெளியிடுதற்குரிய செலவினை முன்பணமாகக் கொடுத்துதவி புரிந்தார்கள். சாது அச்சுக்கூட்டத்தினர் செம்மையாகவும், விரைவாகவும் அச்சிட்டு முடித்தனர். இப்பதிப்பு நமது சமாஜத்தின் பொன்விழா மலராக வெளிவருகின்றது. இவ்வுரையில் இலக்கிய இலக்கண, சாத்திர தோத்திர மேற்கோள்கள் நிரம்ப உள்ளன. உரையாசிரியர் திருமுறைகளுள் எவ்வளவு ஆழ்ந்த புலமை உடையவரென்பது ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள மேற்கோள்களால் விளங்கும். இத்தகைய உரை இக்காலத்திற்கு மிகப் பெரிதும் இன்றியமையாத தொன்றே யாகும்.

இவ்வுரையாசிரியர் நீடூழி வாழ்ந்து மேன் மேலும் சைவத் திருமுறைகளுள் பல பகுதிகட்கு நல்ல உரை எழுதி வெளியிடுமாறு தில்லைக்கூத்தன் திருவருள் புரிக. இவ்வெளியீட்டிற்குப் பொருளுதவி புரிந்த பெரியார்கள், இதைப் போன்ற வேறு பல நூல்கட்கும் உதவிபுரியச் சிற்றம்பலமேய செல்வன் அருள் புரிக. இந்நூலைப் பயில்வோர் அனைவரும் "என்ன குறையும் இலோம்" எனும் நிலையும், "எங்கெழில் என் ஞாயிறு" எனும் நிலையும, பொருட் செல்வமும், தில்லைச் செல்வன் கழலேத்தும் செல்வமும் பெற்றின்புறுக. குறைவிலா துயிர்கள் வாழ்க, மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

உ

சிவமயம்

முன்னுரை

முல்லையங் கண்ணி முடியாய் போற்றி
 முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
 யேழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி
சில்லைச் சிரைத்தலையி லூணா போற்றி
 சென்றடைந்தார் தீவினைக டீர்ப்பாய் போற்றி
தில்லைச் சிற்றம்பல மேயாய் போற்றி
 திருவீரட் டானத்தெஞ் செல்வா போற்றி

—அப்பர்

செந்தமிழகத்தில் விளங்கும் அருணூல்களுள் தலையாயது திருவாசகம் எனுந் தெய்வத் திருமுறை. அது பெருந்துறை புகுந்து பேரின்ப மூழ்கிய புனிதராகிய மணிவாசகரின் மணிமொழிகளின் தொகுதி. மனங்கனிய மலங்கெடுக்கும் மாண்பும், இருளகற்றி எஞ்ஞான்றும் இன்ப நல்குஞ் சிறப்பு முடையது. ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கும் பான்மையது. நாளும் நற்றவர் வழிபடும் மேன்மையது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த செந்தமிழ்ப் பாமாலையுள் திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் இரு மணிகளாவன. இவ்விரு பகுதிகளின் விரிவுரையே இந்நூல்.

1925-ம் ஆண்டில் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆண்டுவிழா சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இலங்கைச் சைவப்பேரறிஞர்-ஸர். பி. இராமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று எனதாசிரியர் சைவத்

திரு. கயப்பாக்கம் - சதாசிவஞ் செட்டியார், பி.ஏ. அவர்கள் "திருவெம்பாவைக் கருத்து" என்றொரு சொற்பொழி வாற்றினார்கள். அடுத்த ஆண்டில் சமாஜத்தின் ஆண்டு விழா சிவத்திரு. திவான் பகதூர் - P. சுப்பய்ய முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெற்றது. அது போழ்து கோவை வழக்கறிஞர், சிவக்கவிமணி - சிவத்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ. அவர்கள் அச் செம்பொருளைப் பற்றியே பேசினார்கள். அவர்தங் கனிந்த மொழிகளும் அன்பின் பெருக்கும் எனக்கோருணர்ச்சியை ஊட்டின. 1927-ம் ஆண்டில் சென்னை, சைவசமய பக்தஜன சபையில் மார்கழித் திங்களில் எனதாசிரியப் பெருந்தகையார் நாளும் ஒவ்வொரு திருப்பாட்டாகத் திருவெம்பாவைக்கும் திருப்பள்ளியெழுச் சிக்கும் விரிவுரையாற்றினார்கள். அக்காலத்தே மனத்திடை பதிந்த பொருள்கள் பின்னர்ப் பல சைவப் பெரியார்கள் பேச்சுக்களால் வளர்ந்துருப்பெற்றன. இறுதியாக முது பெரும் புலவர் திரு. மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் இயற்றிய திருவெம் பாவைக் கதிர்மணி விளக்கப் பேருரை மிகுதியும் விளக்கத் தைத் தந்தது. இங்ஙனமாகவே தெளிந்த பொருள்களை நூல் வடிவமாக அமைத்திடல் வேண்டுமென்று சில அன்பர் கள் விழைந்தனர். பன்னெடுங்காலமாக பற்பல இடை யூறுகளால் இந்நூலை வெளியிட இயலாது வாளா விருந் தனன். இரண்டாண்டுகளுக்குமுன் ஒரு துணிவு திரு வருளால் தோன்றியது. சைவ சித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழா 1953-ல் சென்னையில் இலங்கை வழக்கறிஞர் சிவத்திரு. வட்டுக்கோட்டை - நாகலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்தது. அவ்விழாவில் எனக்குத் "திருவெம் பாவை" என்னும் பொருள் அமைத்திருந்தனர். அதுபற்றி

என்னுளத்திடை சேமித்துத் தெளிந்த பொருளை விரிவுரை செய்தேன்., தலைவரவர்கள் முடிவுரையில் பாராட்டியதனைக் கேட்டு ஊக்கமுற்றேன். அவ்வாண்டில் பிரம்பைச் செம்பியம் சுந்தரவிநாயகர் சபையிலும், 1954 ஆண்டில் சென்னை நகராண்மைக்கழகத்துக் கமிஷனர் உயர்திரு. V.N. சுப்பராய முதலியார், பி. ஏ., அவர்கள் தலைமையில் சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையிலும் இவ்விரு நூல்களைப் பற்றி விரிவுரை நிகழ்த்தினேன். பேரன்பர்கள் பலருமீண்டிப் போற்றியது கருதி இந்நூலை யெழுதி எனது ஆப்த நண்பரும், சிவநேயச் செல்வரும் ஆகிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல். அவர்கள் பார்வைக்கனுப்பினேன். அவர்களும் இசைந்து பார்வையிட்டுச் சில கருத்துக்களை நீக்கிச் சுருங்கிய முறையில் எழுதி அச்சிடுதல் நலமென்றறிவித்தார்கள். தாமும் திருவாளர் - மகாவித்வான் - திருமயிலை - தணிகாசல முதலியார் அவர்கள்பால் தம் தந்தையார் பாடங்கேட்டுக் குறித்து வைத்த சில குறிப்புக்களை உதவினார்கள். விரும்பிய வண்ணம் சுருக்கி எழுதியது இந்நூல் வடிவிற்றாயது. இதனை யச்சிடுதற்கு அவர்களையே வேண்டியபோது சமாஜ ஆட்சிக் குழுவினரையணுகி இந்நூலினைச் சமாஜப் பொன் விழா மலராக அச்சிட வாணைபெற்றார்கள். பின்னும் இவ்வாண்டு சமாஜப் பொன் விழாவைச் சிதம்பரத்தில் நடத்தித் தர இயைந்த சிவபுண்ணியச் சீலர்களும் தில்லைச் சிற்றம்பலக் கூத்தருக்குத் திருக்குட முழுக்கு விழாச் சிறப்பைச் செய்து பெரும்பேறு பெற்றவர்களுமாகிய சைவத் திருவாளர்கள் ஆடூர் - இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள், சிதம்பரம் இரத்தினசாமி செட்டியார் அவர்கள் ஆகிய இருவரது பொருளுதவி பெற்றனர். இவ்வாறாக இந்நூல் வெளியீடு உறுதி பெற்று இறைவன்றிருவளால் இன்று வெளியிடப்

பெறுகிறது. இதனை அன்பரும் புலவரும் ஏற்றுப் பிழை காணின் பொறுத்தருளுமாறு வேண்டுவன்.

அல்லலிலும் அருளே புரிபவனாகும் இறைவன் தோன்றாத் துணையாயிருந்து இந்நூலாகிய மணிவாசகத்திற்கு உரையெழுதும் உணர்ச்சியைக் கூட்டி உணர்த்தி முற்று வித்தமைக்கு அவனது பொன்னார் திருவடிக் கமலங்களுக்கு வணக்கம் என்றென்றும் செய்யக் கடமையுடையேன். பெருந்துணையாய் நின்று மேல்விரித்த வண்ணம் உதவிபுரிந்த திரு. ம. பா. முதலியார் அவர்கட்கும், பொன் விழா மலராக அச்சிட ஏற்றுக்கொண்ட சைவசித்தாந்த மகா சமாஜத்தின ருக்கும், பொருளுதவி புரிந்த பெருங்கொடையாளர்கள் திரு. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கட்கும், திரு. இரத்தினசாமி செட்டியார் அவர்கட்கும், இந்நூலினை அழகுபெற விரைவில் அச்சிட்டுதவிய அன்புகெழுமிய சாது அச்சுக்கூடத்தினருக் கும் எனது மனமார்ந்த நன்றி யுரியதாகுக. என்றும் இன்பம் பெருகுவதாக. சைவநீதி எங்குமோங்குக.

"திருவதிகை"
167, பெரியகூடல்,
ஷெனாய் நகர், சென்னை-30

ரா. சண்முகசுந்தரன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	அணிந்துரை	...	iii
2.	முன்னுரை	...	xi
3.	பாட்டு முதற்குறிப்பகராதி	...	xvi
4.	பிழைதிருத்தம்	...	xvi
5.	திருவெம்பாவை	...	1
6.	திருப்பள்ளியெழுச்சி	...	113
7.	மேற்கோள் நூலகராதி	...	155
8.	மேற்கோள் முதற்குறிப்பகராதி	...	157

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
திருவெம்பாவை		மானே	39
		முத்தன்ன	25
அண்ணாமலை	98	முன்னி	90
அன்னே	43	முன்னை	52
ஆதியுமந்தமும்	13	மொய்யார்	64
ஆர்த்த	68	**திருப்பள்ளியெழுச்சி**	
உங்கையிற்	103		
ஒண்ணித்தில	30	அதுபழச்	142
ஓரொரு	86	அருண	123
காதார்	80	இன்னிசை	130
கோழி	46	கூவின	127
செங்கணவன்	95	பப்பற	138
பாசம்பரஞ்சோதி	21	புவனியிற்	153
பாதாள	57	பூதங்கடோறு	135
பைங்குவளைக்	74	போற்றி	119
போற்றி	108	முந்திய	147
மாலறியா	35	விண்ணகத்தே	150

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
11	30	பலப்பிரமதமனி	பலப்பிரமதனி
20	23	இத்திருப்பாடில்	இத்திருப்பாட்டில்.
31	10	ஓகாரம்	ஏகாரம்
49	15	வாலவெண்	வால்வெண்
57	10	தென்ஞெடா	தேன்ஞெடா
92	2	பசுந்து	பசந்து

உ

சிவமயம்

திருவெம்பாவை உரை

தோற்றுவாய்

திருவாதவூரர் அருளிய திருவாசகத்துள் திருவெம்பாவை என்னும் இந்நூல் ஒரு பகுதியாகும். திருவாசகத்துள் பெரும்பாலும் ஒவ்வோர் பகுதிக்கும் அப்பகுதியினுள்ள பாட்டுக்களின் இறுதித் தொடரே தலைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அங்ஙனமே இப்பகுதியிலுள்ள இருபது பாட்டிற்குமுள்ள இறுதித் தொடராகும் எம்பாவாயென்பது திருவெம்பாவையென தலைப்பாக நின்றது. திரு என்பது இந்நூல் இறைதொடர்புடைய அருணூலாதலின் மங்கல அடைமொழியாகச் சேர்க்கப்பட்டது. இது மகளிர் பலரும் கூறிய கூற்றாக அமைந்ததனால் அவர்கள் தம்மை எழிலுடைய பெண்ணே என விளித்துக்கொண்டனரென்க.

இத்தகைய பாவைப் பிரபந்தங்களைப் பண்டைக் காலத்தில் செந்தமிழகத்துள் இயற்றுவதுண்டு. தொல்காப்பியப் பொருளதிகாரம் 461 – சூத்திரத்திற்கு உரையியற்றிய பேராசிரியர் 'சிறுபான்மை பாவைப் பாட்டும் அம்மானைப் பாட்டும் முதலாயின நான்கடியின் இகந்துவருவனவாயின' எனக் கூறியவாற்ருன், பாவைப் பாட்டிற்கு இலக்கணம் குறிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொருளாய் விளங்குவது ஐந்தாண்டு முதல் ஒன்பதின்காறுமுள்ள மகளிர் நோன்பு பற்றிப் பனிநீராடி, நாட்டிற்கு நன்மழை பெய்யுமாறும்

தாங்கள் நற்கணவர் பெறுமாறும் வேண்டுதலே யாகும். பிங்கலந்தையுள் பெண்பாற்பிள்ளைப்பாட்டி னுட்பொருள் குறிக்க நின்ற சூத்திரம், "ஐந்தின்முதலா வொன்பதின் காறும், ஐங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும், பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்" என்ற வடிகளால் குறிப்பிட்டமையோர்க. "வெம்பாதாக வியனிலவரைப் பென, வம்பாவாடலினுய் தொடிக்கன்னியர்" எனவரும் பரிபாடல் (11 - 80, 81) அடிகளால் மழை வேட்டலைக் குறித்தது பாவைப் பாட்டு என்றறியலாகும். சங்க நூல்கள் இந்நோன்பினை மார்கழி நீராடல் என்று குறியாது தைந்நீராடல் என்றுரைப்பன. அது பூர்ணிமாந்தம் எனும் முறைப்படி மார்கழித் திங்கள் பௌர்ணமியன்று முடிந்து தைத்திங்கள் பிறந்ததென்று கொண்ட கொள்கையினு லாகுமென்பது முதுபெரும் புலவர்கள் கருத்து. எனவே சங்க நூல்களும் இம் மார்கழி நீராடலையே உரைத்தன வெனக் கொள்ளக் கடவது. சங்கநூல்களுள் இந்நீராடலைப் பற்றியன இங்குத் தருகின்றும்.

பரிபாடல்

கனைக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பா தாகவி யனிலவ ரைப்பென
வம்பா வாடலினுய் தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியி
னூதை யூர்தர வுறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்

றையன் மகளி ரீரணி புலர்த்தர
வைகய நினக்கு மடைவாய்த் தன்று
மையாட லாடன் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பின வரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந் நீராடுத
னீயு ரைத்தி வையை நதி —பாடல் - 11 - 74 - 92

கலித்தொகை

வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீராடிய தவந்தலைப் படுவாயோ
—குறிஞ்சி - 23 - 12 - 13

ஐங்குறுநூறு

நறுவீயைம் பான்மகளி ராடுந்
தை இத் தண்கயம் போல —புலவி விராயப்பத்து - 4

நற்றிணை

வான்பெய னனைந்த புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையின் — 22

இங்ஙனங் குறித்த தைந்நீராடல் என்பது மார்கழி நோன்பாகிய மார்கழி நீராடலேயாம். நீராடுதலும் தவமெனக் கருதப்படும். அமாந்தம் முறைப்படி அமாவாசையன்று தொடங்கும் மார்கழித் திங்களில் நிறைமதி கூடிய திருவாதிரை நாள் இறுதியாகக் கொண்டு பத்து நாட்களில் இந் நீராடல் நோன்பு நிகழ்ந்ததென் றுணரலாகும். இந் நோன்பு வேத விதிப்படியின்றி ஆன்றோர் அநுட்டானப்படி நிகழ்வது. பெரியவாச்சான் பிள்ளை சிஷ்டாசாரஸித்தம் என்பர். "மேலையார் செய்வனகள்" (திருப்பாவை) என்று சூடிக்கொடுத்த நாச்சியார் திருவாக்கும் அதனையே வலியுறுத்தும். இம் மார்கழி நோன்பு திருவாதிரைக்குரிய

இறைவனது விழா என்றுரைப்பர் பரிமேலழகர். இந் நோன்பிற்கு மூலமான வரலாற்றினல் இது தேவியின் பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டெனை அறியப் படுகின் றது. திருப்பாவைக்கு அருளிய வியாக்கியான அவதாரிகை யில் பெரியவாச்சான் பிள்ளை "கோகுலத்துள்ள ஆயர்கள் மழை பெய்யாக் குறையை நீக்கவேண்டிக் கண்ணனைத் தலைமையாக நியமித்துத் தங்கள் பெண்களை மார்கழி நோன்பு நோற்கச் சொல்ல, அவர்கள் அதற்கிசைந்து பெருமானையும், தோழிமார்களையும் அதிகாலையில் துயி லுணர்த்தி அழைத்துக்கொண்டு, யமுனா நதியில் மார்கழி நீராடி நோற்று, கண்ணபிரானை நாயகனாகப்பெறும் தங்கள் மனோரதத்தை அடையப் பெற்றார்கள்" எனக் குறித்துள் ளனர். இந்த வரலாறு ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம் 22-ம் அத்யாயத்துள் விளக்கப்பட்டுள்ளது. அதனைச் "செந்தமிழ்" எனும் சஞ்சிகையுள் பேராசிரியர், மு. இராக வையங்கார் அவர்கள் மொழிபெயர்த்து அச்சிட்டதனை இவண் தருகின்றோம்.

"அரசனே, கோகுலத்துள்ள பெண்கள் ஏமந்த ருது வின் முதல் மாதத்தில் (மார்கழி) காத்யாயனீ பூசையாகிய விரதத்தை தொடங்கி ஹவிஸ்ஸைப் புஜித்துக்கொண்டு அதனை நடத்தி வந்தார்கள். அருணோதயத்தில் அவர்கள் எழுந்திருந்து யமுனா நதியில் ஸ்நானம் பண்ணி ஈர நுண் மணலால் காத்யாயனீ தேவியின் உருவத்தைச் சமைத்துச் சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் இவற்றாலும் சிறந்த நைவேத்யங்களாலும் அத்தேவியைப் பூஜித்தனர். "காத் யாயனீ! ஏ! மகாமாயே! மகாயோகினி! ஈசுவரீ! உன்னை வணங்குகின்றோம். எங்களுக்கு நந்தகோபர் மைந்தனாகிய கண்ணனை நாயகனாக அருள்வீராக" என்ற இந்த மந் திரத்தை ஜபித்தவர்களாய் அவர்கள் கண்ணனைத் தியா னித்துக்கொண்டு ஒருமாச காலம் பூஜைசெய்து விரதத்தை விடாமல் நடத்தி வந்தனர். அக்கோபகன்னியர் ஒருநாள்

யமுனா நதியில் ஸ்நானஞ் செய்வதற்காக அருணோதயத்தில் எழுந்திருந்து அவரவருடைய தோழிமார்களின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு ஒருவர்க்கொருவர் கையைக் கோத்துக் கொண்டும், கிருஷ்ண சரிதங்களைப் பாடிக்கொண்டும் நடந்து சென்றனர். அப்பெண்கள் யமுனா நதியின் ஒரு பக்கஞ் சேர்ந்து, அவ்விடத்தே வழக்கப்படி தங்கள் ஆடைகளை அவிழ்த்து வைத்துவிட்டுக் கண்ணன் சரித்திரங்களைக் கானஞ் செய்துகொண்டு நீரில் விளையாடுவராயினர். பரம யோகிகளுக்கும் யோகியும் ஸர்வஞ்ஞனுமாகிய கண்ண பிரான், கோபகன்னியர் அங்ஙனம் நீர் விளையாட்டு நிகழ்த்துவதறிந்து, அப்பெண்களின் விரத பலத்தை அளிப்பதற்காகத் தம் நண்பர்கள் சூழ அவ்விடஞ் சென்றார்." இவ் வரலாறு ஆரியப்ப புலவர் தாமியற்றிய தமிழ்ப் பாகவதம்-பத்தாங்கந்தம் 9-ம் அத்யாயத்துள்,

"இன்னதண் பனிப்பருவ நல்லிளநரு ஒழுகும்
கன்னியந் தழாய்க் கண்ணனெனங் கணவனுகென்ன
அன்னமென் னடையாயர் தங்கன்னியர் நோற்றார்
மன்னுமெம் பனிமால்வரைக் கன்னியைத் தொழுதே"

"பனிநிலாக் கதிர்பரப்பிய முத்தவெண் மணலால்
பனிவரைக் கொடிதிரு வுருப்பாற் படவகுத்துப்
பனிமலர்த் தொடைசூடியும் பரவியு நோற்றுப்
பனியிறப் பினிற்படர் புனலாடுவான் படர்ந்தார்"

எனவரும் செய்யுட்களில் குறிக்கப்படுகிறது. இப்பாகவத வரலாற்றினால் இவ்விரதம் பனிமால்வரைக் கன்னியாகிய உமாதேவியாரைப் பற்றியதாகும். எனவே பண்டைக் காலத்தில் செந்தமிழகத்தில் கன்னியர்கள் தாங்கள் நற் கணவர்களைப் பெறுமாறும், நாட்டினில் மழை பெய்யுமாறும் மார்கழித் திங்களில் வைகறைப் போதில் நீராடி இம்மார்கழி நோன்பினைக் காத்தனரென்ப.

இற்றைக் காலத்தில் இந்நோன்பினைத் தமிழ் நாட்டில் கன்னியர்கள் கொண்டாடுவதாகக் காணப்படவில்லை. மலையாளத்தில் திருவாதிரை விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. இதன் விரிவு கோபால பணிக்கர் எழுதிய 'மலையாளமும் அதன்வாசிகளும்' என்னும் நூலினுட் காண்க. மார்கழித் திங்களில் திருவாதிரை நாள் இறுதியாகப் பத்து நாட்களிலும் வைகறைப் போதில் மலையாளப் பெண்கள் நீராடுவதும் பாடுவதுமாக விழாக் கொண்டாடுகின்றனர். நீராடுங்கால் அவர்கள் தண்ணீரைத் தட்டுவதனுல் ஒருவகையான ஒலியை உண்டாக்குகின்றனர். இவ்வொலியை அவர்கள் இடக்கையை மூடித் தண்ணீர் மட்டத்திற்குக் கீழே ஜலத்தில் அமிழ்த்திக் கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்ப்பாக அடித்து உண்டாக்குகின்றனர். பாடுதல் முடியும் வரை இவ்வொலி தாளவொத்தாக அவர்களால் நிகழ்த்தப்பெறும் என்ப.

இனித் தமிழ் மொழியில் பாவைப் பிரபந்தங்கள் ஐந்துள. அவை (1) மணிவாசகர் அருளிய திருவெம்பாவை, (2) ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை, (3) சமண முனிவர் அருளிய பாவை, (4) தத்துவராய சுவாமிகள் அருளிய பாவை இரண்டு என்பன. நான்காவது குறிக்கப் பட்ட பாவைகள் இரண்டும் பாடுதுறையுள் உள்ளன. அவை வேதாந்த பரமாவன. சமண முனிவர் அருளிய பாவை முழுநூல் கிடைத்திலது. அதனுட் பாட்டொன்று யாப்பருங்கலவிருத்தியுள் 93-ம் சூத்திர வுரையில்,

"கோழியுங் கூவின குக்கி லழைத்தன
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவனடி யேத்திக்
கூழை நனையக் குடைந்து குளிர்புனல்
ஊழியுண் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்"

என அவிநாயனுரால் காட்டப்பட்டுள்ளது. இரண்டாவ

தாகக் குறித்த திருப்பாவை என்பது, வைணவர்களால் பெரிதும் போற்றப்படுவது. இது பாகவதத்துள் கூறிய வரலாற்றினை யொட்டி வருவது. கண்ணனை நாயகனாகப் பெறவேண்டும் என்ற வேட்கையும், நாடு செழிக்க மழை வேண்டும் என்ற விழைவும், ஆக்கள் விருத்தியடைய வேண்டும் என்ற விருப்பமும் தன்னகத்தே கொண்டு மிளிர்வது இந்நூல். திருப்பாவையில் பாவையமைத்து வழிபாடு செய்யுமுறைமை குறிப்பிடப்படுவதனால் அது காத்யாயினி விரதமொட்டிய தெனலாகும்.

இனித் திருவாதவூரரருளிய திருவெம்பாவை பொது வாக பாவைப் பாட்டிலக்கணத்தை யொட்டி வருவதாகும். இதன் சிறப்பைப் பின்னர்க் காட்டுதும். இப் பிரபந்தம் திருப்பெருந்துறையில் அருளப்பட்டது என திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம் குறிக்கும். திருவாத வூரடிகள் புராணம் அருளிய கடவுண்மா முனிவர் திருவண்ணாமலையி லருளியதாக அறிவிக்கின்றனர். இந் நூலில், அண்ணாமலையா னடிக்கமலம் சென்றிறைஞ்சும் எனவும், மாலறியா நான் முகனுங் காணாமலையினை யென வும் வருமடிகளால் திருவண்ணாமலை என்பது தான் ஏற்றுக்கொள்ளப்படுவது. இத்திருவெம்பாவை பாடிய காலம் மார்கழித்திங்களென்றும் அத்திங்களில் திருவாத வூரர் திருவண்ணாமலையி லிருந்தனரென்றும் மேற்கூறிய புராணம் குறிக்கும். திருவாதவூரர் இடைவிடாது சித்தத் தைச் சிவன்பாலேவைத்தவராதலின் தாம் காணும் காட்சிகளனைத்தையும் கடவுள் பரமாகவே பாடுமியல் பினர். திருவாசகத்துள் திருவம்மானை, குயிற்பத்து, முதலியன இதனை விளக்கும். எடுத்துக்காட்டாக தில்லை யில் ஒரு சோலையில் மகளிர் தோணோக்கம் ஆடுங்காலத்து அவர் அறிவும் மானமும் இழந்தவர் போலிருத்தலும் கடவுணிலையுள்ளார் தங்கள் உலகாபிமானம் மறந்தவ ராயும், தற்போதமிழந்தவராயும் ஆனந்தத்திற்றிளைத்து

நின்றமைக்கொப்பாக வைத்துக் குறிப்பாக அடிகள் பாடியது இன்புறப்பாலதாம். அத்திருப்பாட்டு,

மானமழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந்தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோ
மானந்தக்கூத்த னருள்பெறினு மவ்வணமே
யானந்தமாகி நின்றூடாமோ தோணோக்கம்.

—திருத்தோணோக்கம் - 8

எனவரும். அங்ஙனம் அடிகள் திருவண்ணாமலையிலிருந்த போது மார்கழித்திங்களில் திருவாதிரைக்கு முந்தின நாட்களில் வைகறையில் பெண்கள் ஒருவரை யொருவர் அவரவர் வீடுதோறுஞ் சென்று சென்று எழுப்பிக்கொண்டு நீராடப்போவது கண்டார். அக்காட்சியின் பயனாக விளைந்தது திருவெம்பாவை என்னும் இவ்வருணூல். கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்துள்,

மாதர்கொண் மாதரெல்லா மார்கழித் திங்கடன்னில்
ஆதிரைநாண் முன்னீரைந் தாகியதினங் கடம்மின்
மேதகும னைகடோறு மழைத்திருள் விடிவதான
போதிவர்தம் மிற்கூடிப் புனற்றடமா டல்செய்வார்.

—திருவம்பலச்சருக்கம் - 384

எனவும்.

அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி

—திருவம்பலச்சருக்கம் - 385

எனவும் அருளியவாறறிக. கடவுள் பரமாகப்பாடுஞ் சிறப்புடையார் அடிகளாதலினால் ஆன்றோ ரொருவர் திருவாசகத்துள் ஒவ்வோர் பகுதிக்கும் இறை தொடர்புடைய தலைப்பினை அமைத்தனர். திருவெம்பாவைக்கு அவர் குறித்தது "சத்தியை வியந்தது" என்பது. அடிகள்

சத்தியை இந்நூலினுள் எங்கள் பிராட்டி யெனவும், பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளை யெனவும், அவணமக்குமுன் சுரக்குமின்னருளே யெனவும்,கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி யெனவும் பாராட்டிய தறிக. இருபது பாட்டுக்களுடைய இவ்வருணூலில் ஏகதேசமாக நான்கு இடங்களில் குறிப்பதறிந்து பின்னர் வந்த அருட்புலவர்கள், இந்நூலினை ஆராய்ந்தாராய் இது பராசத்தி வழித்தாய் வந்த பல சத்திகள் ஒருங்கு கூடி பிரபஞ்சகாரியத்திற்கு ஒருப்பட்டாராய் தம்முள் ஒருவரை யொருவர் எழுப்பிக்கொண்டு தூய்மை செய்துகொள்ள பொய்கைக்குப் போகும் வழியினும் பொய்கையினும் இறைவி இறைவன் புகழ்களைப் பாடினர் என்று துணிந்தனர். அது கருதியே 1871ம் ஆண்டில் அச்சிட்ட திருவாசகத்துள் அஷ்டாவதானம். புரசை, காஞ்சி. சபாபதி முதலியார் இப்பகுதிக்குத் தோற்றுவாய் அமைத்து அதனுள் நவசத்திகள் ஒருவரை யொருவர் எழுப்பிக் கொண்டு நீராடச்சென்றமை முதன் முதலாக வெளிப்படுத்தினர். அதனையே மேற்கொண்டு 1897ம் ஆண்டில் ஊ. புஷ்பரதசெட்டி கம்பெனியாராலும், 1900ல் திருமயிலை. செந்தில்வேலு முதலியாராலும் திருவாசகம் பதிப்பிக்கப் பெற்றது. சத்தியை வியந்ததென்பது நவசத்தியைக் குறிக்குமோ என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். சத்திகள் என்று பன்மையாகக் குறியாது, சத்தி என்று ஒருமையாகக் குறித்ததனால் நவசத்திகளைக் குறித்ததல்ல என்பர். "சத்தியாய் விந்து சத்தியாய் மனோன் மனிதானுகி. ஒத்துறு மகேசையாகி உமைதிரு வாணியாகி, வைத்துறும் சிவாதிக்கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகும், எத்திற நின்றுனீச னத்திறமவளும் நிற்பள்" எனவரும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தான் சத்திகள் பலவாகப் பேசப்படினும் சத்தி யொன்றே என்பது கருதத்தக்கது. எனவே சத்தி என்று ஒருமையாய்க்கூறி நவசத்திகளைக் குறித்தமை இழுக்

கன்று எனக்கொள்க. சைவாகமங்களுள்ளும் சைவசாத்திரங்களுள்ளும் பல சத்திகள் கூறப்படுவதாக, நவசத்திகளையே இந்நூலுட் பொருத்தக் கொண்டதென்னெனின் இந்நூலுள் முதலெட்டுத் திரும்பாட்டினுள் உறக்கத்தினின்றும் நீங்குவாய் என ஓதினமையான் அங்ஙனம் விரும்ப எண்தோழியராகும் எண்வகைச் சத்திகளைக் குறிக்க இன்றியமையாததாயிற்று. எஞ்சியுள்ள ஒன்பதாஞ்சத்தியே முதலில் பராசத்தியால் பிரேரிக்கப்படுவதாயிற்று. மேலும் இறைவன், உயிர், கதிரவன், திங்கள், வான், வளி, நெருப்பு, நீர், நிலமென எண்வகையாய்ப் புணர்ந்து நிற்பவனாதலின் அவ்வடிவங்களில் சத்திகளெண்மர் விளங்குதல் வேண்டும். இச்சத்திகளை இயக்குதற்குத் தன்பால் நீக்கமற நின்ற பராசத்தியால் பிரேரிக்கப்படும் மற்றொரு சத்தியுண்மை பெறப்படும். எனவே எண்வகை வடிவிற்றாய உலக காரியம் தொடங்குவதற்கு ஒன்பது சத்திகள் துயிலுணர்ந்து நீராடிப் புகழ் பாடிய நிலையை நினைந்து, மகளிர் வைகறையில் துயிலுணர்ந்து நீராடிப் பாடிய காட்சியைக் கண்டபடி திருவெம்பாவை அருளினரென்பது புலப்படுக்கபடுவதாயிற்று. நவசத்திகள் — மனோன்மனீ, சர்வபூததமனீ, பலப்பிரமதனீ, பலவிகரணீ, கலவிகரணீ, காளீ, இரௌத்திரி, சேட்டை, வாமை என்பவராவர். இவர்களுள் சர்வபூததமனீ உயிர்கள் பாலுள்ள சத்தியாகும். உயிர்களுடைய புண்ணிய பாபங்களை அடக்குவது இச்சத்தியாரது தொழிலாகும். பலப்பிரமதனீ கதிரவன்பாலுள்ள சத்தியாய்ப் பலத்தைக் கெடுக்கும் தொழிலுடையது. பலவிகரணீ சந்திரன்பால் சத்தியாய்ப் பயனை மிகுதியாகத் தருமியல்புடையது. கலவிகரணீ ஆகாசத்தினுள்ள சத்தியாய் எவற்றிற்குமிடங்கொடுத்து நிற்கும். வாயுவினுள் காளீ விளங்கி பிராணமயமா யிருக்கும். நெருப்பினுள் இரௌத்திரி விளங்கிச் சூட்டினைத் தரும். நீரினில் சேட்டை விளங்கிக்

குளிர்ச்சியைத் தரும். வாமை மண்ணில் விளங்கி ஐந்து குணங்களுமுடையதா யிருக்கும். இவை சித்தாந்த சாராவளியில் குறிக்கப்பட்டன. இவ்வெண் சத்திகளும் எண் வகை உருத்திரபேதங்களாய சத்தர்களிடத்தில் சத்தியாய் அமைவர். மண்ணில் விளங்கும் சர்வரிடத்து வாமை நிற்கும். அப்புமூர்த்தியாகும் பவரிடத்துச் சேட்டையும், தேயு மூர்த்தியாகும் உருத்திரரிடத்து இரௌத்திரியும், வாயு மூர்த்தியாகும் உக்கிரரிடத்து காளியும், ஆகாய மூர்த்தியாகிய பீமரிடத்துக் கலவிகரணியும், திங்கள் மூர்த்தியாகிய ஈசானரிடத்துப் பலவிகரணியும், சூரிய மூர்த்தியாகிய மஹாதேவரிடத்துப் பலப்பிரமதனியும், ஆன்மமூர்த்தியாகிய பசுபதியினிடத்துச் சர்வபூததமனியும் விளங்குவர். இஃது அபிதான சிந்தாமணியிலுரைக்கப் படுவதறிக. இவ்வெண் சத்திகளுக்குத் தலையாயவள் மனோன்மனி என்னும் சத்தியாகும். இச்சத்தியினை "மனோன்மனியைப்பெற்ற தாயிலானை" (தனித்திருக் குறுந்தொகை-1) எனத் திருநாவுக்கரசு அடிகளும், "சத்தி யுளாதியோர் தையல் பங்கன்" (திருவிராமனதீச்சரம் பண் – வியாழக்குறிஞ்சி – 4) எனத் திருஞான சம்பந்தரும் குறித்தவாறு காண்க. சிவபெருமானது விட்டு நீங்காப் பராசத்தியால் பிரேரிப்பிக்க நீங்குவதாகவுள்ள சத்தியார் இம் மனோன்மனியாகும். பக்குவர்களான உயிர்களை மலத்தை விட்டு நீக்கிச் சிவத்தன்மையோடு சேர்ப்பித்தல் இச்சத்தியாரது பணியாம்.

இனித் திருவெம்பாவையில் முதற்றிருப்பாட்டில் இச் சத்தியார் பாடி வந்ததும் கேட்ட பக்குவப்பட்ட ஒருத்தி தன்னை மறந்து பரவசமாயினள் என்பது இவாது பேராற்றலை விளக்கும். மேலும், வாட்டடங்கண்மாதே என்பது சர்வபூததமனியையும், இரண்டாந்திருப்பாட்டில் நேரிழையாய் என்பது பலப்பிரமதமனியையும், மூன்றாந் திருப்பாட்டில் முத்தன்ன வெண்ணகையாய் என்பது

பலவிகரணியையும், நான்காந் திருப்பாட்டில் ஒண்ணித்தில நகையாய் என்பது கல்விகரணியையும், ஐந்தாந்திருப் பாட்டில் ஏலக்குழலி என்பது காளியையும், ஆருந்திருப் பாட்டில் மானே என்பது இரௌத்திரியையும், ஏழாந் திருப்பாட்டில் அன்னே என்பது சேட்டையையும், எட்டாந் திருப்பாட்டில் விளியொன்று மில்லாவிடினும் மண்ணுலகில் நிகழும் நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டமை யான் வாமையையும் குறித்தவாறறிக. இச்சத்திகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நீராடுங்கால் உலகவர் விழைதல் போல் பாவைப்பாட்டிற்கு இலக்கணவரையறை யொத்த வண்ணம் மழை வேட்டலையும் நற்கணவர் பெறுமாறு விழைதலையும் அமைத்து இறைவி இறைவன் புகழைப் பாடினரென்க. திருவாதவூரடிகளார் இங்ஙனம் சத்திகள் துயிலுணர்ந்து நீங்கி, இறைவன் இயற்றும் ஐந்தொழில் களுக்கு ஒருப்பட்டனராய் மார்கழி நீராடலை முடித்தன ரென்பதே கருத்தாகக் கொண்டனர் போலும்.

இனி, பரசிவத்தின்பால் நீங்காப்பெருமை வாய்ந்த பராசத்தி திருப்பள்ளி யெழுச்சியால் துயிலுணர்த்திய வுடன் மனோன்மனி சத்தியைப் பிரேரிப்பிக்க அச்சத்தியார் சர்வ பூததமனியாரை எழுப்பமுயல்வதே திருவெம்பாவை யின் தொடக்கமாகும் என்ப.

உ

சிவமயம்

நூல்

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ஙன்
ஏதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (க)

(**இதன் பொருள்**) வாள் தடம் கண் மாதே - ஒளியினை யுடையதும் அகன்றதுமான கண்ணையுடைய பெண்ணே! ஆதி உம் அந்தம் உம் இல்லா அரும் பெரும் சோதி ஐ - தோற்றமுமீறுமில்லாத அரிய பேரொளியானவனை, யாம் - நாம், பாடக்கேட்டேயும் - பாடுதலைக்கேட்டும், வளருதியோ - துயில்கின்றனையோ, (இங்ஙனம் துயில் நீங்காமையால்) நின்செவி வன்செவியோ - உனது செவி மிகுதியும் செவிடுபட்டதோ, (மற்றொருத்தி) மாதேவன் வார்கழல்கள் - பெரியதேவனது நெடிய வீரக்கழலணிந்த திருவடிகளை, (யான்) வாழ்த்திய - நினது வாயிலினின்றும் போற்றிய, வாழ்த்தொலி - புகழ்ப்பாடல், வீதிவாய் போய் கேட்டலும் ஏ - வீதியின் வழியாய்ச்சென்று கேட்கப்பட்ட அளவிலே, விம்மி விம்மி - கண்ணீர் வாரத் தேம்பித் தேம்பியழுது, மெய் மறந்து - உடலை மறந்தவளாய், போது ஆர் அமளி இன் மேல் நின்றும் புரண்டு - மலர்கள் பொருந்திய பஞ்சணையின் மேலாக நின்றும் உருண்டும் வீழ்ந்தவளாய், இங்ஙன் ஏதேனும் ஆகாள் கிடந்தாள் - இந்நிலத்து

லொன்றிற்கு முதவாதவளாய்க் கிடக்கலுற்றாள், எம் தோழி எனக்கினிய தோழியே, ஈது என்னே பரிசு-ஈது என்ன உன் தன்மை, என்னே - இவ்வதிசயம் என்னென்பேன், தான், ஏ அசைகள்.

ஏல், ஓர், எம்பாவாய் என்பவை இந்நூல் இருபது பாடல்களினும் இறுதியில் வருவன. பாவைப்பாட்டிற்கு இலக்கணமா யிறுதியில் வருந்தொடர். திருப்பாவைக்கு வியாக்கியான மருளிய பெரியவாச்சான் பிள்ளை அவற்றை அசைகளாகக் கொண்டனர். ஈண்டும் அவைகளைப் பொருள் சிறவாமையான் அசைகளாகக் கொள்க.

(விளக்கம்) இத்திருவெம்பாவையைத் திருவாதவூரடிகள், திருவண்ணுமலையில் வைகறையில் கன்னியர்கள் ஒருவரையொருவர் வீடுதோறுஞ் சென்று எழுப்பிக்கொண்டு நீராடற்குச் சென்ற காட்சியினைக்கண்டு பாடினுரென்பது முன்னர்க் கூறப்பட்டது. அக்கன்னியர்கள் யாவரும் மார்கழித் திங்களில் திருவாதிரை இறுதியாகவுள்ள பத்து நாட்களும் நீராடும் விரத மேற்கொண்டன ராதலின் சிவபெருமான்மாட்டுப் பேரன்புடையா ரெனக்கொள்க. அக்கன்னியர்களுக்குள் மூத்தவள் அதிகாலை முன்னரெழுந்து தனக்கு மிக நெருங்கிய அன்புடையாளை அவள் வீடு சென்று அவளை எழுப்பிய முறை ஈண்டுக்கூறப்பட்டது. இங்ஙன மொருத்தி மற்ருெருத்தியைத் துயிலுணருமாறு செய்தல் யாதுணர்த்திய தெனின் கூறுதும். கேவலநிலையில் ஆணவமலத்தால் கட்டுண்டு இச்சை செயலறிவின்றிக் கிடக்கும் உயிர்கள் தமக்கு அருளும் வகையான் நுண்ணைந் தொழில் நடாத்தும் இறைவன் தனது அருட்சத்தியால் சிறிதே ஆணவத்தை நீக்கிக் கலை எனுங் கரணத்தால் உயிரின் செயலாற்றலை விளங்கச் செய்தலாம். பின்னும் வித்தை யெனுங் கரணத்தால் உயிரின் அறிவாற்றலை விளக்கியும், அராகத்தால் உயிரின் இச்சையாற்றலை

விளக்கியும், படைப்பெனும் உடலைக் கூட்டுதற்குத் தகுதி பெறச் செய்தலென்ப.

இனி உலகியலில் துயில்வோரைத் துயிலுணரச்செய்வார் அவரது சிறப்புக்கூறியும் பெருமைகளைப் பாராட்டியுந் துயிலுணர்த்துவது மரபு. அங்ஙனமே இக்கன்னியார் துயிலுந் தம் தோழியை வாள்தடங்கண் மாதே யென விளித்தாள். ஒளியும் அகன்ற அமைப்புமுடைய கண்ணை யுடைய பெண்ணே என்பது. இதனால் அவளது அழகு சிறப்பிக்கப்பட்டது. இஃது உயிரினது அறிவுடைமையை யும் வியாபகத் தன்மையையு முணர்த்தியவாறு. ஈண்டு இக் கன்னியருக்கு அழகு வடிவாலன்று; சித்தத்தால் நேர்ந்தது. சித்தமழகியாரென்று பின்னர் அடிகள் கூறியதறிக. சித்தத்திற்கழகு இறையன்பால் பெறப்படுவதாகும். இறையன்பிற் சிறந்தவளாதலின் அவள் தமக்கு இறைவனை நினைவூட்டுவாள் இறைவனது பொருள்சேர் புகழினைப் பாடிச்சென்றாள். இறைவன் அகவிருளை நீக்குவதற்குக் கழி பெருந் துணையாவானென்பது விளங்கச் சோதியைப் பாடி யெனவும், அச்சோதி அங்குமிங்கு மெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குவது கருதி பெருஞ்சோதி யெனவும், மேலும் புறவொளிகள் போன்று அறியும் பான்மைத் தன்றாதலின் அரும்பெருஞ்சோதி யெனவும், யாண்டும் வியாபகமாய்க் காலத்தாலும் இடத்தாலும் நீக்கமின்றி நிற்றலின் தோற்றமுமிறுதியுமாகிய ஆதியு மந்தமு மில்லா வெனவுமருளினார். திருவண்ணாமலை வரலாறு கருதி நான் முகனும் நாராயணனும் பறந்தும் இடந்தும் காணமாட்டாத் திருமுடியையும், திருவடியையுமுடைய சோதியெனக் கோடலுமாம். இங்ஙனம் இறைபெருமையை வேறொருவர் பாடாது, நின்னினும் மூத்தவளும் . நின்னன்புடைய தோழியுமாவ ளென்றுணர்த்த யாம் என்று பன்மையிற் குறித்தார். உறங்குவோரைத் துயில் நீக்கச் சிற்றோசை

யைச் செய்து உறக்கத்தினின்று மெழுப்புதல் போலச் சித்தமழகியாரைத் துயிலுணர்த்த இறைபாடல் சிறப்புடைத்தென விளக்கப் பாட வென்றார். இறைவன்பால் அன்புபெருக்க அருட்பாடல் எங்ஙனஞ் சிறந்ததெனின் பாடுவோர் தமக்குப் பாட்டின் பொருளுணர்ச்சி பெருகுவது கண்கூடு. அப்பொருளுணர்ச்சி இறைவனோ டொன்றுவிக்கு மியல்புடையது. இறைவன்றிருவுரு உள்ளத்தே எழுத அருட்பாடல்கள் சாதனமாகும். மெய்ஞ்ஞானத்தார், அருட்பாட்டுக்களை ஒப்புயர்வற்ற சாதனமென்ப. "விழுமியார்க ணின்கழல், பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே" (திருவாலவாய் - திருவிராகம் - பண் - கௌசிகம் - 1) என ஆளுடையபிள்ளையார் உணர்த்தியதறிக. அருட்பாடல்களே இறைவனோடு காதலிற்கலந்து வாழும் பண்பினை யளிக்கவல்லன என்பதனைக் காழிப் பெருந்தகையார் "நலமலி சிந்தையராகி நாமலி மாலையினாலே, கலந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலையாரே" (திருக்கற்குடி - பண் - தக்கராகம் - 6) எனப் போற்றியது காண்க. பாமாலைகள் இறைவனை மனத்தகத்தே நிறுவுவதற்குச் சிறந்த துணையாவன என்பதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "வாக்கென்னும் மாலைகொண் டுன்னையென் மனத், தார்க்கின்றேன் பரவையுண் மண்டளி யம்மானே" (திருவாரூர் பரவையுண் மண்டளி - பண் - பஞ்சமம் - 4) எனவருளியதூஉங் காண்க. இங்ஙனம் அருட்பாடல்களால் விளையும் பண்பறிந்த யாம் பாடினோம், அவைகளைக் கேட்போர்க்காகும் பயன்களை நன்கறிந்தோமாயினும் நின்பால் அந்நலங்களைக் கண்டிலமென்பார் கேட்டேயும் வளருதியோ என்றார். கேட்டேயும் என்புழி ஏ இசை நிறை: கேட்டும் என்னும் பொருண்மையுடையது. இறைவனது புகழையும் திருநாமங்களையுங் கேட்போர் தமக்கு விளையும் நலமாவது,

" வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானேயெனக் கேட்டுவேட்ட நெஞ்சாய்
பள்ளந்தாழுறு புனலிற்கீழ் மேலாகப் பதைத்துருகும் "

எனும் (திருவாசகம் - திருச்சதகம் - 21) திருப்பாட்டிற் குறித்தபடி அன்பின் பெருக்காகும். பாடல்களைக்கேட்டும் அன்பின் பெருக்குக் காணப்பெறாது பொய்யுறக்கங் கொள்வது முறையாகுமோ என்றபடி. நீ அன்புடைமை யாதலின் இந்நலங் காணப்பெறுமையான் நின்செவி செவிட்டுத்தன்மையை யடைந்ததோவென வினவுவார், வன் செவியோ நின் செவிதானென்றார். உயிர் ஆணவப் பாசத்தால் வன்மையாகக் கட்டுப்பட்ட குறிப்பைப் புலப்படுத்துவான் செவியின் மேலேற்றி வன்செவி என்றார். பொய்யுறக்கங் கொள்வார் செவியாற் கேட்டும் வன்னெஞ்சராய் இருத்தல் பற்றி உயிரினிடத்து வன்மை யறியப் படுவதாகும். அறிகருவிகள் ஐந்துனுள் செவி சிறப்புடைத் தென்பது அகவிருளைப் போக்குதற்கு ஞானமின்றியமை யாததாதலின் அது செவிவாயுணர்தல் பற்றி அறியலாகும். அருணகிரிநாதர், ' ஒழிவாயொழிவாய், மெய்வாய் விழிநாசி யொடு செவியாம், ஐவாய்வழி செலுமவா வினையே " (கந்தரநுபூதி-14) எனவருந் திருப்பாட்டில் நான்கு புலன் களினின்றும் ஒடுகொடுத்துச் செவியைப் பிரித்தோதியது செவியின் சிறப்புவிளக்குவது காண்க. அன்பரல்லாதார்க்கு விளங்குஞ் செவிட்டின் வன்மை அன்புடையாளாகிய நினக்கு வந்ததெங்ஙனென்று வியப்புறுவார் நின் செவிதா னென்றார். வளருதியோ, வன்செவியோ என்பனவற்றுள் ஓகாரம் எதிர்மறை. உறங்குங் கன்னியர் ஒருகால் என் செவி செவிட்டுத்தன்மை யுடையதன்று; இறைவன துண் மையியல்பாகும் ஆதியுமந்தமுமில்லா வரும்பெருஞ்சோதி யென்பதன் பொருளறியகில்லே னென்றிடின் இறைவன் பொதுவியல் புணர்த்துது மென மாதேவன் என்றருளின

ரென்க. தேவர்கள் பலரும் தாந்தாம் முழு முதலிறை யென்று வாதித்தும் போரிட்டும் மாதேவர் ஆகார், பற்றறுத்துப் பிறவியறுக்குந்தன்மை யவர்க்கின்மையின். மாதேவ ராகிய சிவபெருமானே மெய்த்தேவரென்பது,

அத்தேவர் தேவரவர் தேவரென் றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லா தென்பற்றற நான்பற்றி நின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ

—திருவாசகம் - திருக்கோத்தும்பி - 5

என்னுந் திருப்பாட்டில் குறித்ததுணர்க. இம்மெய்த் தேவர் திருவடிகள் அறிவுப்பொருள்களுக்கும் அறிவில் பொருள்களுக்கும் நிலைக்களமாதலின் வார்கழல்களெனவும், ஆணவத்தையடக்கல் அரிய செயலாதலின் அதனை யாற்றும் வீரங்கருதி வீரக்கழலணியப் பட்டதெனவும் அறிக. கழலணிந்த காரணம்பற்றி தானியாகு பெயராய்த் திருவடிக ளுணர்த்தப்பெற்றன. இறைவனது அறிவு, செயல் ஆற்றலாகுந் திருவடிகள் உயிர்கட்கு உறுதுணையாவன வாதலின் அவைகட்கு நன்றியறிவிப்பான் வாழ்த்திய வென்றார். அங்ஙனம் வாழ்த்துதற்குக் கருவியாகிய இசைப்பாடலின் ஒலி அக்கன்னியர் வீட்டு வாயிலினின்றும் வீதியினிடத்துச் சென்றதெனவும், ஆங்கு அதனைக் கேட்ட மற்றொருத்தி அக்கணமே கண்ணீர்வார அன்பு பெருகி அழு தனளெனவுங் குறித்தார். கேட்டலுமே என்புழி ஏகாரம் அசை. கேட்டவளவிலெனப் பொருள் படநின்றது. அவள் கேட்ட அளவில் உணர்ச்சிபெற்று அன்பின் பெருக்குடைய வளாய்ப் பரமானந்தம் மேற்கொள்ளத் தேம்பித் தேம்பி யழுதனளென்பார் விம்மி விம்மியென்றார். அத்தகைய நிலையைப் 'பரமானந்தம் மேற்கொள்ள விம்மி விம்மி நடிக்கின்றிலை' (கந்தரலங்காரம்-75) என அருணகிரிநாத ரருளியது காண்க. இங்ஙனம் விம்மியழுத அவள் ஊனைக்

காவல் கைவிட்டாளென்றுரைப்பார் மெய்ம்மறந்தென்றார். அப்பரும் 'உடம்பைத் தொலைவித் துன்பாதந் தலைவைத்த வுத்தமர்கள்' (பசுபதித்திருவிருத்தம் - 2) எனவருளிய தறிக. மெய்ம்மறந்த இவள், உடலுக்கு நலமுமின்பமுங் காண அமைத்துக்கொண்ட மலர்கள்தூவி மணநிறைந்த படுக்கை உலகியல் கட்டிற்கறிகுறியாம் என்னும் மனத்தினளாய் அப்படுக்கையினின்றும் நீங்குவாளென்பார் போதாரமளியினின்றும் புரண்டு என்றார். புரளுதல், அமளியிலின்றும் கீழே விழுந்தமை குறித்தது. உலக நெறி விட்டுச் சிவநெறிக்கு மாறியதுணர்த்தியதெனக் கொள்க. "புரண்டு வீழ்ந்து நின்பொன்மலர்ப் பதம் போற்றியென் றன்பொடு புலம்பி" (திருவாவடுதுறை - பண்-தக்கேசி-2) எனச் சுந்தரரும், "சாம்பரைப் பூசித் தரையிற் புரண்டு நின்தாள் சரணென்று ஏம்பலிப்பார் (திருவேகம்பம் - திருவிருத்தம்-8) என அப்பரும் அருளியன காண்க. புரண்டு என்பது இங்ஙன் கிடந்தாள் என்பதனோடு தொடர்ந்து முடிதலின் படுக்கையினின்றும் கீழே விழுந்து தரையிற் கிடந்தாள் எனப் புலப்படுக்கப்பட்ட படியாம். இங்ஙன் என்பது இந்நிலத்தே என்று குறித்தது. படுக்கையினின்றும் வீழ்ந்தார்க்குத் தரையாகிய நிலம் தாரகமாயினவாறுபோல உலகியலாகும் படுக்கையினின்றும் புரண்டு வீழ்ந்தவளுக்குச் சிவமாகுந்தரை தாரகமாயிற்றென்றுணர்க. "ஊசல் கயிறற்றாற்றாய் தரையே யாந்துணையான்" என்று சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்து நான்காமதிகரணத்து ஏதுவிற்குச் சிவஞானமுனிவர் தஞ் சிற்றுரையில் 'ஒருவன் ஏறியிருந்தாடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழி உதவுந் தாய்போல் ஆண்டுத்தாரகமாவது நிலனே யன்றிப் பிறிதில்லையென்னு மொப்புமையான் இனி இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையுமென மேற்கொண்டது' என விளக்கி

யருளியது முன்னுக. இவ்வாறு கீழே விழுந்தவளாய் உலகியலறிவற்றுளென வுணர்த்துவார் ஏதேனுமாகாள் என்றூர். ஏதேனுமாகாளென்றது உலகியலுக்கு உதவாத நிலைகுறித்தது. எடுத்துக்காட்டாக திருக்காளத்தி வேடராகுங் கண்ணப்பர் அரிய பேரன்பினுல் உலகிற்குதவாத நிலையைப்பெற்றது அவரதுசெயல்களாலும்,காடன்நாணன் எனும் பின் தொடர்ந்த பணியாளர்களினுரைகளாலும் திருத்தொண்டர் புராணத்திலுரைத்தவாறறிக. ஆகாள் என்பது முற்றெச்சம். இங்ஙனம் உலகுநெறி 'விட்டுச் சிவநெறியில் உறைத்து நின்றுளென்பார் கிடந்தாளென்றூர். கிடத்தல் என்பது உறுதியினுல் எதனுலும் தாக்காது அசைவற்றிருத்தலைக் குறித்தது. சிவத்தொடு ஒட்டிட்ட பண்பின் விளங்கினுளெனக் கோடலுமாம். குறுந்தொகை 370ம் பாடலில் ' கிடப்பின் ' என்றதற்கு " ஈருடலாயினும் ஒருடல் போலொன்றியும்" என விசேடமுரைத்ததூஉங் காண்க. இவ்வாறு சிவாநுபவத்திலுள்ள ஒருத்தியின் மெய் யன்பினிலையை எடுத்துக்காட்டி என்னைப்போலுங் கன்னியாய் எனக்குந்தோழியுமாகிய நீ துயிலுணராது பொய்யுறக் கங்கொண்டுகிடப்பது இழிந்ததன்றே என்பார் எந்தோழீ ஈதே பரிசு என்னே என்றூர். யான் நின்பால் நினையாத நிலை விளங்குவது அதிசயமெனக் கருதுவார் ' என்னே ' என்று வியந்தாரென்பது.

இனி, இத்திருப்பாடில் கேவல நிலையிலுள்ள உயிர் பாடிக் கேட்டும் துயிலுணராமையான் ஆணவத்தால் கட்டுண்டு இருண் மூடி இறைவனை நினையாது வாளா கிடக்குமெனவும், சுத்த நிலையிலுள்ள உயிர் இறையருட்பாடலைக் கேட்ட ஞான்றே அன்பின் பெருக்கினுல் தன்னுடலை மறந்து உலகுநெறி விட்டுச் சிவநெறி புகுந்து சிவானந்தத்தில் மூழ்கித் திளைத்துநிற்கும் பான்மையதெனவும், இடைப்பட்ட சகல நிலையிலுள்ள உயிர் விரதங்காப்பதும் ஆண்டவனை அருட்பாடல்களாற் றுதித்தும் வழிபாடு

செய்தும் புண்ணியப் பேற்றினையடைதற்கு முயலுஞ் சிறப்புடைத்தெனவும் உணர்த்தப்பட்டன. (1)

பாசம்பரஞ்சோதிக்கென்பாயிராப்பகலும்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய் (உ)

(இதன் பொருள்) நேர் இழை ஆய் - பொருந்திய அணிகலன்களை யணிந்த பெண்ணே!, இரா பகல் எப்போது நாம் பேசும்போது - இரவு பகல் எல்லாக் காலங்களிலும் நாம் உரையாடும்பொழுது, பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் - என்னன்பு மேலான ஒளிவடிவினனுக்கு என்று மொழிவாய், இப்போது - இதுபோழ்து, ஆர் அமளிக்கு ஏ நேசமும் வைத்தனை ஓ-பொருந்திய படுக்கையினிடத்தே அன்பையும் வைத்தாயோ, (என்று ஏசினவளவில், கேட்ட உறக்கத்தினின்ற கன்னியர் போந்த இருகன்னியருக்கும் மறுமாற்ற முரைப்பான்வேண்டி) நேரிழையீர் - பொருந்திய அணிகலன்களைத் தரித்த பெண்களே!, சீசி இவையும் சிலவோ - சீச்சீ உங்கள் வாயில் இங்ஙனம் ஏசுஞ்சொற்களும் சிலவுள்ளனவோ, விளையாடி ஏசும் இடம் ஈதோ - விளையாட்டாகப் பழித்துரைத்தற்கு உரிய காலம் இதுவாகுமோ, (என்று மறுத்தலும், மற்றிருவர்) விண்ணோர்கள் ஏத்துதற்கு கூசும் மலர் பாதம் - தேவர்கள் தொழுதலைக்கண்டு நாணி அருளாத தாமரைமலர் போன்ற திருவடிகளை, தந்து அருள வந்து அருளும் - அன்பர்கட்கு எளிமையில் தந்து அருளுவான் அருட்டிருமேனி கொண்டு போந்து அருளுபவனாகிய, தேசன் - ஞானாசிரியனும், சிவலோகன் - சிவலோக நாதனும், தில்லை சிற்றம்பலத்துள்

ஈசனுர்க்கு - தில்லைத் தலத்தின்கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்துளுறையும் இறைவனுமாகிய பெருமானுக்கு, அன்பு ஆர் யாம் - நாம் யாவரும் அன்புடையரல்லவா என்று நல்லுரை பகர்ந்தன ரென்றவாறு.

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் திருவாதிரை விரத மேற்கொண்ட கன்னிகை யொருத்தி தனது அன்பிற்குரிய தோழியொருத்தியை மெய்யன்பின்திற மெடுத்துக் கூறித் துயிலுணர்த்தியது அறிவித்த அடிகள், இத்திருப்பாட்டில் மற்ெறுரு தோழியை எழுப்புவான் இருவரும் அவள் வீட்டு வாயில் நண்ணினராய் அவளை விளித்தலைத் தொடங்குவார் நேரிழையாய் என்றுர். உலக கட்டிற்கேதுவாகுஞ் செல்வ மோகத்துளழுந்தியவளென்ற கருத்துபோலும். நேரிழை என்றது ஒளி சிறந்த அணிகலன்களை யணிந்திருந்தவளென்பது குறிப்பு. இங்ஙனம் விளித்த அக்கணமே எழுந்திராமையான் அவள் செயலை எள்ளிக்கூறுவார், இராப் பகல் எப்போது நாம் பேசும்போது பாசம் பரஞ்சோதிக்கென்பாய் என்றுர். " துஞ்சிருள்காலை மாலைத் தொடர்ச்சியை மறந்திராதே. (அப்பர் - திருநனிபள்ளி - திருநேரிசை - 5) எனுந்தமிழ்மோத்தின் றலைநின்றமை விளங்க இராப்பகல் எப்போது மென்றுர். எப்போதும் என்புழி உம்மை விகாரத்தாற்றெருக்கது. இக் கன்னியரனைவரும் நாளுங் கலந்து ஒருவரோ டொருவர் இறையன்பிற்பட்டுப் பேசுபவர் என்பதனை விளக்க நாம் பேசும்போ தென்றுர். இங்ஙன முரையாடுங் காலங்களிலெல்லாம் இக்கன்னிகை தனது பேரன்பு பரஞ்சோதிக்கே செலுத்தப் படுவதெனப் பன்முறையு முரைப்பளென வுணர்த்தப்பட்டது. இறைவனிடத்து அன்பு பதிந்துநிற்கும் முறைமையினையும் அது செலுத்தப்படும் முறைமையினையும்,

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரு மிளம்பிறை

துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே (271)

ஈசன் அறியும் இராப் பகலுந் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசனவந் தெம்மிடை யீட்டி நின்றான் (288)

எனவரும் திருமூலர்த் திருமந்திரங்களானறிக. பாசம் - அன்பு. அப்பேரன்பு பரஞ்சோதிக் கென்றமையின், பரஞ்சோதி என்பது சிவபரம்பெருளைக் குறித்தது. மேலைத்திருப் பாட்டில் பெருஞ்சோதி என்றது சோதியினளவு யாண்டும் வியாபகமுள்ள தென்றுணர்த்தப்பட்டது. ஈண்டுப் பரஞ்சோதி என்பது மேலான ஒளிவடிவினனென் றுணர்த்துவதறிக. பூதவொளிகட்கு உயிரின் அறிவினின்ற மயக்கமாகிய இருளைப்போக்கும் வன்மையின்மையின் அதனைப் போக்குமாற்றலையுடையது ஞானவொளி யாதலின் அதனையே மேலான ஒளியெனக் குறிப்பார் பரஞ் சோதி யென்றார். "சிந்தைதனை மயக்கந் தீர்க்கும், ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு மேழுலகுங் கடந்தண்டத் தப்பா னின்ற பேரொளியை" (கோயில் - திருத்தாண்டகம் – 10) என்பது தமிழ்மறை. அகவிருளைப் போக்கவல்ல பரஞ்சோதிக்கு நன்றிசெலுத்து முறையால் அன்புடையே னென்பார் பாசம் பரஞ்சோதிக்கென்பா யென்றார். இப்போது - இதுபோழ்து; இருகன்னியரும் மூன்றாங் கன்னியரின் வீட்டுவாயிலினில் வந்து விளித்த போது என்னும் பொருட்டு. அக்கணம் அவளிருந்த நிலை யறிவிப்பார், ஆர் அமளிக்கே நேசமும் வைத்தனையோ என்றார். ஆர் - பொருந்திய. ஏகாரம் - தேற்றம். நேசம் - அன்பு. நாளுமெந்நேரமும் என்னன்பு சிவபெருமான்பாலதே என்று கூறிய நீ இதுபோழ்து அதனைப் படுக்கையின்மீதும் செலுத்தும் முறைமையால் விளங்குவதாமென் றிகழ்ந்

தனரென்க. நேசமும் என்பதனுள் உம்மைப்பிரித்து அமளிமேற் கூட்டுக. இறைவனிடத்தே செலுத்தும் அன்பினைப் படுக்கையினிடத்தும் பூண்டனையோ என்பதுணர்த்துதலின் ஈண்டு உம்மை எச்சப்பொருட்டு. வைத்தல் - இருத்தல். இங்ஙனம் இகழ்தலும் பொறுதவுள்ளத்தினளாய அக்கன்னிகை, போந்த இருதோழியர்களை யாம் யாவரும் ஒருவருக்கொருவர் அறிவை விளக்கஞ் செய்தலே கடமையினே மாதலின், மயங்கினவென்னை விளக்கஞ் செய்தலும் நுங்கட்குக்கடமை யாவதென்றுணர்த்துவார் நேரிழையீரெனவிளித்தார். அங்ஙனங் கடமையுடைய நீங்கள் என்னை இகழ்தல் தகுதியுடைத் தன்றென்பார் சீசி என்று தானும் இகழ்ந்தார். இகழ்ந்து அவர்கட்கு உண்மையறிவிப்பார் அடியராஞர் வழுக்கியும் பழிச்சொல் கூருராதலின் உங்கள் திருவாயில் இங்ஙனம் ஏசுஞ்சொற்கள் சில போந்தன வென்னென, இருகன்னியரும் அவை விளையாடல் பற்றிக்கூறினமெனின், அங்ஙனம் பழித்து விளையாடுதற்குத் தகுதியுள்ள காலம் இதுவாகுமோ என்று மறுப்பார், விளையாடி ஏசுமிடமீதோ என்ருர். ஓ - எதிர்மறை. இங்ஙனம் அறிவுறுத்திய கன்னியர் எழுந்து வெளிப்போதலும் வாயிற்புறத்து நின்ற இரு கன்னியரும் அவளது சிறுவெகுளியை நீக்குவான் தங்கள் தொழுகுலத்தை நினைவூட்டுவார், விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந் தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்து ளீசனுர்க் கன்பார் யாமென்று நல்லுரைபகர்ந்தனர். அன்புடைமை அறிவிக்கவே அவ்வன்பு தம்மையாளு மியல்புடைய இறைவன்மாட்டுள்ளதென்ப துரைப்பார் ஈசனுர்க்கு அன்பார் யாம் என்ருர். அவ்வீசன், உயிர்களிடத்து விளங்கும் அஞ்ஞானந்தன்னை யகல்விக்கும் நல்லறிவு வடிவினனுதலின் தில்லையின்கண் ஞான வெளியினுறைபவனெனவும், சிவலோகநாதனெனவும்,ஞானசிரியனெனவும் குறிக்கப்படுவது

காண்க. ஞானாசிரியனுவானென் றுணர்த்தியதால் உருவின்றிய இறைவன் உருவுகொண்டு இம்மாநிலத்து அன்பர்கட்கு அவரது தாமரை மலர்போலுந் திருவடியை எளிமையிலருளுபவ னென்பது பெறப்பட்டது. அத்திருவடி விண்ணோர்களுக்கரியதென்பார், விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசுமலர்ப் பாதமென்றார். கூசுதல் - நாணுதல். தேவர்கள் தம் வாழ்வினையே கருதித் தொழுதனராதலின் அவர் தொழுகையைக் கண்டு நாணுதலை யடைந்தாரென்பது குறிப்பு. தேவர்கள் தங்கள் வாழ்வினையே கருதித் தொழுதனரென்பது, "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால், தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி" எனும் (திருச்சதகம்-16) மணிவாசகத்தா லறியலாகும். இறைவன் நாணமடை இன்றாரென்பது 'பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு நக்கு நிற்ப ரவர்தமை நாணியே' (தனித்திருக்குறுந் தொகை - 9) எனத் திருநாவுக்கரசர்த் திருவாக்கா னுணர்க. (2)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடை திறவாய்
பத்துடையீரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட் கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய் (௩)

(இதன் பொருள்) : முத்து அன்ன வெண் நகையாய் - முத்துக்கள் வரிசையொத்த வெள்ளிய பற்களை யுடைய பெண்ணே!, முன் எழுந்து எதிர்வந்து - (முன்னை நாட்களிலெல்லாம் துயில்நீங்கி வீதியில் எங்களை எதிர்நோக்கிப் போந்து, என் அத்தன் ஆனந்தன் அமுதன் என்று - எனது

தந்தை, இன்பவுருவானவன், சாவா மருந்தவன் என இவ்வாறு, அள்ளூறி தித்திக்க பேசுவாய் - அனுபவித்து இனிமை பயக்கப் பேசுவாய், வந்து - (கன்னியர்கள் குரல் கேட்டவளவில் வாராமையான்) படுக்கையினின்று மெழுந்து போந்து, உன்கடை திறவாய் - நினது வாயிற்கத வினைத் திறப்பாயாக, பத்துடையீர்-(இங்ஙனம் தோழியர் தன்னை விளித்தமை கேட்டெழுந்து வெளிப்போந்து வாயிற் புறத்துள்ள கன்னியரை நோக்கி யார்வமுடன்) அன் புடையீர், ஈசன்பழ அடியீர் - இறைவனிடத்துப் பழமை யாகத் தொண்டுபுரிந்து வருமடியவர்களே, பாங்கு உடையீர்-இறைவனிடத்து ஒட்டிட்ட பண்பினையுடையீர், புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாது ஓ - புதுமையாக அடிமைபூண்ட எங்கள்பாலுள்ள கீழ்மை யகற்றி ஆண்டுகொள்ளுதல் குற்றமாகுமோ (என இனிய மொழிகள் பகர்தலும், எழுப்பவந்த கன்னியர்கள்) நின் அன்புடைமை எத்தோ - உனது அன்புடைமை வஞ்சக மாகுமோ, ஆகாது, ஓ - எதிர்மறை. எல்லோம் அறியோம் ஓ - நாங்கள் அனைவரும் அறிவோமாக, ஓ - அசை, நம் சிவனை - நமது சிவபெருமானை, சித்தம் அழகியார்பாடார் ஓ - தூய மனமுடையார் இவ்வைகறைப் போதில் பாடுவ தியல்பன்றோ, எமக்கு இத்தனையும் வேண்டும்-எங்களைப் பலபடியாகக் கூறவும்வேண்டுமோ, வேண்டுவதின்று என மொழியவும், அவர்களோடு வெளிவந்த கன்னிகை கலந்து கொண்டனள் என்றபடி.

(விளக்கம்): மேலைத்திருப் பாட்டில் இறைவன் உண்மை யன்புடையார்க்கு அருளு மாண்பினை அறி வுறுத்திய அடிகள், இத்திருப்பாட்டில் அவ்வடியவர்கள் புன்மை தீர்த்தாட்கொள்ளுஞ் சிறப்பு அருளினாராக. எழுப்பவந்த கன்னியர் எழுப்பப்படும் கன்னியரின் இன் முகமும் குளிர்ந்தமொழிகளும் நினைவுடையராய் அவளது சிறப்புத்தோன்ற முத்தன்ன வெண்ணகை யாயென

விளித்தனர். 'முத்துறழ்முறுவல்' (நெடுநல்வாடை - 37) என நக்கீரரருளுவது காண்க. முத்துக்கள் விண்மீன் போலொளியும், உருட்சியும், அழுக்கில்லாமையும், கையி லெடுத்துப் பார்க்கின் கெட்டியும் பார்வைக்கு அழகும் படிக நிறமுங்கூடியவை. அவை இயல்பாகவே குளிர்ச்சி யுடைமையை, " பவ்வத்தங்கட் பிறந்து பனிபெயர்க்குந் தண்ணுற்றதாகி " (1672) எனச் சிந்தாமணி விளக்குவ தறிக. நகை - பல். அவள் அன்புடையவளாதலின் 'ஈரமென் மதுரப்பதம்' மொழியுமியல்புடையவளெனக் கொள்க. அவளது அன்பின் செயலைப் பின்னு மறிவிப்பார் முன்னெழுந்து எதிர்வந்து என் அத்தன் ஆனந்தன் அமுத னென் றள்ளூறித் தித்திக்கப் பேசுவாயென்றார். முன் என்பது முன்னை நாட்களைக் குறித்தது. சென்றவாண்டில் நிகழ்ந்தமை குறித்தலுமொன்று. போந்த கன்னியர்களுக்கு முன்னுகத் துயில் நீங்கித் தூய்மை செய்துகொண்டு திரு வீதியில் அவர்களை எதிர்கொள்வது இக் கன்னியரினியல்பு போலும். அங்ஙனம் போந்த அவள் அன்பிற் கசிந்தவளாத லால் இறைவனை எனது தந்தை, தலைவன், அமுதனென அநுபவித்து இனிமை பயக்க பேசுமியல்புடையாளென் றுணர்த்தப்பட்டது. பெண்கட்குப் பொதுமையில் மணத் திற்கு முந்திய நிலை, மணத்திற்குப் பிந்திய நிலை, பேரிளம் பெண்ணுயைப் பற்றற்ற நிலையென மூன்று பருவங்களுள. கொழுகொம்பினைப் பற்றி நிற்கும் கொடிபோன்றவர் பெண்களாதலின் மேற்கூறிய மூன்று பருவங்களினும் முறையே ஆதாரமாயுள்ளவர் தந்தை, தலைவன், ஈசன் எனக் குறித்த அழகைக்காண்க. இங்ஙனமே, " என்னப்ப னெம்பிரானெல்லார்க்குந் தானீசன் " (திருவாசகம் - திருச்சாழல் -2) எனவும், " எந்தையீச னெம்பெருமான் " (திருஞானசம்பந்தர் - திருநெல்வாயிலரத்துறை - பண் - காந்தாரம் -1) எனவும் வருவன காண்க. இவ்வாறு பேசிய போது சொன்மலிந்த பொருளுணர்ச்சியை யனுபவித்தும்

பேசினளென்பார் அள்ளூறித்தித்திக்கப் பேசுவாயென்றார். ‘அள்ளூறவளிந்த காமம்’ (1387) என்னும் சீவகசிந்தாமணித் தொடருக்கு நச்சினார்க்கினியர் ‘நுகருந் தன்மையுறும்படி பழுத்த காமம்’ எனப் பொருளுரைத்தது காண்க. இங்கு நுகர்தல் அனுபவித்தல் என்னும் பொருட்டு. ‘அள்ளூறியெம் பெருமானென் பார்க்கென்றுந் திருவீன்ற’ (திருவாலம்பொழில் - திருத்தாண்டகம் - 3) எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும், ‘உள்ள மள்ளூறுந் தொண்டர்க்கு’ எனக் கருவூர்த்தேவரும் அருளியன வறிக. இங்ஙனம் விரித்தும் சிறப்புக்கூறியுந் துயினீங்கி வாராமையான் படுக்கையினின்றுமெழுந்து நினது வாயிற்கதவைத் திறப்பாயாகவென்றன ரென்க. இதனைக் கேட்டலும் உறக்கத்திலிருந்த கன்னியர் வெளிப்போந்து புறத்தே நின்ற கன்னியரைநோக்கி, பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர் ! என அன்புடனழைத்தனர். ஈண்டு ஈசனெனற்பாலதனை இடைநிலை விளக்காக பத்துடையீர் என்பதனோடும், பாங்குடையீர் என்பதனோடு மொட்டிப் பொருளுரைக்க. பத்து-பற்று-அன்பு என்னும் பொருட்டு; அடியவர்களது பத்துச் செயல்களைக்குறிப்பதுமாம். ‘பத்துகொலா மடியார் செய்கைதானே’ யெனும் அப்பர் அருண்மொழி நினைவுகூர்க. அவை (1) மனந்தங்கிய திருவெண்ணீற்றையும் சிறந்த உருத்திராக்கமணியையும் அணிதல் (2) ஆசாரியனுக்கு வழிபாடு செய்தல் (3) ஆசைகொண்டு சிவபெருமானைப் பாடுதல் (4) திருநாமங்களைச்சபித்தல் (5) சிவபெருமானுக்குவழிபாடுசெய்தல் (6) சிவதர்மங்களைச் செய்தல் (7) சிவபெருமான் சரிதங்கேட்டல் (8) சிவாலயத்தைப் பாதுகாத்தல் 9 தொண்டர்களிடத்திற்றான் உண்ணுதல் (10) தொண்டர்க்குத் தொண்டராயிருத்தல் என்பன. இப்பத்துச் செய்ல்களுடையோர் இறைவன் பழையவடியவராவர். பழைமையாவது சிவத்தொண்டு புரிந்து தஞ் செயலற்று நாமற்றுப் பின் நாதன் செயலென்றறிந்து

நிற்றல். "தம்மை விடுத்தாயும் பழைய வடியார்" என்று குமரகுருபரசுவாமிகள் கந்தர்கலிவெண்பாவில் போற்றிய துணர்க. பாங்கு என்பது பலபொரு ளொருசொல்லாய் அழகு, இடம், இணக்கம், ஊற்று, உரிமை என்பவற்றை யுணர்த்தியது. அடியவர் யாவரும் சித்தமழகியாராதலானும், இறைவன்பால் நீங்காத் தன்மையுடையவராதலானும், ஒட்டிட்ட பண்பினிற்பவராதலானும், சிவானந்த வூற்றினைப் பருகுபவராதலானும், உரிமைத்தொண்டு புரிபவராதலானும் பாங்குடையீரென மொழிந்தனர். இங்ஙன முயர்ந்த நீவிர் என்னைப்போன்ற புத்தம் புதிதாகுமடியவரது கீழ்மையகற்றி அடியவராக்குதல் குற்றமாகுமோவென வினயமாக வுரைப்பார் புத்தடியோம் புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ என்றார். புத்தடியோம் என்றது தன்னைப்போன்ற பிறவுயிர்களையு முளப்படுத்தியதென்க. புன்மைதீர்த்து - கீழ்மையகற்றி ஆட்கொண்டு அடியவராகத் திகழச் செய்தலென்பது கருத்து. பழையவடியார் புத்தடியவரைச் சிவமாக்கு மருளிப்பாட்டினை,

கூடா வொழுக்கம் பூண்டும் வேடங்
கொண்டதற் கேற்பநின் றொண்டரொடு பயிறலிற்
பூண்டவவ் வேடங் காண்டொறுங் காண்டொறும்
நின்னிலை யென்னிடத் துன்னி யுன்னிப்
பன்னா ளேக்கின ராகலி னன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் (11-8-14)

எனக் குமரகுருபரர் சிதம்பர மும்மணிக்கோவையில் விளக்கியதறிக. இது சிவஞானச்செல்வர் கடமையேயாம். குற்றமாகாது என அறிவிப்பார் பொல்லாதோ என்றார். பொல்லாததோ என்பது பொல்லாதோ எனக் குறுகின்றது. தங்கள் கடமையை யுணர்த்தியதனைக் கேட்ட வாயிற்புறத்து நின்ற கன்னியர் தம் முன்வந்து

நின்ற கன்னியரின் அன்பினை வியந்து பாராட்டுவார் நின்னன்புடைமை எத்தோ என்றனர். எத்து - வஞ்சகம். எற்றோவெனப் பாடமாயின் அதிசயமெனக் கொள்க. அவ் வன்பி னுண்மையைத் தாங்களும் அறிவோமென வலி யுறுத்துவார் எல்லோமறியோமோ என்றார். அங்ஙன மறிந்திருந்தும் அக் கன்னியரை விளித்தமைக்குக் காரணங் கூறுவார் சித்தமழகியார் பாடாரோ நஞ்சிவனையென்றார். நஞ்சிவனை யென்றது தாங்கள் தொழுந் தெய்வமெனு முரிமைபற்றி. சித்தத்திற்கு அழகு அமைவது அதனை இறைவனுக்கு உறைவிடமாக்குதலினாலாம். நெஞ்ச மும்மக்கே இடமாக வைத்தேன்' (திருவதிகை வீரட்டானம்- பண் - கொல்லி - 2) என ஆளுடையவரசுகள் அருளி யவாறறிக. இங்ஙனஞ் சித்தமழகியார் இடைவிடாது இறைவனைப் பாடிப் பரவித் திரிவராதலின் இவ்வைகறைப் போதினும் பாடுவதியல்பு என்று புலப்படுத்துவார் பாடாரோ என்றார். தங்கள்பாற் போந்த கன்னியரின் அன்புடைமையைப் புகழ்ந்தவர் தங்கள் தாழ்மையைக் கருதினராய்த் தங்களை விளித்த சொற்களாகும் பத்துடையீர், ஈசன் பழவடியீர், பாங்குடையீர் ஆகிய இவைகளை நினைந்து எங்களை இத்தனை மொழிகளால் குறிக்கவும் வேண்டுமோவென்பார் இத்தனையும் வேண்டு மெமக் கென்றனரென்க. தனை அளவு. இரக்கக் குறிப் பாகும். ஓகாரம் தொக்குநின்றது. (3)

ஒண்ணித்தில நகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய் (௪)

(இதன் பொருள்) : ஒள் நித்தில நகை ஆய் - ஒளி பொருந்திய முத்தினையொத்த பற்களையுடைய பெண்ணே!, இன்னம் புலர்ந்தின்றுஓ - இன்னமும் பொழுது விடிய வில்லையோ (என்றேசுதலும், படுக்கையினின்று நீங்காது இடந்த கன்னியர்), வண்ண கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ - அழகுடைய கிளி போன்று கொஞ்சும் மொழி யினுடைய குறித்த வெல்லாக் கன்னியரும் வந்து சேர்ந்தனரோ (என்று வினவுதலும், போந்த கன்னியர்), எண்ணி கொடு உள்ளவா சொல்லுகோம் - எண்ணிக் கொண்டு பின்னருள்ளபடி சொல்லுவோமாக, அவ்வளவு உம் கண்ணை துயின்று அவமே காலத்தை போக்காது - நாங்கள் சொல்லுகின்ற காலம் வரை கண்களைத் துயில் வித்து வீணுகக் காலத்தைக் கழிக்காது, விண்ணுக்கு ஒரு மருந்து ஐ - தேவர்களுக்கு ஒப்பற்ற அமிழ்த மாக வுள்ளவனும், வேத விழுப்பொருளை - மறை நான்கனுள் போற்றப்படும் மேலான பொருளானவனும், கண்ணுக்கு இனியானை - காண்பார் கண்களுக்கு இனிமை பயக்குகின்றவனுமாகிய சிவபரம் பொருளை, பாடி உள்ளம் கசிந்து - பாடுதலினாலே மனம் நெகிழ்ச்சியடைய, உள் நெக்கு - உள்ளேயுடைந்த தன்மையதாய், நின்று - நிலவி, உருக - உருகுவாயாக, யாம்மாட்டோம் - யாங்கள் கணக் கிட்டுச் சொல்லகில்லோம், நீயேவந்து எண்ணி குறை இல் துயில் - நீயே படுக்கையினின்று மெழுந்து வந்து போந் துள்ள யாவரையும் கணக்கிட்டுக்கொண்டு குறித்த கன்னியர் வாராமையான் எண்ணிக்கை குறையுமானால் மீண்டுஞ் சென்று உறங்குவாயாக என்றவாறு.

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் பழையவடியார்கள் புத்தடியவர்களது புன்மை தீர்த்தாட்கொள்ளுஞ் சிறப் புணர்த்திய அடிகள், இத்திருப்பாட்டில் வீழ்நாள் படாது மருந்தெனவும் விழுப்பொருளெனவும் இனியனெனவும் நின்ற இறைவனைப் பாடுகவென அறிவுறுத்தினராக.

கூடிய கன்னியர் உறங்கிக் கொண்டிருக்கும் பிறிதொரு கன்னியர் வீட்டு வாயிற்புறத்தே நின்று அவளைவிளிப்பார் ஒண்ணித்தில நகையாய் என்றார். ஈண்டு ஒண்மை நித்திலத்தின் மேலதாயினும் இக்கன்னியரின் பற்களையே உவமை முகத்தான் விளக்கினமையால் அஃது அக்கன்னியரையே குறித்தாகக் கொள்க. முன்னைத்திருப்பாட்டில் முத்தன்ன வெண்ணகையாய் என்பதனுள் பற்களின் வெண்மை நிறம் குறிக்கப்பட்டது. ஈண்டு அவ்வெண்மையினின்ற ஒளியினை விசேடித்ததென்க. எனவே இக்கன்னியர் குளிர்ச்சிபொருந்திய இன்சொல்லுடன் அறிவொளியு முடையாளென்பது குறிப்பு. இங்ஙன மழைத்தவுடனெழுந்து வாராமையான் பொழுது புலர்கின்றமை அறியாத காரணமாகுமென்றெண்ணி ஏசுவார்போல் இன்னம் புலர்ந்தின்றோ என்றார். இன்னமும் என்றது உம்மைதொக்கு நின்றது. விளித்த பின்னும் என்னும் பொருட்டு. புலர்ந்ததின்றோ என்பது புலர்ந்தின்றோ எனத் தகரங்குறைந்து நின்றது. ஓகாரம் ஐயப்பொருட்டு. இங்ஙனம் தந்தோழியர் துயிலுணர்த்த எழுந்து செல்லாது பொய்யுறக்கங் கொண்ட இக்கன்னியர் எல்லாமகளிருங் கூடிய பின்பே சார்ந்துடனே நீராடக் கருதினவளாய் வீடுதோறுஞ்சென்று சென்று மற்றைத் தோழியர்களைத் துயிலுணர்த்துஞ் செயலை மறுத்தவள் போல் வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ என்று வினவினாரென்க. வண்ணம் - அழகு, கிளிமொழியார் - இன்சொல்லார். கிளிமழலையஞ் சொல் (சீவகசிந்தாமணி - 457) எனவும், தேனேக்குங் கிளி மழலையுமை கேள்வன் (அப்பர்-திருவேகம்பம் - பண் - காந்தாரம் - 2) எனவும் குறித்தன காண்க. எல்லாரும் என்பதனால் தோழிகள் முன்னர் கலந்துபேசி இத்துணை என்றஎண்ணிக்கையால் குறித்த யாவருமென்று குறித்தது. ஓகாரம் வினாப்பொருட்டு, இவ்வினாவினைக் கேட்டதும் எழுப்பவந்த கன்னியர்' இவள் பொய்யுறக்கங்கொண்டு

காலத்தை வீணுக்க விடுத்தது இவ்விருவென்று கருதித் தக்கவாறு மாற்றமுரைப்பார் போந்த யாவரையு மெண்ணி உள்ளபடி பின்னர்த் தெரிவிப்போம். நாங்கள் அறிவின்றவரை கண்களைத் துயில்வித்துக் காலத்தை வீணுகக் கழிக்காதே என்றனர். கொண்டு என்ற துணைவினை கொடு என்று இடைகுறைந்து நின்றது. உள்ளவா - உள்ளவாறு. துயின்று - துயில்வித்து. அவமே காலத்தைப் போக்காதே என்பது வீழ்நாள்படாமை அறிவுறுத்தியது. போக்காதே - போக்காது என வினையெச்சமாகக் கொண்டு தொடர்க. ஓகாரம் - அசை. இவ்வைகறைப்போதி லுறங்காது பின்யாது செய்யக்கடவ தென்பதனை விரித்துரைப்பார் விண்ணுக்கொருமருந்தை வேதவிழுப்பொருளைக் கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள முள்நெக்கு நின்றுருக என்றனர். விண் ஆகுபெயராய்த் தேவர்களை யுணர்த்தியது. தேவர்க்கொப்பற்ற மருந்தாவது அவர்தம் பழவினையான் வந்த இடுக்கண்களை நீக்கலென்பதாம். உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் இவை நான்கும் மருந்தெனக் கருதப்படுகின்றமையின் தீர்ப்பானுகிய இறைவன் மருந்தெனக் குறிப்பிடப்பட்டது. 'மருந்தவன் வானவர் தானவர்க்கும்' (திருஞானசம்பந்தர் - திருவிடைமருதூர் - பண் - வியாழக்குறிஞ்சி - 1) என்பது தமிழ் மறை. இறைவன் மருந்தாவது பிறவிநோய் தீர்த்தற்கேயாகும். பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளினுல் பிறவி கூடுவது என்று செந்நாப்புலவரோதுதலின் அம்மருளாகும் மயக்கத்தை இறைவனீக்குமெனின் அதனை இறைவன் ஞானத்தால் நீக்குவனென்பதுணர்த்த வேத விழுப்பொருளை யென்ருர். 'மம்மரறுக்கும் மருந்து கண்டாய்' (அப்பர் - திருமறைக்காடு - திருத்தாண்டகம் - 8) என்றதும் இக்கருத்து பற்றியேயாம். இஃறவன்றிருவாக்கென வேதங்கள் கருதப்படுகின்றமையின் அவற்றுள் விளங்கும் மெய்ப்பொருள் அம்மயக்கத்தைப் போக்க வல்ல

தென்பது குறிப்பு. அம்மெய்ப் பொருளின் மேன்மை உயிர் கட்குச் சிவப்பேற்றைப் புணர்த்தலினாலாம். எனவே இம் மெய்ப்பொருளை யுணர்ந்தார்க்கு இறைவன் இனியனாதலின் கண்ணுக்கினியானை யென்றார். ஈண்டுக் கண்ணுக்கென்றது கண்களையுடைய காண்பார்க்கு என்னும் பொருட்டு. இங்குக் குறித்த கண்கள் புறத்தே நோக்குங் கண்க ளன்று. அகக் கண்களைக் குறித்தது. "முகத்திற் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்" எனத் திருமூலரும், "தண்டியடி கள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார், அண்டவாணர் மறைபாட வாடுஞ்செம் பொற்கழல் மனத் துக், கொண்ட கருத்தினக நோக்குங் குறிப்பேயன்றிப் புறநோக்கும், கண்ட வுணர்வு துறந்தார்போல் பிறந்த பொழுதே கண்காணார்" எனச்சேக்கிழாரடிகளும் அகநோக் கின் சிறப்பினை வலியுறுத்தியமையறிக. இவ்வக நோக்கால் சிவானந்தங்கூடுதலின் இறைவன் இனியனாக விளங்குவன். 'கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியாய்'(திருக் காளத்தி – பண் – நட்டராகம் – 1) எனச் சுந்தரர் போற் றியதுன்னுக. மருந்தென்றும், விழுப்பொருளென்றும், இனியவனென்றும் தொடர்பு பற்றிய முறைவைப்பால் உயிர்கட்கு இறைவன் 'தோற்றம் நிலையிறுதிப் பொருளாய் வந்த மருந்தாய்ப்' (அப்பர் – திருவேகம்பம் - திருத்தாண் டகம் – 2) பக்குவ முதிரச்செய்து உண்மை ஞானமருளித் தன்னைத் தலைப்படுமாறாக்கித் தன்றிருவடி நீழல் தருமினி யவன் என்று புலப்படுத்துவது காண்க. அந்நன்றிக்குக் கைம்மாறுவது பாடுதலென்பார் பாடியென்றார். உள்ளத் துணர்ச்சியா லநுபவிப்பார் கசிந்துள்ளம் உள்நெக்கு நின் றுருக என்றார், கசிதல் – மனம் நெகிழ்ச்சியடைந்தழுதல். உள்நெக்கு – திண்ணிப்பட்ட மனமுடைந்து நெகிழ்ச்சியடைய முற்படுதல். இத்தகைய அன்பு நிரந்தரமாவதறிவிப்பார் நின்று என்றார். எனவே அயரா அன்பிற் றலைப்பட்டு

னின்றூர் உருகுவராகலான் அங்ஙனம் உருகுகவென வேண்டியவாறு. உருக — வியங்கோளீறுபெற்றது. பொழுதினைச் சுருக்காது பரமனையே பாடுவது பணியாகக்கொண்ட யாங்கள் நீ விரும்பிய எண்ணிக்கையை முயலோம் என்பார் யாம் மாட்டோமென் றறிவிப்பாராய் அவ்வெண்ணிக்கை இன்றியமையாததென்று கருதுவாயாகில் நீயே வந்தெண்ணிக் குறையில் துயில் என்றனரென்க. வந்து படுக்கையினின்றும் எழுந்து வெளிப்போந்து என்னும் பொருட்டு. இம் மொழிகளைக் கேட்ட துணையானே இக் கன்னியர் வெளிப்போந்து வந்த தோழியரைச் சார்ந்தனளென்று கருதுக. "ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை, எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்" எனவரும் திருப்பாவையி னடிகளையுங் காண்க. (4)

மாலறியா நான்முகனுங்காணுமலையினை நாம்
போலறிவோமென் றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்கா
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய் (ரு)

(இதன் பொருள்) ஏலக்குழலி — மயிர்ச்சாந்தினை யணிந்த கறுத்த கூந்தலையுடைய பெண்ணே!, மால் அறியா நான்முகன் உம் காணு மலையினை — திருமால் அகழ்ந்தும் திருவடியினை யறியமாட்டாததாயும், பிரமன் பறந்தும் திருமுடியினைக் காணமாட்டாததாயுமான அளக்கலாகா பெருவடிவிற்றாய மலை போன்றவனை, நாம் - நாமெல்லோரும், அறிவோம்—அறியுமாற்றலுடையோம், என்று உள்ள பொக்கங்கள் ஏ பேசும் ஊறு பால் தேன் போல் வாய் படிறீ—என்று உண்மையாக பொய்யுரைகளையே சுரக்கின்ற பாலென

வும், தேனெனவும் போல இனிக்கப் பேசுகின்ற வாயினை யுடைய வஞ்சகீ, கடைதிறவாய் - நினது வாயிற்கதவினைத் திறப்பாயாக, ஞாலமே - மண்ணவரும், விண்ணே - தேவர்களும், பிறவே - பாதாளத்தாரும் மற்றையோரும், அறிவறியான் - அறிதற்கியலாதவனது, கோலமும் - வடிவத்தையும், நம்மை ஆட்கொண்டருளி கோதாட்டும் சீலமும் - நம்மை (உயிர்களை) ஆண்டுகொண்டருளிக் குற்றங்களைப் போக்கும் அருட்குணத்தையும், பாடி - புகழ்ந்து பாடி, சிவனே சிவனே என்று ஓலம் இடினும் உணராய் உணராய் - சிவபெருமானே, சிவபெருமானே என்று வாய்விட்டு அபயம் வேண்டும் முறைமையைப் போலரற்றினும் அறிந்தாயில்லை, உறக்கத்தினின்றும் விழித்தாயில்லை, பரிசு - இஃது உனது தன்மையாமாகுல் யாங்கள் என் செய்வது என்று நொந்து மொழிந்தனரென்பது. காண் - அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் வீழ்நாள் படாது இறைவனைப் பாடியுருகுகவென அறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட்டில் யாராலுங் காண்டற்கரியவனுகும் இறைவ னுருக்கொண்டு உயிர்களது குற்றம் நீக்கி யாட்கொள்ளு மருளொழுக்கமுடையான் என அறிவுறுத்தினராக. எழுப்பவந்த கன்னியர் எழுப்பப்படும் கன்னியரின் கூந்தலழகை முன்னுணர்ந்தவராதலின் அவளை அச்சிறப்பால் அழைப்பார் ஏலக்குழலீ யென்ருர். ஏலக்குழல் - வாசனை யூட்டப்பட்ட மயிர்ச்சிகை. விளித்தவுடனே வாராமையான் அவளது பொய் வஞ்சகத் தன்மை நினைவூட்டுவார் மாலறியா நான்முகனுங் காணு மலையினை நாம் போலறிவோமென்றுள்ள பொக்கங்களே பேசும், பாலூறு தேன் வாய்ப்படிறீ என்றனர். அறியமாட்டாத பொருளை அறிந்தேனென்று இனிக்கப் பேசுந் திறம் அவளது வஞ்சகம் என்பது. 'பரம்பொருளாய சிவம் அறியமாட்டாத தொன்று. இந்நூல் திருவண்ணுமலையில் பாடப்பெற்றமையான் அதன் வரலாறு குறிப்பார் மாலறியா நான்முகனுங்

காணு மலையினை என்றனர். இஃது இறைவனது பரம் பொருட்டன்மையைப் புலப்படுக்கப்பட்டபடியாம். இனி மயக்கவுணர்வுடையோரால் அறியப்படாதவன் என்பதும், மனத்தை ஒருமுகப்படுத்தாமல் பலமுகமாகச் செலவிடு வோரால் காணப்படாதவனென்பதும் ஆகிய குறிப்புப் பொருள்தோன்ற மாலறியா நான்முகனுங்காணு மலையினை யென்றாரென்னலுமாம். "மலையாக வெளிப்பட்டு மறிந்திலர் என்பது ஒருநயம்" என்னுங் கதிர்மணி விளக்கம் இன்புறத் தக்கதாம். அறியா என்பதனாலும் காணு என்பதனாலும் அநுமானம் காட்சி யென்னும் அளவைகளாலும் அறியப் படாதவனெனினுமாம். "குறைவிலாவளவினாலுங்கூறொணு தாகி நின்ற இறைவனார் கமலபாதம்" (4) எனுஞ் சிவஞான சித்தியார் சுபக்கத்தானுமறிக. அளக்கலாகாத் தன்மை யன் இறைவனாதலின் அவனுக்கொப்பாகக் கூறப்படும் பொருள் அளக்கலாகாத தன்மையுடைத்தாதல் வேண்டி மலையினை என்றனர். "அளக்க லாகா அளவும் பொருளுந், துளக்க லாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே (நன்னூல் – பாயிரம் – 28) என மலை யினது மாட்சியினைப் பவணந்தி முனிவர் விளக்கியதறிக. நாம் - உயிர்களைக் குறித்தது. அறிதல் - தெரிதல். உள்ள என்றது உண்மைப் பொருட்டு. பொக்கம் – பொய். 'பொக்கமிக்க பூவும் நீருங்கண்டு' (தனித்திருக்குறுந்தொகை – 9) என அப்பரருளியது காண்க. வஞ்சகர் பழம் நழுவி பாலில் விழுவதுபோல் நயம்பட இனிக்கப் பேசுமாற்றலை யுடையார் என்பதனை விளக்கவே பாலூறு தேன்வாய்ப் படிறீ என்றனர். பொய்யை மெய்போலப் பேசுதற்குப் பல பொய்களை யுரைப்பராகலான் ஊறு எனும் அடை கொடுத்தோதினார். ஊறு – சுரத்தல். ஊறுபால் தேன் போல பேசும் வாய்ப்படிறீ என உரைநடை கொண்டு பொருள் கொள்க. எழுப்பப்படும் கன்னியர் எழுந்து வெளி வாராமையான் வாயிற் புறத்தே நின்ற தோழியரனைவரும்

இறைவனது புகழைப் பாடினார்கள். அவனது திருநாமங் களைக் கூறி அலறினார்கள். அங்ஙனம் பாடியுமரற்றியும் வாராமையைக் கண்டு வருந்துவார் ஞாலமே விண்ணே பிறவேயறிவரியான், கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ் சீலமும் பாடிச் சிவனே சிவனே யென்றோல மிடினு முணராயுணராய் என்றனர். ஈண்டு இறைவனது புகழ் மூவகையாகக் குறிக்கப்படுவது. முதலாவதாக இறை வனுண்மையியல்பு உணர்த்துவார் ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான் என்றனர். ஞாலம் – நிலவுலகம். ஆகுபெயராய் மண்ணுலக மக்களைக் குறித்தது. விண் – ஆகுபெயராய்த் தேவர்களை யுணர்த்தியது. பிறவே என்ற தனால் நாகர்களையும் அறிவில் பொருள்களையும் குறித்தா ரென்க. மக்களாய்ப் பிறந்து புண்ணிய பாவமியற்றிப் புண்ணிய மிகுதியாற்றேவராயும் பாவமிகுதியான் நரகரா யும் பிறத்தலின் ஞாலமே விண்ணே பிறவே எனச் சாதன சாத்தியமுறையே வைத்தாரென்க. ஏகாரங்கள் எண்ணுப் பொருள. இரண்டாவதாக அறியமாட்டாத் தன்மை வாய்ந்த பரம்பொருள் உயிர்கட்கருளுவான்வேண்டி உரு வங் கொள்ளும் என்பதனைக் கோலமும் என்றதனாற் குறித்தார். கோலம் – வடிவம். ‘அகளமாய் யாருமறிவரி தப்பொருள், சகளமாய் வந்ததென்றுந்தீபற, தானாகத் தந்ததென்றுந்தீபற’ எனவரும் திருவுந்தியார் (1) உருவங் கொள்ளுமுறைமையினை யுணர்த்தியதறிக. மேலும் அவ் வுருவம், அருவம், அருவுருவம், உருவமென முத்திறப்படு மென்பதனை,

> “உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்த
> அருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வானபோது
> திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
> கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு தானே”

— முதற் சூத்திரம் - 76

எனவரும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தா னுணர்க. உருவம் – திருமேனி. இம் மூன்று திருமேனி களும் முறையே சிந்திப்பதற்கும், வழிபாட்டிற்கும், உப தேசம் பெறுகைக்கும் சாதனமாதல் பற்றி கோலமும் புகழ்ந்துபாடி என்றார். மூன்றுவதாக மேற்கொள்ளுங் கோலங்களால் உயிர்களை யாட்கொண்டு அவர்தம் குற்றங் களைப் போக்கும் அருட்குணத்தைப் போற்றுவார் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டுஞ் சீலமும்பாடி என்றனர். கோது – குற்றம். ஆட்டி - போக்கி. வெறும் பாடுதலே யன்றி பிறவிக்கஞ்சி வீடுபேற்றை நாடுங் கருத்துடையோ மென்றறிவிப்பார் சிவனே சிவனே என்று ஓலமிடினுமென் றார். சிவனே சிவனே என்றடுக்கிக் கூறியது அபயம் வேண் டுங் குறிப்பை யுணர்த்துவதற்கேயாம். ஓலம் - அபயம் வேண்டிக் கூவுங் குறிப்புமொழி. இங்ஙனம் யாங்கள் வாய்விட்டரற்றினும் நீ யறிந்தாயில்லை என்பார் உணராய் என்றார். இரண்டாவது உணராய் என்பது நீ விழித்தா யல்லை என்னும் பொருட்டு. பரிசு என்பது உன் தன்மை யிதுவாயின் யாங்கள் என்செய்யவல்லேம் என இரங்குதலை யுணர்த்தியது. இவர்கள் இரங்கிக் கூறியவதனைக்கேட்ட கன்னியர் வெளிப்போந்து அவர்களோடு கலந்துகொண்டன ரென்க. (5)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகராயின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானே வந்தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகாயுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் (சு)

(இதன் பொருள்) மான் ஏ - மானையொத்த மருண்ட பார் வையுடைய கண்களையுடைய பெண்ணே!, நீ நென்னல் ஐ

நாளைவந்து உங்களைநான் ஏ எழுப்புவன் என்றலும்-நாளை காலையில் உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் யாவரையும் நானே துயிலுணர்த்தி எழுந்திருக்கச் செய்வனென்று நீ நேற்றுக் கூறியிருந்தும், நாணுமே - இதுபோழ்து நாணமில் லாமல், போன திசை பகராய்-அச்சொற்கள் சென்ற திசை அறிவிக்க மாட்டாய், இன்னம் புலர்ந்தின்று ஓ-இன்னமும் பொழுது விடியவில்லையா, வானே நிலனே பிறவே அறிவரி யான் - விண்ணவரும் மண்ணவரும் மற்றையோரும் காண் டற்கியலாதவனாகிய பரம் பொருள், தானேவந்து – தான் திருவுருவங்கொண்டு இம் மண்ணுலகத்திற்குப் போந்து. எம்மை தலையளித்து ஆட்கொண்டு அருளும் - எங்களைக் காத்து ஆட்கொள்ளுகின்ற, வான்வார்கழல்பாடி - பெருமை தங்கிய நீண்ட திருவடிகளைப் பாடி, வந்தோர்க்கு உன்வாய் திறவாய் – வந்தவர்களாகிய எங்கட்கு நினது வாயிலைத் திறந்தாயல்லை, ஊன் ஏ உருகாய் - நினதுடலே யுருகும் மெய்ப்பாடும் பெற்றாயல்லை, உனக்கு ஏ உறும் - உனக்கே இந்நிலை பொருந்துவதாகும், எமக்கு உம் ஏனோர்க்கு உம் தம் கோனை பாடு - எங்களுக்கும் மற்றையோர்க்குந் தலைவனா குஞ் சிவபெருமானைப் பாடுவாயாக.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறைவன் உயிர்களை யாட்கொள்ளு மருளொழுக்கம் அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் அவனியில் மயங்கிக்கிடக்கு முயிர்கட்கு இறை தாமே போந்து தலையளித்தலை யுணர்த்தினர். ஈண்டு எழுப்பப்படுங் கன்னியரின் கண்ணழகினை எழுப்ப வந்த கன்னியர் முன்னர் உணர்ந்திருந்தாராதலின் அதன்சிறப்புக் கூறி விளிப்பார் மானே என்றார். மானின் மருண்ட பார்வையுடைக் கண்களையே உவமை முகத்தால் விளக்கு வது மரபாகும். 'மான்பெட்டை நோக்கி மணாளீர்'(அப்பர்– திருவீழிமிழலை - திருநேரிசை - 1) என்பது தமிழ் மறை. இங்ஙனம் மானை யொத்த பெண்ணே என விளித்து அவள் முன்னை நாளிலும் எழுப்பப்பட்ட பின்னர் மற்றவர் தன்

னைக் குறைகூறி ஏசியபோது நாளை உங்கள் யாவரையும் நானே முன்னெழுந்து வீடுதோறும்போந் தெழுப்புவன் என்று கூறிய மொழிகளை நினைப்பூட்டுவார் "நென்னலை நாளை வந்து உங்களை நானே எழுப்புவன்" என்றனர். அதிகாலை படுக்கையினின்றும் எழுப்புவேன் என்று கூறிய சொற்கள்யாவும் இதுபோழ்து வெட்கமின்றி எங்குப் பறந் தனவோ கூறமாட்டா யென்பார் நாணுமே போனதிசை பகராய் என்றனர். நென்னல் - நேற்று. ஐ – சாரியை. என்றலும் என்றது எனக்கூறிய சொற்கள் யாவுமென் னும் பொருட்டு. என்றலுமே என்பது பாடமாயின் கூறிய சொற்களேஉனக்கு நாணத்தைவிளைவித்தனவெனமுடிக்க. போனதிசை என்பது செயல் முறையில் நிற்காமையைப் பழித்துரைக்கச் சொல்லியது. சொல்லியயாவும் மறந்தா யென்னும் பொருட்டு. இங்ஙனம் மறந்தாயாயினும் இவ் வைகறைப்போதில் எழுதல் கடமையாதல்பற்றி எழுந் திருத்தல் கூடுமென்று கருதினோர்க்கு இதுபோழ்து நீ துயில் நீங்காமையான் பொழுது விடிந்தநிலை இன்னமுமறியாய் போலுமென்பார் இன்னம் புலர்ந்தின்றோ என்றார். இது பற்றிய குறிப்பு முன்னர் நான்காம் பாட்டினுரைத்ததுங் கொள்க. இதுபோழ்து உன்னை யெழுப்புவான் பாடி வந் தோரை யுபசரிக்க எழுந்து போந்து நினது வாயிலைத் திறந்தாயல்லை. யாங்கள் வெறும் பாட்டு பாடி வந்திருப் பின் நீ இங்ஙனஞ் செய்தல் தகும். யாங்களோ இறைவ னைப் பாடிவந்தோமென்பார் வானே நிலனே பிறவே அறி வரியான் தானே வந்தெம்மைத் தலையளித் தாட்கொண்டரு ளும் வான்வார் கழல் பாடி என்றனர். கழல் ஆகுபெயராய் இறைவன் திருவடியை யுணர்த்திற்று. அது பெருமையா னீண்டதென விளங்க வான்வார் என்றனர். வான் — பெருமை. திருவடிக்குப் பெருமையாவது உயிர்களைக் காத் தற் பொருட்டு ஆட்கொளல் என்பது. தலையளித்தல் என் றது கருணை செய்தலென்னும் பொருட்டு. தானே வந்து —

உயிர்களது பக்குவ காலமறிந்து வலியவந்து. நம்பியாரூரரைத் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனார் ஆட்கொண்டமுறைமையை 'மன்றுளீர் செயலோ வந்து வலிய ஆட்கொண்ட தென்றூர்' எனத் தெய்வச் சேக்கிழாரடிகள் உணர்த்தியமை யறிக. இங்ஙனம் வலிய வருபவன் எவராலு மறியமாட்டாத் தன்மையனென்பார் வானே நிலனே பிறவே யறிவறியான் என்றார். ஏகாரங்கள் எண்ணுப்பொருள. மேலைத் திருப்பாட்டில் ஞாலமே விண்ணே பிறவே என்பவற்றிற் குரைத்தன கொள்க. முறைவைப்பில் வானேயென முன்னர்க் கூறியதெற்றுக்கெனின் உலகமின்புற வானவரை வாழ்த்தவேண்டி யிருத்தலின் வானே என்று முதலிலமைத்தார். "அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்கஎன், றிம்மெய்ம்மொழிப் பயன் உலக மின்புற" (திருஞானசம்பந்தர் புராணம் – 821). எனவரும் பெரிய புராணத் திருவிருத்தத்தானுணர்க. மேலும், வானின்றுலகம் வழங்கி வருதலான் வானே என முதன்மைபெறக் கூறினாரென்க. இறைவன் உலகிலுள்ள உயிர்கட்கு அருள் புரிவான் வேண்டி இரங்குகின்ற காலத்து வான்வழியாக முதலில் அமைவது பற்றி முன்னர்க் கூறினாரென் றுரைத்தலு மமையும். இங்ஙனம் இறைவனது புகழை யாங்கள் பாடிவரக் கேட்டு அதன் பயனை யான் துய்த்தேனுக› எழுந்து வந்து வாயிற் கதவினைத் திறந்திலே னென்பையாயின், நின்னிடத்து அன்பின் மெய்ப் பாட்டினைக் கண்டிலே மென்பார் ஊனே யுருகா யென்றார். தானுடைத் தசையாட என்றபடி எங்கள் தோழியராதலின் எங்கள் வருகையை யாங்கள் பாடியதனைக் கேட்டமாத்திரையானே அறிந்து அன்பிற் றலைப்பட்டாயல்லை யென்பது. இவ்வாறு அன்பிற்றலைப்படாமை யுனக்கே தகுமென்பார் உனக்கே உறுமென்றார். எங்ஙனமாயினும் இறைவனையே பாடுதல் கடனென்பார் எமக்கும் ஏனோர்க்குந் தங்கோனைப் பாடு என்றனர், ஏனோர்க்குமென்றது இறைவனை யறிந்திலா

ராயினும் அவர்தமக்கு மென்னும் பொருட்டு. பாடுக என்பது வியங்கோளீறு தொக்கு நின்றது. இங்ஙனம் இடித்துரைத்தலும் கன்னியர் எழுந்து வெளிப்போந்து கலந்துகொண்டனரென்பது. (6)

அன்னேயிவையுஞ்சிலவோபலவமரர்
உன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பா
யென்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னே துயிலின்பரிசேலோரெம்பாவாய். (எ)

(இதன் பொருள்) அன்னே - தாய்போன்றவளே !, இவை உம் சில ஓ - வீடுதோறும் செல்வதும் உறங்குவோரை எழுப்புதலும் ஆகிய இவை எங்கள் கடமைகளுள் சில போலும், பல அமரர் - பல தேவர்கள், உன்னற்கு அரியான் - நினைத்தற்கு அரியவனும், ஒருவன் - ஒப்பற்றவனும், இருஞ்சீரான் - நீண்ட புகழுடையவனுமாகிய பரம் பொருளின், சின்னங்கள் கேட்ப - அடையாளங்களைக் கேட்குந்தோறும், சிவன் என்று ஏ வாய் திறப்பாய் - சிவா என்று சொல்லிக்கொண்டே நினது வாயைத்திறப்பாய், தென்னா - தென்னவனே, என்னாமுன்னம் - என்று கூறி முடிப்பதற்குள், தீ சேர் மெழுகு ஒப்பாய்-நெருப்பினிடைப் பட்ட மெழுகுபோல் உருகுவாய், என் ஆனை - எனது தந்தை, என் அரையன் - எனது தலைவன், இன்அமுது - இனிமை பயக்கும் அமிழ்தமானவன், என்று எல்லோரும் வெவ்வேறாய் சொன்னோம் கேள் - என்றிவ்வாறு எல்லோருமாகவும் தனித்தனியாகவுங் கூறினோம். அவற்றைக் கேட்பாயாக, இன்னம் துயிலுதியோ-யர்ங்கள் இத்துணைச் சொல்லிக்கேட்டும் உறங்குகின்றாயோ, வன் நெஞ்ச பேதையர்போல் - வலிய நெஞ்சினையுடைய அறிவிலிகளைப்போல,

வாளா - வீணாக, கிடத்தி ஆல் - படுத்து அசைவற்று உறங்குகின்றனை யாதலின், என்னே துயிலின் பரிசு-நினது உறக்கத்தை என்னவென்று சொல்வது.

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் இறைவன் போந்து உயிர்கட்குத் தலையளித்தலை யறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட்டில் இறைமாட் டன்புடையார் இறைவனது திருப்பெயர்களைக் கேட்டவுடனே அன்புபெருகி யுருகுவரென்பது உணர்த்தியருளினர். இதுகாறும் கூடியகன்னியர்கள் ஒவ்வொரு வீடுதோறுஞ் சென்று வாயிற்புறத்து நின்று, உறங்குங் கன்னியரை அழைத்துத் துயினீக்கித் தம்முடன் கூட்டிக்கொள்ளு முயற்சியில் சலிப்படைந்தாராய் இத் திருப்பாட்டில் எழுப்பப்படும் கன்னியரைத் தாயே என்றழைப்பார் அன்னே என்றார். இங்ஙனம் விளித்ததும் வாராமையான் உள்வெதும்பிக் கன்னியர் வீடுதோறுஞ் சென்று உறங்குவோரை யெழுப்பும் வன்மையை நினைப்பாராய் இவையுந் தங்கள் கடமைகளுள் சிலவாக வமைந்தனவே யென்றிரங்குவார் இவையுஞ் சிலவோ என்றனர். ஓகாரம் ஐயப்பொருட்டு. தம்மைநோக்கேன் பயனுவதென்று திண்மைகொண்டவராய்க் கன்னியரை எழுப்புதல் கடனாகக்கொண்டு அவளதன்பின் பெருமையை அறிவிப்பார் பல அமரர் உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான் சின்னங்கள்கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய் என்றனர். பல அமரர் - இந்திரன் முதலியோர் யாவரையுங் குறித்தது. முற்றும்மை தொக்குநின்றது. உன்னல் - நினைத்தல். காண்டற்குமரியவன் நினைத்தற்குமரியவனென்னும் பொருட்டு. எச்சவும்மைவிகாரத்தாற்றொக்கது. கருவிகரணங்கட் கெட்டாத பொருளுண்டோ இல்லையோ யென்பார்க்கு அஃது யாண்டும் பரந்துநின்று அநுபவத்திற் றலைப்படுகின்ற நிலைபற்றி ஒருவனென்றார். ஒப்பற்றவனென்னும்பொருட்டு. 'ஒப்புடையனல்ல னொருவனல்லன் ஓரூரனல்லனோருவமனில்லி' (அப்பர்-வினாவிடைத் திருத்

தாண்டகம் – 10) என்பது தமிழ்மறை. பரம்பொருளின் பெருமை அளவுகடந்ததென்பார் இருஞ்சீரானென்றூர். சீர்-பெருமை.அரியவனும்ஒப்பற்றவனும் முடிவில் பெருமையுடையோனுமாகிய இறைவனை, அன்பால் வழிபடுவோர், அவனது திருவுருவத்தமைந்த செம்மைதரும் அடையாளங்களைத் தோடுடைய செவியன், விடையேறி, தூவெண் மதிசூடி, காடுடையசுடலைப் பொடிபூசி என்றிவ்வாறு மொழிதலும் கேட்டவுடனே சிவசிவ என்று வாய்திறந்து அலறி அன்பால் கசிந்துருகுவராதலின் சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய் எனவும், தென்னு என்னுமுன்னந் தீசேர் மெழுகொப்பாய் எனவும் என்றருளினர். கண்ணிற்குங் கருத்திற்கு மெட்டாப் பரம்பொருளை உள்ளத்தினுணர்தற்கு அதன் திருப் பெயரையும்இலக்கணத்தையுங் கேட்டல் இன்றியமையாததாகும். இவையே அடையாளங்களால் புலப்படுக்கப்படுதலின் சின்னங்கள் கேட்டமாத்திரத்தே உணர்ச்சி கூடிச் சிவாவென வாய்திறக்க நேர்ந்ததென்பது. தென்னு என்பது தென்னவனே என்னும் பொருட்டு. தென்னுட்டில் சிவனுகப் போற்றப்படுபவனென்பது கருத்து. "தென்னுடுடைய சிவனே போற்றி, எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி" (போற்றித் திருவகவல்-164 – 165) என்பது திருவாசகம். "தென்னவ னெனை யாளுஞ் சிவனவன்" (திருவின்னம்பர் – திருக்குறுந்தொகை – 5) எனும் ஆளுடைய அரசுகள் திருவாக்கும் அதனையே வலியுறுத்துவதறிக. பாண்டிநாட்டை அங்கயற்கண்ணம்மையாரோடு அரசர் பெருமானுக ஆண்ட காரணம்பற்றித் தென்னவனெனக் கூறுதலுமொன்று. இக்கன்னியரின் அன்பினுயர்வை அறிவிப்பார் தீசேர்மெழுகொப்பா யென்றனர். திருப்பெயர்கேட்ட துணையானே உருகுதல் அன்புடையார் மாட்டுள்ளதென்பது முதற்றிருப்பாட்டின் விளக்கவுரையில் காண்க. என்னானை என்னரையன் இன்னமுது என்பவற்றின் சிறப்பு மூன்ருந் திருப்

பாட்டின் விளக்கவுரையிற் குறித்ததறிக. ஆனை என்பது ஆன், ஐ எனப் பிரித்து ஆன் சாரியையாய் ஐ தந்தையெனப் பொருள்தந்து நின்றது. இன்னமுது - திருவருளில் திளைக்கச்செய்யும் மருந்து. இவ்வாறு பல படியாக யாங்களெல்லாரும் வாய்விட்டரற்றினேம். அது பேரொலியாக இக்கன்னியர் கேட்டிராளென்று தனித்தனி யாகவும் கூவினேம். அங்ஙனங் கூவியும் நீ எழுந்திருந்தா யல்லை யென்பார் இன்னந் துயிலுதியோ என்றார். இன்னம் என்புழி உம்மைதொக்கது. இங்ஙனம் பாடியும் அழைத் தும் எழுந்திராமையால் அவளது நெஞ்சம் வன்மை யுடையதென்பார் வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால் என்றார். அருட்பாடலைக் கேட்டபோதே உருகுந்தன்மை யிலாமையான் அவளதுநெஞ்சம் கனகல்லை யொத்ததென்பதும் அவ்வாறிருத்தற்குக் காரணங் கற்பிப் பார் அவளதறிவின்மை யென்பதுங் குறிக்கப்பட்டன. வாளா - வீணாக. கிடத்தியால் - அசைவற்றுப் படுக்கையி லுறங்குகின்றமையால், இங்ஙனம் இவணிலையிருத்தலால் துயிலின்றன்மை அதிசயிப்பார் என்னே துயிலின் பரிசு என்றனர். ஏதுஞ் சொல்வதற்கின்றி இரங்கின ரென்பதாம். (7)

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
 மேழிலியம்பவியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
 கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
 யாழியானன்புடைமையாமாறுமிவ்வாறோ
வூழிமுதல்வனாய்நின்றவொருவனை
 யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய். (அ)

(இதன் பொருள்) கோழிசிலம்ப - சேவல் கூவவும், எங்கும் குருகு சிலம்பும் - எல்லாவிடங்களிலும் சிறு பறவைகள் ஒலிக்கின்றன, ஏழில் இயம்ப எங்கும் வெண்

சங்கு இயம்பும் - திருப்பள்ளி யெழுச்சிக்காலத்தை யறிவிக்கக் குழலூதப்பெறுதலும் எல்லாவிடங்களிலும் வெள்ளிய சங்குகள் ஊதப்படுகின்றன, கேழ் இல் பரம் சோதி - உவமையில்லாத மேலான ஒளிவடிவினனும், கேழ் இல் பரம் கருணை - உவமையில்லாத மேலான கருணை யாளனுமாகிய இறைவனது, கேழ் இல் விழு பொருள்கள் - உவமையில்லாத மேலான பொருள்சேர் புகழ்களை, பாடினேம் - பாடினேமாக, கேட்டிலை ஓ - கேட்கவில்லை போலும், ஈது என்ன உறக்கம் ஓ - இங்ஙனமறிவின்றித் துயில்வது என்ன முறைமையோ, வாய்திறவாய் - வாயைத் திறந்து பேசினாயுமல்லை, வாழி - வாழ்வாயாக, ஆழியான் - நமக்கு அரசனாகும் இறைவற்கு, அன்புடைமை ஆமாறும் இவ்வாறு ஓ - அன்புசெலுத்தும் முறை இவ்வகைதானோ. ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை - இனியாவது உலகி னுக்கு முதலவனாக விளங்கும் ஒப்பற்றவனும், ஏழை பங்காளனை ஏ - உமைபங்கனுமாகிய இறைவனையே, பாடு - பாடுவாயாக.

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் அன்புடையார் இறைவனது திருப்பெயரையும் அடையாளங்களையும் கேட்டலுமே அன்புபெருகி யுருகுவரென்று அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் வைகறைப்போதில் மேலான சோதியாயும் கருணைவடிவாயுமுள்ள இறைவனது பொருள் சேர் புகழினைப்பாடுவது கடமையென்று அறிவிப்பா ராயி னர். எழுப்பவந்த கன்னியர் அனைவரும் இங்கு எழுப்ப நின்ற கன்னியரை முன்னெருங்கி யறிந்திருந்தாராதலின் அவளை யாதொரு மொழியாலும் விளியாது எழுப்பத் தொடங்குவார் வைகறைப்போதில் உலகினிகழ்வன அறி வுறுத்தலுற்றார். மிக்க நெருங்கினாரை முதலில் விளியாது பேசுதல் உலகியன் மரபு. காலை நிகழ்ச்சிகளில் சேவல் கூவு தலும்பறவை யொலித்தலும் முதன்மை பெறுவனவாதலின் கோழி சிலம்ப சிலம்புங் குருகெங்குமென்றனர்: ஈண்டுக்

கோழியென்றது சேவலைக் குறித்தது. சிலம்ப – கூவ. பறவைகளுள் சேவல் வைகறைப் போதினை முன்னரறி கின்ற இயல்புபற்றி முன்வைக்கப்பட்டது. அது கூவு மியல்பினைச், "செஞ்சிறை யடித்துக் களத்தினை நிமிர்த் துச் சிரம்வளைத்தொலித்த சேவலனே" (திருப்போரூர்ச் சந்நிதிமுறை—604) எனச் சிதம்பர சுவாமிகள் குறித்தமை காண்க. சேவல் கூவுதலைக் கேட்ட பிற பறவைகளும் கூவினவென்பார் சிலம்புங் குருகெங்குமென்றனர். குருகு– பறவைப் பொது. எங்கும் என்றது எல்லாப் புறங் களிலுமென்னும்பொருட்டு. 'புறஞ்சிறைப் பொழிலும் பிறங்குநீர்ப் பண்ணையும், இறங்கு கதிர்க் கழனியும் புள்ளெழுந் தார்ப்பப், புலரி வைகறை' (ஊர்காண்காதை– 1–3) எனச் சிலப்பதிகாரத்துள் குருகுகள் சிலம்பிய விடங் கள் குறிக்கப்படுவன காண்க. இங்ஙனம் அஃறிணைப் பொருள்கள் துயில்நீத்து ஒலியாநிற்ப அறிவுடை மக்களுள் பணியாளர்கள் எழுந்தனரென்பார் ஏழிலியம்ப வியம்பும் வெண்சங்கு எங்கும் என்றனர். ஏழில் என்பது ஓரிசைக் கருவி. புலவர்கள் பலரும் தங்கட் கருத்துக்குரிய முறை யில் பொருள் கொள்ப. எழில் என்றது ஏழில் என நீண்டு திருப்பள்ளியெழுச்சிக் காலத்தைக் குறித்ததென்ப. ஏழு இசைகளுக்கிடனாய நாதசுரம் என்னுந் துளைக்கருவியென் றுங் கூறுப. சித்தாந்த இதழில் திரு. புலவர் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் எழுதிய கட்டுரையைக் காண்க. பண்டைக்காலத்தில் பாணர் இசை பாடுவோராவர். பெரும்பாணர் என்பது குழலர் எனவும், பாணரெனவும் அடியார்க்கு நல்லாருரைத்தலான் வைகறை பாடும் பாணர் ஏழிசைகளுக்கிடனாயகுழலை யூதினரென்க. குழல் ஒன்பது துளைகளையுடைத்தாய் இடக்கையிற் பெரு விரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்கு விரலும் ஆகிய ஏழு விரல்கள் வைத்து இடைநின்ற ஏழு துளைகளில்

ஏழிசை பயக்கும் இசைக்கருவி. இவ்விசைக் கருவி ஊதப் படலும் வெள்ளிய சங்குகள் ஊதப்பட்டன. ஊதுத லென்ற வினைக்கேற்ப ஊதப்படுவதாய குழலையும் சங்கினை யும் ஒருங்கே வைக்கப்பட்டதறிக. திருக்கோயில் தோறும் வைகறையாமத்தில் வெண்சங்குகள் ஊதப்பெறுதல் பண்டைய வழக்கு.

... ... செழிய
ஞெங்குயர் கூடலூர் துயிலெடுப்ப
நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவலுயர்த் தோனியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
அறத்துறை விளங்கிய வறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்
வாலவெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
காலை முரசங் கனைகுர லியம்ப.

ஊர்காண்காதை — 6-14

எனவரும் சிலப்பதிகாரவடிகளுள் தெய்வத்தானங் களிலும், தவநிலையோர் திருமடங்களிலும், அரசர் அரண் மனைகளிலும், வெண்சங்கு ஊதுதல் மரபென விளக்கப் பட்டதறிக. எங்கும் என்பது மேலுரைத்த இடங்களி லெல்லா மெனக்கொள்க. உயர்திணைப் பண்புவாய்ந்த இசைப்பணியாளர்கள் தத்தங் கடமையைச் செய்தனர், இறைவனுக்கு அடிமைகளாகும் யாம் செய்யக்கடவனவற் றுள் தலையாயது பாடுதலாதலின் பாடினோமென்றனர். விரைவுப்பொருள் குறிக்கப் பாடினோம் என்று இறந்த காலத்தால் குறித்தனரென்க. பாடலுக்குள் பொருளா வது இறைவனது தன்மைகளாதலின் கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை, கேழில் விழுப்பொருள்கள் என்றார். கேழ் - ஒப்பு. வேற்றுப்பாடலின்றி இறைவனது திருவருட்

பெருமை விளங்கிய அருட்பாடலைப் பாடினோமென் றுணர்த்துவார் விழுப்பொருளென்றார். விழுப்பொருள் - மேலானபுகழ். அப்புகழ் இறைவனைப் பற்றியதென பரஞ்சோதி, பரங்கருணை யென்றனர். பரஞ்சோதி என்ப தன் விளக்கம் மேலே யிரண்டாந் திருப்பாட்டின் விளக்கத் திற் காண்க. பிறப்பை யறுப்பது பரங்கருணையாலாவதே யாம். அடியோங்கள் இறைபாடலைப் பாடினோமாதலின் எங்கள் குரலைக் கேட்டுப் பழகியவள் நீ இங்ஙனம் எழுந் திராமையான் அப்பாடல்களைக் கேட்டிலை போலும், அவ் வாறிருத்தற்குக் காரணம் நின் அறிவில்லாத உறக்கமென் பார் கேட்டிலையோ ஈதென்ன வுறக்கமோ என்றனர். அவ் வுறக்கத்தை இழித்துரைத்தலு மொன்று. அவ் வுறக்கம் எழுதலைத் தடை செய்திடினும் வாய் திறந்து பேசினுயு மல்லை; வாயைத் திறந்து பேசுதல் என்பது வருவாரை வாருங்கள், இதோ யானும் வந்தேன் என்பன போன்ற மொழிகளைப் பகர்தல். இங்ஙன முபசரியாமையான் நீயே வாழ்வாயாக வென்பார் வாழியென்றார் இவ் வைகறைப் போதில் இறைவன் பொருள்சேர் புகழ்களைப் பாடாமை யும், பாடுவார் பாடலைக்கேட் டுருகாமையும் பாடிய அடி யார்தமை பேணாமையும் அன்பின்மைக் கறிகுறியாவன. அவை அன்புடைய இக்கன்னியரிடத்துக் காணப்பெறுதற் கிரங்குவார் ஆழியா னன்புடைமை ஆமாறும் இவ்வாறோ என்றனர். ஆழியான் - அரசன். ஆணைச்சக்கரமுடைய வன். உயிர்கள் யாவரையும் அரசனைப்போல் காத்தல் பற்றி இறைவனுக்கும் அவனடியார்கட்கும் அன்புடைமை உயிர்கட்குக் கடனாமெனப் புலப்படுக்கப்பட்டது. ஆமா றும் - ஆம், ஆறு, உம் - ஆகும் நெறியாவதும் என்னும் பொருட்டு. "இனி ஆழியான் திருமாலெனக் கொண்டு திருமால் இறைவனிடத்து அன்பு செய்யும் நெறியும் இவ் வாறு கொல்எனப் பொருள் கூறி, அறிதுயில் மேற்கொண்டு நீயும் அன்பு செய்கின்றனை போலும் என்பது கருத்தாகக்

கோடலுமொன்று" என்பது கதிர்மணி விளக்கம். இவ்வாறே என்புழி ஓகாரம் ஐயப்பொருட்டு. கிடக்கையைக் கண்டு அன்பில்லார்போல் நீ கருதப்படினும் நின் தோழமை எங்கட்கு உனது அன்புடைமையைப் புலப்படுத்துகின்றமையின் யாங்கள் உன்னை விரும்புவதெல்லாம் இறைவனைப் பாடுகவென்பதேயாகும் என்பார் ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை ஏழை பங்காளனையே பாடு என்றனர். ஊழி முதல்வன் - மஹாபிரஹ்மா என்பது மஹாமஹோபாத்யாய - உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் குறிப்பு. 'ஊழி முதல்வ னுயிர்தரினல்லது' (மணிமேகலை சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை - 172) என்ற அடியினுரைக் குறிப்பு காண்க. உலகங்களை யாக்கவல்ல முதல்வனாய் மஹாபிரஹ்மாவாய் நின்ற முறைமையினைப்

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமகன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர் செழுநிலனி னினிலை பெறுவரே
— திருச்சிவபுரம் - திருவிராகம் - பண் - நட்டபாடை — 1

எனத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாட்டானுணர்க. மகா சங்கார காலமாகிய மாப்பேரூழியின் பின்னரு முண்மைபற்றி ஊழி முதல்வன் என்று பொருள் கோடலுமொன்று. 'சங்காரமே முதல்' என்ற சிவஞான போதத்து முதற் சூத்திரத்தின் மேற்கோளி னுட்பொருள் நினைவு கூர்க. நின்ற என்பது இறைவன் உலகெலாமாகி வேறுயுடனாய் விளங்கிய பரிசினையும் ஒருவன் என்பது அவனது சுதந்தரத்தினையும், பிறரைத் தொழிற்படுத்து முறைமையினையும் குறித்தன. இங்ஙனம் உயிர்கட்கருளும் இறைவன் தன்னுடன் நீக்கமின்றியுள்ள சத்தியைச் சார்ந்து நின்றே அருளுவான் என்பார் ஏழை பங்காளனையே என்றனர். ஏழை — பெண். உமையம்மையாரைக் குறித்தது.

ஏகாரம் பிரிநிலை, தேற்றமுமாம். மலமாசு துடைப்பான் வேண்டி படைத்தலின் முதல்வனும், அங்ஙனம் பிறந்த உயிர்களைத் திரோதான சத்தியாற் பரிபாகஞ் செய்வித்துத் திருவருளாலேற்றி யாட்கொள்ளும் முறைமையால் ஏழை பங்காளனுமாய்ப் போற்றப்பட்ட துணர்க. தானும் அருளுமாய் அருள் புரிவதற்கு நன்றியாவது பாடுதலே யாகுமென வுரைப்பார் பாடு என்று கூறினார். பாடு என்புழி வியங்கோளீறு தொக்கது. இங்ஙனம் கன்னியரனை வரும் ஒருவரை யொருவர் எழுப்பிக்கொண்டு ஒன்று கூடினர் என்பது. (8)

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
　　பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
　　முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
　　சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
　　லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய் (௯)

(இதன் பொருள்) முன்னை பழம் பொருட்கு உம் முன்னை பழம் பொருள் ஏ - முற்பட்டனவாகிய பழைய பொருள்கள் யாவற்றிற்கும் முற்பட்ட பழைய பொருளானவனே !, பின்னை புதுமைக்கு உம் பேர்த்தும் அ பெற்றியனே - பிற்பட்டனவாகிய புதிய பொருள்க ளெல்லாவற்றிற்கும் மீண்டும் அப்புதுமைத் தன்மை வாய்ந்தவனே !, உன்னை பிரானாக பெற்ற உன் சீர் அடியோம் - உன்னை ஆண்டவனாகக் கிடைக்கப்பெற்ற உனது உண்மை அடிமைகளாகிய யாங்கள், உன் அடியார் தாள் பணிவோம் - உன் தொண்டர்களது திருவடிகளை வணங்குவோம், ஆங்கு அவர்க்கு ஏ பாங்கு ஆவோம் - அங்ஙனமே அவர்களுக்கே உரிமையுடையவர்கள் ஆவோம், அன்னவர் ஏ எம் கணவர் ஆவார் - அத் தகுதி வாய்ந்த அடியார்களே எங்

கட்கு நாயகர்களாவார்கள், அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம் - அவர்கள் விரும்பிக் கூறிய முறையே அடிமையாக அவர்தங் குற்றேவலைப் புரிவோம், இன்னவகை ஏ எமக்கு எங்கோன் நல்குதியேல் என்ன குறையும் இலோம் - மேற்குறித்த முறையே எங்கட்கு எங்கள் தலைவனாகிய நீ அருள் புரிவையாயின் எந்தக்குறைபாடு மில்லாதவர்களா யிருப்போம் என்பது.

(**விளக்கம்**) மேலைத் திருப்பாட்டுக்களில் கன்னியர்கள் ஒருவருக்கொருவர் அதிகாலை நிகழ்ச்சிகளையும் இறைவனைப் பாடுவது தங்கள் கடமையெனவும் அறிவுறுத்தி ஒன்றுகூடிய துணர்த்திய அடிகள் இத்திருப் பாட்டில் அவர்கள் தங்கள் வைராக்கியமாகிய உறுதியினை வெளிப்படுத்துதற்கு இறைவனை முன்னிலைப்படுத்தி முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே! என விளித்தாரென வுணர்த்தினார். இஃது இறைவன் புகழையே குறித்தது. திருக்கோவையாருள் "மூப்பானிளையவன் முன்னவன்பின்னவன் முப்புரங்கள்,வீப்பான்" (312) என்றதனுள் மூப்பான் என்பது எல்லார் யாக்கைக்கும் முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடைய னாதலின் எல்லார்க்குந் தான் மூப்பவன் எனவும், இளையவன் என்பது பின்றோன்றிய யாக்கையையுடைய ரெல்லாரும் மூப்பவும் தான் நிலைபெற்ற விளமையை யுடையனாதலின் எல்லார்க்கு மிளையான் எனவும், முன்னவன் என்பது உலகத்திற்கு முன்னுள்ளோன் எனவும், பின்னவனென்பது உலகத்திற்குப் பின்னுமுள்ளோான் எனவும் பேராசிரியர்உரைத்த விளக்கங்களையுணர்க. இதனானே இறைவனது சத்தாந் தன்மை யுரைக்கப்பட்டது. பழமை கால தத்துவத்தா லுணரப்படுவது. எனவே காலத்தால் பழமை வாய்ந்த பொருளினும் பழமை வாய்ந்ததென அறியக் கிடக்கின்றது. இதனால் இறைவனது அநாதி

முறைமையான பழைமை துணியப்படும். புதுமை யென ஒன்று தோன்றுமாயின் அதற்கும் புதுமையாயுள்ள பொருள் இறைவனே என்பது கருத்து." புதியரிற் புதியன் மூதக்கார்க்கு மூதக்கவன் (சூரனமைச்சியற் படலம் - 127) எனக் கந்தபுராணமும், 'முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த முத்தனே' (கோயிற்றிருப்பதிகம் - 2) எனத் திரு வாசகமும் அருளியவை யறிக. பழம்பொருட்கும் புதுமைக் கும் என்புழி உம்மைகள் முற்றும்மை. பேர்த்தும் என்பது மீண்டும் என்னும் பொருட்டு. பழமையாயிருந்தது போலவே புதுமையாயும் என்பது கருத்து. அப்பெற்றி யன் - புதுமைத் தன்மையன். இங்ஙனம் பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயுமுள்ள சிவபரம் பொருள் என்றுமுண்மையாகுஞ் சத்தாதலே யன்றி என் றும் ஒரு பெற்றித்தாய் உயிர் உலகங்களைப் போல தனது சத்திமடங்குதலின்றி மேம்பட்டு நிற்றலின் எவ்வாற்று னுஞ் சித்தாதல் பெறப்பட்டது. எனவே இறைவன் சிவ சத்தாய்க் கொள்ளக்கிடந்தமையின் அவன் தன்னைத் தலைவ னாகக் கொள்வதே கடமை யென்பார் உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம் என்றனர். இறைவன் தன்னைப் பிரானென் றுணர்த்துதலும் உயிர்கள் தாம் அவனுக்கு அடிமையென் றுணரும் முறைமையை,

பவனெம்பிரான்பனிமாமதிக்கண்ணிவிண்ணோர்பெருமான்
சிவனெம்பிரான்என்னையாண்டுகொண்டானென்சிறுமைகண்டும்
அவனெம்பிரானென்னநானடியேனென்னவிப்பரிசே
புவனெம்பிரான்றெரியும்பரிசாவதியம்புகவே —திருச்சதகம் - 9

என மணிவாசகனார் உணர்த்தியதறிக. பெற்ற என் னும் எச்சம் காரணப்பொருட்டு. இறைவனைத் தலைவனாக வுணர்ந்த ஞான்றே அடிமைத் தன்மையை யுணரப்பெற்ற தென விளக்கியது. 'வாழ்வெனும் மையல் விட்டு வறுமை யாஞ் சிறுமை தப்பித், தாழ்வெனுந்' தன்மையுடைய ராத

வின் சீரடியோம் எனக் குறித்தார். "சீரடியார், குலம் பணி கொள்ளவென்னைக் கொடுத்தோன்" (திருக்கோவையார் - 54) என்பதனுக்குப் பேராசிரியர் "தன் மெய்யடியாரது கூட்டங் குற்றேவல் கொள்ள என்னைக் கொடுத்தவன்" எனச் சிறப்புரை யருளியதறிக. ஈண்டுச் சீர் என்றது உண்மையெனப் பொருள்பட நின்றது. இறைவனைப் பிரானென்றுணர்ந்த வுணர்வு மறத்தலின்றி வாழும் விருப்பமுடைய ராதலின் உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் என்றனர். "சிவபக்தர்மாட்டன்பு செய்து மனஞ் சொற் செய்கைகளான் அவர்வழி நிற்பார்க்கு உலகிய லுணர்வு மாறி சிவாநுபூதி யுணர்வே மேம்படுதல்" என்பது சிவஞானபாடியம். (கழகப் பதிப்பு- 509) இறைவனைப் பிரானென் றறிந்தார் அவர்தந் திருவடி வணங்குதலின்றி அவர்தம் மடியாரை வணங்குதல் யாது காரணமெனின் அங்ஙனம் உண்மை ஞானந் தலைக்கூடின உயிர்கள் வினை வயத்தான் மறதியுறின் அதனை மாற்றுதல் அடியார்தங் கடமையாதல்பற்றி அடியார் தாள்பணிவோமென்றனர். அடியராவார் அரும்பணியை,

கூடா வொழுக்கம் பூண்டும் வேடம்
கொண்டதற் கேற்ப நின்றெரண்டரொடு பயிறலிற்
பூண்டவவ் வேடங் காண்டொறுங் காண்டொறும்
நின்னிலை யென்னிடத் துன்னி யுன்னிப்
பன்னா ளேனைக்கின ராகலி னன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலு மாகலின்
எவ்விடத்த வருனை யெண்ணினர் நீயுமற்
றவ்விடத் துளையெனற் கையம் வேறின்றே. (461 - 8 - 16)

... ... கருணையொடு
நிலையில் பொருளு நிலையியற் பொருளும்
உலையா மரபினுளங் கொளப் படுத்திப்

புல்லறி வகற்றி நல்லறிவு கொளீஇ
எம்ம னோரையு மிடித்து வரைநிறுத்திச்
செம்மை செய்தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத் தகாதனவே. (461 - 21 - 29)

எனச் சிதம்பர மும்மணிக்கோவையில் குமரகுருபரவடிகள் சிறப்பித்தமை யுணர்க. தாள்பணிதல் - திருவடி வணக்கங் குறித்தலின் அடியாரிடத்து அடைக்கலம் அடைந்தமை யுணர்த்தியது. அதனால் தஞ் செயலற்றமையைக் குறிக்க ஆங்கு என்றனர். தஞ் செயலற்றார் தாமொரு உடைப் பொருளென் றுணர்ந்தவராதலின் தங்களை நாதனடியார் தமக்கும் உடைப்பொருளாகக் கருதுவார் அவர்க்கே பாங் காவோம் என்றனர். ஏகாரம்-பிரிநிலை. அடியாரல்லாதாரை வேறுபடுத்தியது. பாங்கு - உரிமை. மனமொழி மெய் களை அடியவர் வசம் ஒப்புவித்தலைக் குறித்தது. உடல் பொருளாவிகளை யுரிமையாக்க லென்றலுமொன்று. ஆவோம் என்றது அவர் தம் இசைவை விளக்கியது. இங்ஙனம் உரிமைப் பெற்றவரைக் குறிக்க அன்னவரே என்றனர். ஏகாரம் - பிரிநிலை. உரிமை யிசைவைப் பெற்றவர் தம்மையுடையவராதலின் எங்கணவராவார் என்றனர். தலைமகள் இசைவு பெற்றபின்பே தலைமகன் கணவனாதல் உலகியல் மரபு. ஒருவர்க்கு மற்றொருவர் அடிமையாதல் அறிவின்மையானும், ஆற்றலின்மையானும், பொருளின்மையானும் நிகழ்வது. இவ்வடியார் பேரறி வுடையராதலானும், அருட்செல்வ முடையராதலானும் அருட்செயல் விளைக்குமாற்ற லுடையராதலானும் உயிர் களை அடிமைகோடற்குத் தகுதியுடைய ரென்றறிக. ஆத லால் அவர் மொழிகடவாது விரும்பிப் பணித்தபடியே பணி செய்யுங் கடப்பாடுடையோம் என்றறிவிப்பார் அவருகந்து சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் என்றனர். தொழும்பு - கடமையாக மேற்கொள்ளும் அடிமைத்

தன்மை. அடிமைகளாயினூர் பக்குவமறிந்து ஏற்றவாறு விரும்பிய முறையே என்று குறிப்பார் அவருகந்து சொன்ன பரிசே என்றனர். பரிசே என்புழி ஏகாரம் தேற்றம். பரிசு - முறை. இங்ஙனம் சிவனடியார் தமக்குப் பணி செய்வது, இன்பநிலை தானுகக்கூடுமென்னுங் கருத்து பற்றியேயாம். தாயுமானூரும், 'அன்பர் பணிசெய்ய வென்னை யாளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' (பராபரக்கண்ணி – 155) என அருளியதறிக. 'பண்டே நின்னடியே னடியாரடியார் கட்கெல்லாம், தொண்டே பூண்டொழிந் தென்றொடரா மைத் துரிசறுத்தேன் (திருமழபாடி – பண் – நட்டராகம் – 4) எனச் சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளியது நினைவுகூர்க. இங்ஙனம் உறுதிமொழிந்த கன்னியரனைவரும் தமக்குத் தலைவனுகும் இறைவனை யாங்கள் விரும்பிய இவற்றினை யருள்வீராயின் எவ்வகையான குறையுடையோமல்லோ மென்பார் இன்னவகையே யெமக்கெங்கோன் நல்குதியேல் என்ன குறையுமிலோம் என்றனர். இன்னவகையே என் புழி ஏகாரம் தேற்றம். 'குறைவிலோங் கொடுமாநுட வாழ்க்கையால், கறைநிலாவிய கண்டனெண் டோளினன், மறைவலான் மயிலாடுதுறையுறை, இறைவனீள் கழலேத்தி யிருக்கிலே' (திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை - 5) எனும் ஆளுடைய வரசுகள் தேவாரம் நினைவுகூர்க. இது கன்னியரனைவரும் ஒரு சேரப்பாடியது. (9)

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
 போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
 வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு
மோதவுலவாவொருதோழன்றொண்டருளன்
 கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன்பேராருற்றாராரயலா
 ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். (௧௦)

(இதன் பொருள்) அரன் தன் கோயில் - சிவபெருமான் றிருக்கோயிலில் விளங்கும், கோது இல் குலத்து பிணாப் பிள்ளைகாள்-குற்றமின்மையாக்கி நன்மைதரு மியல்புடைய பணிப்பெண்களே !, பாதாளம் ஏழினும் கீழ் சொல் கழிவு பாதமலர் - கீழுலகங்க ளேழினுங் கீழாகச் சொல்லி னளவைக்கடந்த நிலையிலுள்ளது இறைவனது தாமரை போலுந் திருவடிகள், போது ஆர் புனை முடி உம் எல்லா பொருள் முடிவு ஏ - மலர்கள் அணிந்து அலங்கரிக்கப் பட்ட திருமுடியும் எல்லாப் பொருள்களின் முடிவிடமாக வுள்ளது, ஏ - அசை, பேதை ஒருபால் திருமேனி - (அளத் தற்கரியவ னாயினும்) உமையம்மையைத் தனது திருமேனியி லொருபாக முடையன், திருமேனி ஒன்று அல்லன் - அவன் ஏற்கும் உருவங்கள் ஒன்றென்று கூறவொண்ணாது, விண் ணோரும் மண்ணும் துதித்து ஆலும் வேதம் முதல்-விண்ண வரும் மண்ணவரும் பரவிக்களிக்கும் மறைகளுக்கு முதல் வன், ஓத உலவா ஒருதோழன் - புகழ்ச்சி நீங்கா ஒப்பற்ற உயிர்த்துணைவன், தொண்டர் உளன் - தொண்டர் மனங் கோயிலாகக் கொண்டுள்ளவன், அவன் ஊர் ஏது - இறை வனது இடம் யாது ?, அவன் பேர் ஏது - அவனது பேர் யாது ?, உற்றார் ஆர் - அவருக்கு உறவினர் யாவர் ?, அயலவர் ஆர் - அயலவர் யாவர் ?, அவனைப் பாடும் பரிசு ஏது - அப்பெருமானைப் புகழ்ந்துபாடுந் தன்மை எவ்விதம் ?

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் கன்னியர் தம் உறுதி யினை அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் அவர் எதிர்போந்த திருக்கோயிற் பணிப்பெண்களைக் கண்டு இறைவனது உண்மையியல்பினை ஆராய்வராய் வினவிய முறையை யுணர்த்தலுற்றார். திருக்கோயிற் பணிப்பெண் களைக் கண்ட கன்னியர் அவர் இறைவன்பால் அணுக்க முடையரெனக் கருதி இறைவன தியல்பு ஆராய்வாராய் அவர் தம்மை வினவ, கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள் என விளித்தனர். மெய்யன்பர்கள்

தம் முன்னெதிர்ப்படும் அன்பர்களைத் தம்மினும் அன்பின் மிக்காரெனக் கருதி இறையருளைப் பெற்றுத் தருமாறும், தம்மை இறைவன் அடிமை கொள்வரோவென வினவுமாறும் இறைஞ்சி வேண்டுவது அவர்தம் ஆர்வத்தால் நிகழ்வதாம். திருவாரூர்த் திருத்தொண்டர்களைக் கண்ணுற்றதும் திருநாவுக்கரசரும் சுந்தரரும் பாடிய திருப்பதிகங்களைக் காண்க. அங்ஙனமே தம்மையொத்த பெண்மக்களைக் காண்டலும் ஆர்வமிக்கவராய் அவர் பணியாற்றுமிடம் திருக்கோயிலாதலாலும், குற்றமற்ற நன்மை பயக்கும் தொண்டரினத்தைச் சார்ந்தவராதலாலும், அவர்கள் இறையியல்பு நன்குணர்ந்தவராக உட்கொண்டு வினவினரென்க. பிணா என்பது உயர்திணைப் பெண்பால் மரபுப் பெயர். 'பெண்ணும் பிணாவும் மக்கட்குரிய' என்பது தொல்காப்பியம் (மரபியல்-சூத் - 61). அங்ஙனம் ஒழுக்கமுடைய தொண்டர்க்குத் தலைவனுவான் அரனென வுணர்த்தப்பட்டது. தீவினைகளை அரிப்பவன் என்னும் பொருளுடையது. இம் மொழியின் விளக்கத்தை அப்பர் பெருமான்,

> தொடருந் தொண்டரைத் துக்கந் தொடர்ந்துவந்
> தடரும் போதர னருள் செய்பவர்
> கடலின் நஞ்சணி கண்டர் கடிபுனல்
> படருஞ் செஞ்சடைப் பாலைத் துறையரே.
>
> —திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை - 8

எனுந் திருப்பாட்டினுட் குறித்தமையறிக. கோயில் என்பது இறைவனுறைவிடம் குறித்தது. யாண்டும் வியாபகமாயுள்ள பரம்பொருள் பாலிற்படு நெய்போல மறைந்து நிற்பினும் தயிரின் கண்ணதாகிய நெய்போல வெளிப்பட்டுத் திருக்கோயில்களினிடத்தே விளங்கக் காண்டலால் தொண்டர்கள் பழகுதற்குச் சிறப்பிடமாயிற்று. உண்மையொழுக்கமும் சிவநேயமுமுடையார்

இறைமுது நிலையைத் தெளிவிக்குந் தக்காராதலின் அவர் தம்மை வினவுவாராய் இறைவனது எல்லையற்ற நிலை அறிவிப்பார், பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாத மலர் போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே என்றனர். இது சொற்பதங்கடந்த தொல்லோனென வுணர்த்தியது. கீழுலகங்கள் ஏழு. அவை அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன. திருவடி ஆதாரமாதல் பற்றி முன்னர்க் கூறினு ரென்க. ஏழினும் என்புழி உம்மை முற்றும்மை. சொற் கழிவு என்பது சொல்லளவைக் கடந்ததென்னும் பொருட்டு. மேலுஞ் சொல்லாகும் ஆதாரத்து நிற்கும் ஆதேயமாக விளங்கும் பொருளி னளவைக் கடந்தது இறைவனது திருமுடி யென்னலுமாம். நுண்ணுணர்வால் நுணுக்கத் தக்க எல்லாப் பொருள்களையுங் கடந்ததென்பார் எல்லாப் பொருள் முடிவே என்றார். முடிவு - துணிந்த பொருள். முடிகளில் போதுகள் சூடுதல் பண்டைய வழக்கு. போது - அலரும் பருவத்தரும்பு. 'போது குலாய புனைமுடிவேந்தர்' (திருக்கோவையார் - 316) எனவும், 'சிறந்து வானோர் இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற வினமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி நனைந்தனைய திருவடி' (திரு நல்லூர்-திருத்தாண்டகம் - 1) எனவும் போற்றப்படுவன காண்க. திருவடி திருமுடிகளி னெல்லை காண்பரிய தன்மையினை,

> கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள்பெருமான்
> பாதமிரண்டும் வினவில் பாதாள மேழினுக்கப்பால்
> சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
> ஆதிகுண மொன்றுமில்லானந்த மிலான் வரக்கூவாய்.
>
> —குயிற்பத்து - 1

எனவருந் திருவாசகத்தானு மறிக. இங்ஙனம் இடத்தா லும் காலத்தாலும் எல்லையற்று விளங்கும் பரமன் அகள

மாய் யாருமறிவரிதாகும் பொருளாயினும் அன்பர்க்கு அருள் காரணமாகத் தனது அருட்சத்தியையே உருவமாக் கொண்டு வருவனென்றுணர்த்துவார் பேதை ஒருபால் திருமேனி என்றனர். பேதை – உமையம்மை. 'உமையலா துருவமில்லை'(திருநாவுக்கரசர்-திருவையாறு-திருநேரிசை-9) என்பது தமிழ்மறை. 'காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால்' (சுபக்கம் - 41) எனும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தம் வலியுறுத்தியதறிக. உமையம்மையார் தொடர்பை அருள் காரணமாக விழைவர் என்பதனை 'அரி தரு கண்ணியாளை ஒரு பாகமாக அருள் காரணத்தில் வருவார்' (பொது - சிவனெனுமோசை - பண் - பியந்தைக் காந்தாரம்-2) எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் உணர்த்தியது முணர்க. திருமேனி என்பது இறைவனது வடிவங் குறித்தது. இங்ஙனம் பரமன் உண்மையியல்பில் ஒருருவ மில்லாதிருப்பினும் பொதுவியல்பில் உருவத் திருமேனி இன்றியமையாததென்று

படைப் பாதித்தொழிலும் பத்தர்க்கருளும் பாவனையுநூலு
மிடப்பாக மாதராளோ டியைந்துயிர்க் கின்பமென்று
மடைப்பானு மதவுமுத்தி யளித்திடும் யோகும்பாசத்
துடைப்பானுந் தொழிலுமேனி தொடக்கானேற் சொல்லொணாதே
—சுபக்கம்-74

எனச் சிவஞானசித்தியார் விரித்துரைத்ததூஉங் காண்க. சிவமுஞ் சத்தியுமாய இறைவன் அருள் காரணமாக பல் வேறு வடிவங்களை அன்பர்கள் நினைந்தவாறு கொள்வ னாதலினாலும், இத்துணையென்று வரையறை செய்யமாட் டாமையானும் திருமேனி யொன்றல்லனென மொழிந்தார். இவ்வரிய பெற்றியுடைய இறைவன் சத்தியாகிய தடை யிலா ஞானத்தால் உருவங்கொள்வது கருதி வேதமுதலென் றார். வேதத்தையருளிய முதல்வனென்றும், வேதத்தால் போற்றப்பட்ட முதல்வனென்றும் பொருளுடைத்து.

ஞானமடைந்து முத்திநிலை யடைபவர்கள் உயிர்களே யாதலால் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும் என்றனர். மண் ஆகு பெயராய் மக்களை யுணர்த்தியது. துதித்து, ஆலும் எனப் பிரித்துப் போற்றிக் களிக்கும் எனப் பொருளுரைக்க. வேதங்களுக்கு முதல்வனாயினும் உயிர்களுக்கு உறுதுணை யென்பார் ஓதவுலவாவொரு தோழ னென்றார். ஓதல் - பேசுதல். ஈண்டுப் புகழ்ச்சியைக் குறித்தது. இறைவனது புகழ் இறவாத தன்மை வாய்ந்த தாதலின் ஓதவுலவா என்றார். உலவா - கெடாத. இறை வன் உருத்தெரியாக் காலத்தே உயிர்களினுடல் புகுந்து உளத்து மன்னிக் கருத்தினைத் திருத்திக் கருணையினாலாட் கொள்ளும் முறைமையுடையவனாதலினால் அவன் ஒப்பற்ற தோழனென்பது. இறைவனது துணைச் சிறப்பை,

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்த லுற்றேன் மறவா வரம்பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
றுணையென்று நான்றொழப் பட்டவொண்சுடரை
முத்தியு ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

—திருக்கழுமலம் - பண் - தக்கேசி-2

என வன்றொண்டர் விளக்கியதறிக. இங்ஙனம் அருட் டுணையாகும் இறைவன் அன்பர் அகக்கோயிலைக் குடியாக் கொள்ளுங் கொள்கையுடையான் என்பார் தொண்ட ருளன் என்றார். 'சிந்தையே கோயில்கொண்ட வெம்பெரு மான்' (கோயிற்றிருப்பதிகம்-10) எனுந் திருவாசகத்தானு முணர்க. இதுகாறுங் கூறியவாற்றால் இறைவன் ஓரெல் லைக்குள்ளும் அடங்கானாதலினால் அவன் ஊர் யாதெனமொழிவதென்பது. ஊர் என்பது ஓரெல்லைக் குட்பட்ட விடம். முதன்மையாக அவனது திருவடியும் திருமுடியும்

சொற்பொரு ளளவைகளைக் கடந்ததெனக் குறித்தமை யான் இறைவனதிடம் இஃதென்று அறியவாராமைபற்றி ஏதவனூர் என வினவினர். ஊர் இன்னதெனக் குறிக்க இயலாமையாக இருப்பினும் பெயர் இன்னதெனக் கூறு தலு மருமையென்பார் ஏதவன்பேர் என்றனர். பெயர் அமைத்தற்கு இயலாமை அறிவிப்பார் பேதையொருபாற் றிருமேனி யொன்றல்லன் என்றார். "பெயர் திருமேனி குறித்து இடப்படுவது. அவன் றிருமேனியோ ஆணுமல்ல பெண்ணுமல்ல, அங்ஙனமாயின் எப்பெயரால் குறிப் பிடலாமென்பார் ஏதவன்பேர் என்றனர்" என்பது கதிர் மணிவிளக்கம். மேலும், பெயர்கள் உலகியலில் பொருள் களை ஒன்றினின்று மொன்றினைப் பிரித்துச் சுட்டி யறியப் படுத்துவதற்கே அமைக்கப்பெறுவன. இறைவன் சுட்டி யறியப்படும் பொருளன்றாதலின் பெயர் குறிக்க இயலாமை கருதி ஏதவன்பேர் என்றனரென்னலுமாம். இறைவனுக் குப் பெயரமைக்க இயலாமை குறித்தே மணிவாசகனார்

ஒருநாம மோருருவ மொன்று மில்லார்க் காயிரம்
திருநாமம் பாடி நாங்தெள் ளேணங் கொட்டாமோ

(திருவாசகம் - திருத்தெள்ளேணம்-1) எனக் கூறியவாறு காண்க. உருவமும் பெயருமில்லாத பரம்பொருள் தொண்டருள்ளத்தே குடிகொண்டிருத்தலால் அவருக்கு உறவும் அயலவருந் தொண்டரையன்றி பிறரின்மையை யுரைப்பார், ஆருற்றாரயலார் என்றனர். 'உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்கள்' (மறுமாற்றத் திருத்தாண் டகம்-4) என அப்பர் பெருமானருளியதுணர்க. இங்ஙனம் அற்புதம் வாய்ந்த இறைவனைச் சுருதங்களாற் றுதிப்பதே யன்றி வேறுபாடும் பரிசு யாதென்று வினவுவார் ஏதவனைப் பாடும் பரிசு என்றனர். இப்பாட்டின் ஈற்றடியி லுள்ள வினாக்களுக்கு முதல் மூன்றடிகளிலும் விடைகள் அமைத்த அழகு நோக்குக. (10)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
ஐயாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
ஐயாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய் (கக)

(இதன் பொருள்) ஆர் அழல் போல் செய்யா - செறிந்த தீயைப்போல செம்மை நிறமுடைய திருமேனியனே !, வெள் நீறு ஆடி - வெண்மையான திருநீறு பூசியவனே !, செல்வா - அருட்செல்வமுடையோனே !, சிறு மருங்குல் மை ஆர் தடம் கண் மடந்தை மணவாளா - சிறிய இடையினையும் மை தீட்டிய அகன்ற கண்களையுடைய பெண்ணாகும் உமையம்மையாருக்குக் கணவனே !, ஐயா - தலைவனே! மொய் ஆர் தடம் பொய்கை புக்கு - வண்டுகள் நிறைந்த அகன்ற பொய்கையினிடத்துப் புகுந்து, கையால் முகேர் என்ன குடைந்து குடைந்து - கைகளாற் நீரினை முகேரென்னத் தட்டி நன்றாகத் துளைத்து, உன்கழல்பாடி - உனது திருவடியைப் போற்றி, வழியடியோம் - பரம்பரையாக அடிமைப்பட்டு வருமியல்பினேம், வாழ்ந்தோம் - இதுகாறும் உனது அருளால் வாழ்ந்து வந்தனமாக, ஐயா நீ - தலைவனாகிய நீ, ஆட்கொண்டு அருளும் விளையாட்டு இன் உய்வார்கள் - ஆண்டுகொண்டு மேலருளுகின்ற திருவிளையாடலினால் திருவடியைச் சார்ந்த பேரடியவர்கள், உய்யும்வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம் - திருவருட்பேற்றிற்குரிய தவநெறிகள் யாவும் அடைந்து பிழைத்து நிற்பதானோம், எமை எய்யாமல் காப்பாய் - நாங்கள் இளைத்தலின்மையாகக் காப்பாயாக. காண் - அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறைவனதுண்மையியல்புகளை வினாவுரையாகப் பாடிச் சென்ற கன்னியர்கள்

யாவரும், பூத்தாரும் பொய்கை யணைந்தவுடன் தெளிந்த நீரைக் கண்டதும் ஆர்வம் பெருகி அவ்வேமப் போதில் நீராடக் கூடியதனை நினைந்து அதனை யருள் சுரந்த இறைவனை முன்னிலைப் படுத்திக் கொள்வாராய் ஆரழல்போல் செய்யா என்றனர். ஈண்டு ஆரழல் என்றது பொருள்களோடு பொருந்துகின்ற நெருப்பினைக் குறித்தது. அதனது நிறம் சிவப்பாதலின் அந்நிறமே சிவனாரது திருமேனியின் நிறமென்று உவமை முகத்தாற் குறித்தார். 'பொங்கழலுருவன் '(திருவாலவாய் - பண் - புறநீர்மை – 1) எனத் திருஞானசம்பந்த ரருளியது காண்க. செய்யா - சிவந்த திருமேனியுடையவனே. 'செய்யன் சிவந்த வாடையன்' (திருமுருகாற்றுபடை - 206) எனவும், 'செய்யனே கரிய கண்டனே' (அப்பர் - திருவதிகை - அடையாளத் திருத்தாண்டகம் - 1) எனவும், 'செய்யன் வெள்ளிய னொள்ளியார்' (திருஞான சம்பந்தர் - திருப்பிரமபுரம் - பண் - கொல்லி - 7) எனவும் தமிழ் மறை கூறியதுணர்க. நீராடச் சென்ற கன்னியர்கள் ஆடுதற்கமைந்த நீர் தங்களுடம்பினைத் தூய்மையாக்குந் திறம் போலவும், தீ தன்பாற் பட்ட பொருளின் அழுக்கினைப் போக்குந் திறம் போலவும், உயிர்களைப் பாசம் நீக்கித் தன்பாற்படுத்திச் செம்மை செய்தருளுகின்ற இறைவனை நினைவு கொண்டன ரென்றுரைத்தலுமாகும். இங்ஙனம் சிவபெருமானது சிவந்த திருமேனியை நினைவு கொண்டவர் அம்மேனியின்மீது விளங்கும் திருவெண்ணீறு கண்டவராய் வெண்ணீருடி என்றனர். வெண்மை தூய்மை குறித்தது. நீறு - பொடி. அது நல்லாவின் சாணத்தாலாகியது. ஆடி- அண்மை விளி. செய்யா என்றும், வெண்ணீருடி என்றும் விளித்தமையான் குற்றம்நீக்கித் தூய்மை செய்யுமியல்பினன் இறைவனென்று விளக்கியதறிக. 'செய்யமேனி வெளிய பொடிப் பூசுவர் சேரும் மடியார்மேல், பையநின்றவினை பாற்றுவர்' (திருப்புகலூர் - பண் - நட்டபாடை - 5) எனத் திருஞான

சம்பந்தர் உணர்த்தியதூஉங் காண்க. இங்ஙனம் பாசப் பிணி நீங்கிப் புனிதமடைந்தோர்க்கு முத்தியருளுபவன் என்றுணர்த்துவார் செல்வா என்றார். செல்வம் ஈண்டு வீட்டுத் திருவினைக் குறித்தது. முத்தி நிலையில் காட்சிக் கெளிதாகும் இறைவனது அருள்கூடிய வடிவத்தை நினை விப்பார் சிறுமருங்குல் மையார் தடங்கண் மடந்தை மண வாளா என்றனர். இஃது அருள் காரணத்தில் இறைவன் கொள்வதோர் வடிவம். காட்சிதந்து அடிமைகொள்பவர்க் குத் தாமும் அடிமை யென்றுணர்த்துவார் ஐயா வென விளித்தனர். ஐயா - தலைவனே. இவ்வாறு ஐவகை விளி களான் இறைவனை அழைத்துப் பொய்கையின் கண் ணிறங்கி நீராடத் தங்கரங்களால் நீரைக் குடைந்து இறை வனைப் பாடிக்கொண்டே தாங்கள் அடிமையாகுந் திறம் அறிவிப்பாராயினர். பொய்கை - மானிடராக்காத நீர் நிலை. அஃது இயற்கை வளனோடு கூடியதென்பார் மொய் யார் தடம் பொய்கையென விளக்கினார். மொய் என்பது மொய்தல் தொழிலினையுடைய வண்டினைக் குறித்தது. பொய்கையில் விளங்கிய நறுமலர் சேக்கை கொண்ட வண்டுகள். தடம் என்றது அப் பொய்கையின் அகன்ற பரப்பினை யறிவித்தது. கன்னியர் அனைவருக்கும் இடந் தந்த அளவு காரணமாக அகன்றதெனக் குறித்தலுமாம். பொய்கையினிடத்துப் புகுந்த இவர் தத்தம் இரு கரங்க ளாலே முகேரெனும்படி ஒலியுண்டாக நீரைத் தட்டித் தங்களுடல்கள்மீது நீரை இறைத்தனர். அங்ஙனம் நீரைக் குடைந்த போதும் அவன் கழல் பாடுவதே நியமமென்பார் உன் கழல் பாடியென்றார். கழல் ஈண்டு இறைவனது திருவடியை யுணர்த்திற்றேனும் அவர் திருவடியில் அணி யப்பெற்றுள்ள வீரக் கழலை யுணர்த்தியது. எனவே இறைவனது வீரப் பெருமையே பாடுவதற்குப் பொருளா யுள்ளமை யறிக. உயிர்களது பாசங்களை யறுப்பதே பெரிய வீரமாதலின் அவ்வீர முடையார்பால் பரம்பரை

யாக அடிமைகள் என்றறிவிப்பார் வழியடியோம் என்றார். வழியடிமை - பரம்பரையாக அடிமையாதல். 'மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும், வேதியர்குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்' (தடுத்தாட்கொண்ட புராணம் - 3) எனத் தெய்வச் சேக்கிழாரடிகள் விளக்கிய துணர்க. அவ்வாறு அடிமையாகி யிருத்தலே சிறப்பு வாழ்வென நினைவார் வாழ்ந்தோம் என்றனர். இறந்த காலத்தாற் கூறியதனால் இதுகாறும் எங்கள் நாட்கள் வீழ்நாள் படாது சிவத்தொண்டிலே நன்கு கழிந்தன வென் பது. இஃது அவரது உள்ளக் கிளர்ச்சியில் மீதூர்ந்து நின்ற மகிழ்ச்சியினை அறிவிப்பது.

மேலும் முன்னிலைப் படுத்திக்கொண்ட இறைவனைத் தங்கள் விண்ணப்பத்திற்குச் செவி சாய்க்குமாறு விரும்பு வார் ஐயா நீ என விளித்தனர். ஐயா நீ என்றது ஐ யாம் நீ எனப் பிரிந்து நின்று, தலைவனாகிய நீ எனப் பொருள் கொண்டது. தலைவராயினார் தம்மைச் சார்ந்து நின்ற அடிமைகளை யுணர்த்தியும், திருத்தியும், தண்டித்தும் செம்மை செய்யுந் திறமே ஆட்கொள்ளுத லென்பது. தலைவராயினார் அது செய்யத் தகுதியுடைவ ரென்பது, 'ஐயனே! தடுத்தாண் டருள்செய்'யென நம்பியாரூரர்க் கூற்றிலமைத்துச் சேக்கிழாரடிகள் விளக்குவது காண்க. பல்வேறு உயிர்களின் பக்குவங் காரணமாக ஆட்கொள் ளும் வகை பலதிறத்த தாகும். உயிர்களி னுணர்ச்சி மையலினால் கட்டுண்ட வழி அதனை நீக்குவதே ஆட்கொள் ளும் முறை. பல்பிறவிகளிலும் ஈட்டிவளர்த்த யானென தென்னுஞ் செருக்கு சிறு முயற்சியா லொழிவதன்று. அதனை ஒழிக்கவல்ல பேரருளாளனாகிய இறைவன், முயற்சி யின்றி விளையாட்டாகப் பாசவுணர்ச்சியை உயிர்களுக்குப் போக்கித் தன்பாற் படுத்தித் தன்னறிவு தருகின்றமையை ஆட்கொளல் என்பர் அறிவுடையோர். விளையாடல் என்றது முயற்சியின்றி எளிதிற் காரியஞ் செய்யும் வன்

மையைக் குறித்தது. "இவ்வாறே ஐந்தொழில் செய்தல் விளையாட்டென்றது ஐங்கலப்பாரம் பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பது போல அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை பற்றியே" யாகுமென்பது சிவஞான பாடியம். (கழகப் பதிப்பு - 120) இவ்விளையாடலினால் உய்ந்த பேரடியவர்கள் காட்டிய திருவருட் பேற்றிற்குரிய தவநெறிக ளெல்லாம் அடைந்து தேறித் தங்கினோமாக. தவநெறியாவது இறப்பில் பயனை யளிப்பதாகும் சரியை, கிரியை, யோகமெனும் சாதன நெறிகள். இத்துணை நெறிகள் யாவுமென்பார் உய்யும் வகையெல்லாமென்றார். ஒழிந்தோம் என்பது தங்கினோம், நிற்பதானோம் என்னும் பொருண்மைமேற்று. "மின்னுக்கொடி யொத்து ஒழிந்திட்டாள்" (சீவக சிந்தாமணி - 2504) என்பதனுள் ஒழிந்திட்டாள் என்பதனுக்குத் 'தங்கினாள்'என நச்சினார்க் கினியர் பொருளுரைத்தது காண்க. இங்ஙனம் தேறிய தொண்டராகும் எங்களைச் சோர்விலாது சிவநெறியிலே நிற்றலைப் புரியுமாறு விழைவார் எமை எய்யாமற் காப்பாய் என்றனர். எய்த்தல் - மெலிவுபடுதல். 'கௌவையஞ்சிற் காமமெய்க்கும்' (குறுந்தொகை - 112) என்பது காண்க. தவநெறிகள் சாதித்தும் இறைவன்பால் நேரே திருவருள் பெற்றும் சிவகதி யடைந்த அடியார்கள் அடியவர் கூட்டத்தையும், திருவேடத்தையும், திருக்கோயில்களையும் அரனெனவே தொழுது மெலிவின்றி நின்றனரென்பது திருத் தொண்டர்களின் வரலாறுகளில் அறியப்படுவதாகும். அங்ஙனமே சோர்வின்றி நிற்றலை யருளுமாறு வேண்டினரென்பது. (11)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய் (கஉ)

(இதன் பொருள்) ஆர்த்த பிறவி துயர்கெட - வினைப் பயன்களை நுகர்விக்க வந்த பிறவியாகிய துன்பம் நீங்கும் படி, நாம் - நாம் அனைவரும், ஆர்த்து ஆடும் தீர்த்தன் - ஒலித்து மகிழ்ச்சியோடு ஆடுதற்கமைந்த தூய நீர்வடிவமான வனும், நல் தில்லை சிற்றம்பலத்து எ தீ ஆடும் கூத்தன் - நன்மை பயக்கும் தில்லையின்கண் ஞான சபையினிடத்தே கையி லனலேந்திக் களிப்புடன் கூத்தினை யியற்றுபவனும், இ வான் உம் குவலயம் உம் எல்லோம் உம் காத்து உம் படைத்து உம் கரந்து உம் விளையாடி - சுட்டி யறியப்படுவ தான ஆகாயத்தையும் பூமியையும் மற்றெல்லா வுயிர்ப் பொருள்களையும் உயிரில் பொருள்களையும் காத்தும் படைத்து மொடுக்கியும் விளையாடுபவனாகிய சிவபெருமா னது, வார்த்தை உம் பேசி - திருவைந் தெழுத்தையும் ஓதி, வளை சிலம்ப - கையில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒலிக்க வும், வார்கலைகள் ஆர்ப்ப அரவம் செய்ய - நீண்ட மேகலை கள் மிக்க வொலியை யுண்டாக்கவும், அணி குழல் மேல் வண்டு ஆர்ப்ப - மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலின் மேல் வண்டுகள் களித்தொலிக்கவும், பூ திகழும் பொய்கை குடைந்து - தாமரை மலர்கள் விளங்கா நின்ற பொய்கை யினிடத்தே நீரைத் துளைத்து, உடையான் பொற்பாதம் ஏத்தி - நம்மை உடைப்பொருளாக வுடைய இறைவனது அழகிய திருவடிகளைப் போற்றி, இரும் சுனை நீர் ஆடு - பெருமையும் தண்மையும் உண்ணுதற் கினிமையுமுடைய சுனைநீர் போலும் நீரினில் நீராடுவோமாக.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் தங்களைச் சோர் விலாது காத்தல் வேண்டுமென்று இறைவனை விழைந்த கன்னியர் அனைவரும் இத் திருப்பாட்டில் அவனது கருணை யைப் பாராட்டி நீராட நினைவு கொண்டு ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடுந் தீர்த்தன் என்றனர். ஆர்த்த பிறவித்துயர் என்பது வினைப்பயன்களை நுகர்விக்கவந்த பிறவியாகிய துன்பம். பிறவித்துயர் – பண்புத் தொகை,

அநாதியே கட்டிய பிறவித்துன்பம் என்றலுமொன்று. 'நசை யுநர்க் கார்த்து மிசைபேராளர்' என்ற திருமுருகாற்றுப்படையின் அடியில் ஆர்த்து என்றதற்கு நச்சினார்க்கினியர் நுகர்விக்கும் என்று பொருள் குறித்ததறிக. நாம் ஆர்த்த பிறவித்துயர் - அச்சத்தைத் தரும் அநாதியே கட்டிய பிறவித் துன்பம் என்பது திருமயிலை, மகாவித்துவான். தணிகாசல முதலியார் குறிப்பு. உயிர்கட்குப் பிறவி நேர்வது வினைப் பயன்கள் துய்த்தற் பொருட்டாதலைக் குறித்தது. பிறவியே துன்பமாதலைக் குறித்துப் பிறவித் துன்பமென்றார். பிறந்தோருறுவது பெருகிய துன்பமென்பது அனுபவ மொழியாகும். இத் துன்பம் ஒழிதற்குப் புறத்தூய்மையும் அகத்தூய்மையும் இன்றியமையாதன. புறத்தூய்மை நீரானமைதலின் நாம் இந்நீர் நிலையில் ஆரவாரித்து மகிழ்ச்சியுடன் நீராடுவோம் என்பார் நாம் ஆர்த்தாடுந் தீர்த்தன் என்றார். தீர்த்தம் என்றது தூய தெளிந்த நீரைக் குறித்தது. அதன் வடிவமானவன் இறைவனாதலின் தீர்த்தனென்றார். 'சென்றாடு தீர்த்தங்களானார் தாமே' (திருவாலங்காடு — திருத்தாண்டகம் - 1) என்பது தமிழ்மறை. புறத்தூய்மை இந்நீரால் அமைந்ததேனும் அகத்தூய்மை இறைவனது ஞானமூட்டும் திருவுருவத்தாலாம் என்று நினைவு கொள்வார் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங் கூத்தன் என்றார். ஊனினுக்கும் உயிருக்கும் நன்மை பயப்பதாதலின் நற்றில்லை யெனப்பட்டது. இதனையே சேக்கிழாரடிகள்,

ஆனாத சீர்த்தில்லை யம்பலத்தே யாடுகின்ற
வானாறு புடைபரக்கும் மலர்ச்சடையா ரடிவணங்கி
ஊனாலு முயிராலு முள்ளபயன் கொளநினைந்து
தேனாரும் மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்கணைந்தார்

— திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் - 156

எனவரும் திருவிருத்தத்தா லுரைத்ததறிக. அகத்தூய்மை அகவிருளைப் போக்குவதாகுமாதலின் அவ்வகவிருளை நீக்க

அறிவு வெளியை நினைவார் சிற்றம்பலத்தே என்றார். அவ்வெளியே அரங்கமாகி இறைவன் ஆங்கு ஆனந்தக் கூத்தாடு மியல்பினனென்பதனைச் சிற்றம்பலத்தே தீயாடுங் கூத்தனென மொழிந்தார். தீ என்பது இறைவன் கையிலேந்தியாடும் அனலைக் குறிப்பதேனும் அகவிருளைப் போக்கும் ஞானமாகிய நல்லறிவையும் குறிப்பதாகும். ஆகும் என்பது பேசும் என்னும் பொருண்மையுடைத்தாய் ஞானோபதேசம் செய்யும் இறைவனெனக் குறித்தது. 'துஞ்சடையிருள் கிழியத் துளங்கெரி யாடுமாறே'(அப்பர்- கோயில் - பண் - கொல்லி - திருநேரிசை - 1) எனுந் தமிழ் மறையின் நுண்பொருளுணர்க. உலகம் யாவும் தன்னைப் பற்றி நிற்பனவாதலின் தான் இயங்காது அவை யியங்க மாட்டா. எனவே தானென்றும் நீங்காத கூத்து இயற்று பவனானன். "தேவாசுரர் நரர் சித்தர் வித்தியாதரர், மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள், தாபதர் சத்தர் சமயஞ் சராசரம், யாவையும் ஆடிடும் எம்மிறையாடவே" (2731) எனவரும் திருமந்திரத்தானறிக. செந்தமிழ்ப் பேராசிரியராகும் அகத்தியனார் ஆய்ந்துறவகுத்த விநோதம் சாந்தியெனும் இருவகைக் கூத்துக்களுள் இறைவன் கூத்து சாந்திக் கூத்தின்பாற்படும். அஃது உயிர்கட்குப் பிறவி வெப்பத்தை மாற்றி இன்பமூட்டுஞ் செயலுடையது. இக்கூத்தினை ஞான நடனமென்பர். உயிர்கள் பொருட்டு இறைவன் ஐந்தொழிலியற்றும் பான்மையை யுணர்த்துவது இக்கூத்து வென்பார் இவ்வானும் குவலயமும் எல்லோமுங் காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி என்றார். இ என்னும் அண்மைச் சுட்டு, சுட்டியறியப்படுவதான அனைத்தையுங் குறித்தது. அவை வான், வளி, நெருப்பு, நீர், நிலம் என்னும் பூதங்களாவன. இவைகளைக் குறிக்க முதலுமிறுதியுமாகச் சுவைப்பட வானும் குவலயமுமென்றார். வான் - வெளி. குவலயம் - நிலம். எல்லோமும்

என்றதனால் எஞ்சி நிற்கும் உயிர்ப்பொருளும் உயிரில் பொருளும் குறிக்கப்பட்டன. காணப்படும் பொருளாகிய இவைகட்கு முதல்வனென இறைவன் ஐந்தொழிலியற்றுவா னென்பது. அவ்வைந்தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. ஈண்டுப் படைத்தல், காத்தல், கரத்தல் அல்லது அழித்தல் எனத் தொகுத்துக் கூறப்பட்டன. செய்யுள் காரணமாகக் காத்தல் முற்கூறப்பட்டது. படைத்தலும் அழிதலும் நம்மனோர் உணர்ச்சியில் கூடாமையானும் காத்தல் அறிதற்கமைந்ததாதலினானும் அது முன் வைக்கப்பட்ட தென்னலுமாம். காத்தலில் மறைப்பும் அழித்தலில் அருளலும் அடங்குதல் பற்றி முத்தொழில்களாக வுரைக்கப்பட்டது. ஐந்தொழிலென்பதே சைவாகமங்களின் துணிபு. இவ்வைந் தொழில்களதுண்மை சிவஞானபாடியத்துள் இரண்டாஞ் சூத்திரம் முதலதிகரணத்துள் விரித்துரைத்தது காண்க. இங்கு விளையாடி என்பது இகரவீற்று வினைப்பெயர். இதன் விளக்கம் மேலைத் திருப்பாட்டில் குறித்தது காண்க. இங்ஙனம் இறைவன் தீர்த்தவடிவமாய் நின்று உயிர்கட்குப் புறத்தூய்மையையும், கூத்தனாய்ச் சிவஞானத்தையும், விளையாடியாய் முத்தி நிலையையும் கூட்டுபவனாதலின் அவனது திருவார்த்தையைக் கூறி நீராடக் கருதுவார் வார்த்தையும் பேசி என்றனர். விளையாடி வார்த்தையென்னுந் தொடருள் ஆறும் வேற்றுமை உருபு தொக்கது. வார்த்தையும் என்றதனால் இறைவனது புகழ் பாடுவதல்லாமல் அவனது திருவார்த்தையும் சொல்லினா ரென்பது. எச்சவும்மை. திருவார்த்தை - திருவைந்தெழுத்து: அதனை நீராடப்புகுங்காலோர்தல் மரபு. பேசி என்னும் வினையெச்சம் குடைந்து, ஏத்தி என்னும் பிறவெச்சங்களோடு தொடர்ந்து, ஆடு என்னும் வினைமுற்றுடன் முடிந்தது. திருவைந்தெழுத்தோதி நீரினைக்குடைய முற்படுத

லும் அக்கன்னியர் உடல்களின்கண் விளங்கிய அணிகள் அவர்களதுடலசைவால் ஒலிக்கின்ற முறைமையை, வளை சிலம்ப, வார்கலைகள் ஆர்ப்பரவஞ் செய்ய, அணிகுழன் மேல் வண்டு ஆர்ப்ப என விரித்துரைத்தார். நீரைக் குடைகின்றபோது கரங்கள் செயற்படுத்தப்பட்டமையான் கரங்களில் விளங்கிய சங்க வளையல்கள் ஒலித்தன. கரங்கள் அசைந்தமையான் அவரிடைகளுமசைந்தன. அணியப் பெற்றிருந்த நீண்ட மேகலைகளும் ஒலித்தன. அவ்வொலி அளவிறந்ததனுல் ஆர்ப்பவென்றூர். மேலும் ஆரவாரித்தமையால் அரவஞ் செய்ய என்றுணர்த்திஞர். அவர்களுடலசையவும் தலைகளுமசைந்தன. எனவே அழகிய மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலினிடத்து வண்டுகள் எழுந்து அங்குமிங்குமாக ஆரவாரித்தன. இங்ஙனங் கூறியவகையால் கரம் இடை தலை முதலியன நீரினில் தோய்ந்து நீராடும் முறைமையைக் குறித்தபடியாம். குடைந்து நீராடுதற்கு அமைந்த நீர்நிலை தாமரை மலர் விளங்கும் பொய்கையாகும். நீரைக் குடைகின்றபோதும் இறைவன் தம்மையுடையானுதலினுல் அவனது திருவடிகளாகுந் திருவருளை ஏத்துதல் கடமையெனக் கருதுவார் உடையான் பொற்பாதம் ஏத்தியென்றூர். பொற்பாதம் அழகிய திருவடி. ஏத்துதல் - புகழ்தல். தம்மை யாண்டவனது திருப்பாதங்களைப் புகழ்ந்து பாடுகின்றவுணர்ச்சியிலே நின்று இனிமைபெற நீராடினூர் என்பது. இனிமை பெற நீராடினூர் என்றுணர்த்த இருஞ்சுனை நீர் ஆடு என்றூர். பொய்கையைவிட்டுப் பிறிதொரு சுனைக்கு நீராடச் சென்றூரென்பது பொருந்தாமை யறிக. பொய்கை நீர் தண்மையும் உண்ணற்கினிமையு முடைமைபற்றிச் சுனை நீரெனப்பட்டது. சுனை நீர் வழிந்து வீழ்ந்து நிறைந்த பொய்கையென்னலுமாம். ஆடு என்பதனுள் வியங்கோளீறு தொக்கது.

(12)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கந)

(இதன் பொருள்) பை குவளை கார் மலர் ஆல் - பசுமை தங்கிய குவளையாகிய கரிய மலர் விளங்குகின்றமையானும், செம் கமலம் பை போது ஆல் - சிவந்த தாமரையாகிய அழகு வாய்ந்த மலருண்மையானும், அம் கம் குருகு இனத்து ஆல் - அழகிய நீரில் பறவைக் கூட்டங்களுண்மை யானும், பின்னும் அரவம் அத்து ஆல் - மேலும் பாம்புகளுண்மையானும், தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலின் ஆல் - உயிர்கள் தங்கள் அழுக்கினைப் போக்கிக்கொள்வான் போந்து அடைதலினானும், எங்கள் பிராட்டி உம் எங் கோன் உம் போன்று இசைந்த பொங்கு மடு - எங்கள் தலைவியாகிய உமாதேவியையும் எங்கள் தலைவனை சிவ பெருமானையும் போன்று ஒத்து விளங்கும் துள்ளுந் நீரை யுடைய குளத்தில், புக - புகுந்து, பாய்ந்து பாய்ந்து - தாவித் தாவுதலால், நம் சங்கம் சிலம்ப - நம் முன்கையிலுள்ள சங்கு வளையல்கள் ஒலிக்கவும், சிலம்பு கலந்து ஆர்ப்ப - காலிலணிந்துள்ள சிலம்புகள் வளையல்கள் ஒலிக்குக் கலந்த முறையாக ஆரவாரிக்கவும், கொங்கைகள் பொங்க - நகில் கள் மேலெழவும், குடை உம் புனல் பொங்க - துளைக்கப் படும் நீர் மேலெழவும், பங்கயம் பூம் புனல் பாய்ந்து ஆடு - தாமரை நிறைந்த அழகிய நீரில் தாவி நீராடுவோமாக.

எங்கள் பிராட்டியை யொக்குந்திறம் :—பை குவளை கார் மலர் ஆல்-பசுமை தங்கிய குவளையாகிய கரியமலர் போன்று கண்களுடைமையானும், செம் கமலம் பை போது ஆல் -

சிவந்த தாமரையாகிய அழகிய மலர் போன்று திருமுக முடைமையானும், அங்கம் குருகினத்து ஆல் - கரங்களில் வளையல் கூட்டமாக அணிந்திருத்தலினாலும், பின்னும் அரவத்தால் - பின்னிய பாம்புகளை ஆபரணமாகவுடைமை யானும், தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலின் ஆல் - உயிர்கள் தங்களைப் பிணித்துள்ள ஆணவம் கன்மம் மாயை எனும் அழுக்குகளைப் போக்கிக்கொள்வான் வேண்டிவந் தடைதலினாலும், எங்கள் பிராட்டியை............இசைந்த பொங்கு மடு - எங்கள் தலைவியாகிய இறைவியை யொத்த மடு என்பது.

எங்கள் பெருமானை யொக்குந்திறம் :—பை குவளை கார் மலரால் - பசியகுவளையாகிய கரிய மலரையொத்த கண்ட முடைமையானும், செம் கமலம் பை போதால் - சிவந்த தாமரையாகிய அழகிய மலரை யொத்த திருமுகமுடைமை யானும், அங்கம் குருகினத்தால் - உடலில் வெண்மை நிறம் வாய்ந்த வெண்ணீறு பூசியுள்ளமையானும், பின்னும் அர வத்தால் - பின்னிய பாம்புகளை ஆபரணமாகத் தரித்துள் ளமையானும், தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்— உயிர்கள் தங்களைப் பிணித்துள்ள ஆணவம் கன்மம் மாயை என்ற மூவழுக்குகளைப் போக்கிக்கொள்வான் வந் தடைதலினாலும், எங்கோன் போன்றிசைந்த மடு - எங்கள் தலைவனாகிய சிவபெருமானை யொத்துள்ள திருக்குளம் என்பது.

எங்கள் பிராட்டியையும் எங்கோனையு மொக்குந்திறம் :—பை குவளை கார் மலரால் - பசிய குவளையாகிய கரிய மலரை யொத்த கருமை நிறம் வாய்ந்த திருமேனியுடைய பிராட்டி யையும், செம் கமலம் பை போது ஆல் - சிவந்த தாமரை யாகிய அழகிய மலரை யொத்த செம்மை நிறம் வாய்ந்த திருமேனியுடைய பெருமானையும், அங்கம் குருகினத்தால் - திருக்கரங்களில் வளையல்களைக் கூட்டமாகவுடைய பிராட் டியையும், பின்னும் அரவத்தால் - பின்னிய பாம்புகளை

ஆபரணமாகத் தரித்த பெருமானையும், தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் - உயிர்கள் தமக்குள்ள மூவகை அழுக்குகளைப் போக்கிக்கொள்வான் எங்கள் பிராட்டியினிடத்தும் பெருமானிடத்தும் வந்தடைதலினா லும் இம்மடு அவரிருவரையும் ஒத்ததென்பது.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறைவனது புகழ் பாடி நீராடுதற்கு ஒருப்பட்ட கன்னியர் இத்திருப்பாட்டில் தாம் நீராடுதற்குப் புகுந்த பொய்கை உமா தேவியையும் சிவபெருமானையும் ஒத்ததென நினைவுகொள்வாராய்ப் பைங்குவளைக் கார்மலரால் என்னும் முதலேதுவைக் குறித் தனர். குவளை - நீலோற்பலம். அது கருநிறமுடைமை யான் கார்மலரெனப்பட்டது. கார் என்பது நீரெனப் பொருண்மையுடையதாதலின் நீர்க்குவளை யென்னலுமாம். 'கொங்கையார் பலருங் குடைந்தாட நீர்க்குவளை மலர்தர' (திருப்பனையூர் - பண் - சீகாமரம் - 5) எனச் சுந்தரர் குறித்தமை காண்க. இக்குவளை மலர் இறைவியின் அருட் கண்ணுக் கொப்பாகுமென்பது 'குவளைக் கண்ணிக் கூறன் காண்க' (திருவண்டப்பகுதி-64) எனத் திருவாசகம் குறிப்பதறிக. அதன் கருமை நிறம் இறைவியின் திரு மேனியின் வண்ணமென்பது திருஞானசம்பந்தர் அருளிய "சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர் மரகதமடுத் தாற்போல், அத்தனு ருமையோடின் புறுகின்ற வாலவா யாவது மிதுவே" (பண் - புறநீர்மை - 7) எனுந் திருவால வாய்த் தேவாரத்தானுணர்க. மரகதம் கருமையோடு பசுமை நிறமுடைமையான் கருநிறமெனக் குறித்ததென்க. மேலும் இக்குவளை மலர் சிவபெருமானது கண்டத்தையு முணர்த்துவதாயிற்று. "குன்றியி லடுத்தமேனிக் குவளை யங் கண்டர்" (அப்பர் - திருவேகம்பம் - திருநேரிசை - 9) எனவும், "குவளைக் களத்தம் பலவன்" (திருக்கோவை யார் - 33) எனவும் போற்றப் படுவது காண்க. இங்ஙனம் இறைவியினது திருக்கண்ணையும் திருமேனியையும் இறைவ

னது கறைக் கண்டத்தையும் நினைவூட்டிக் கொண்டமை யான் பிராட்டி பெருமான்களுடைய அருட்டன்மையை நினைந்தவாறாயிற்று. இவ்வருட்டன்மை இறைவி இறைவர்களது திருமுகங்களிலும் இறைவனது திருமேனியிலும் விளங்கக்காண்டலின் அவற்றை நினைவூட்டிக் கொள்வார் செங்கமலப் பைம்போதால் என இரண்டாவது ஏதுவைக் கற்பித்தனர். தாமரை மலர் திருமுகங்கட்கு உவமை கூறுதல் வழக்குண்மையின் இறைவி இறைவர்களது திருமுகங்களை நினைவூட்ட செங்கமலப்போது நினைந்தனர். சிவபெருமானது திருமேனியின் வண்ணம் செந்நிறமென்பது, "புண்டரிகப் பரிசாமேனியும்" (திருக்கானப்பேர் - பண் - புறநீர்மை - 1) எனச் சுந்தரர் போற்றுவது காண்க. பிராட்டியருளாயும் அவ்வருள் பெருமானது திருமேனியுமாய் நினைவூட்டிக்கொண்டு அம்மடுவிற் காணப்பட்ட குருகினங்களால் இறைவி இறைவர் அணியப் பெறுவதான ஆபரணமும் பூச்சுங்கருதினாராக. அம் - அழகு. கம் - நீர். மடுவினின்ற தெளிந்த நீரைக் குறித்தது. அங்கம் என்பது ஒரு மொழியாய் உறுப்பாகிய கையையும் உடலையும் குறித்தது. குருகினம் - பறவைக் கூட்டம். நீர் நிலைகளில் சிறு பறவைகள் விளங்கும் இயற்கையை, "குருகுபாயக் கொழுங் கரும்பு கண்ணெரிக்த சாறு" (திருவாரூர்-பண்-கொல்லி—1) எனவரும் சுந்தரர்த் திருப்பாட்டினும், "குருகினங் கூடியாங்கே கும்மலித்திற குலர்த்தி" (திருவலம்புரம் - திருநேரிசை - 8) எனவரும் அப்பர்த் தேவாரத்தினும் புலப்படுத்தியது காண்க. குருகினம் என்பது இறைவியினது கரங்களிலிருந்த வளையற்றொகுதியினையும் இறைவனது மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த கோலத்தையும் நினைவித்தது. குருகு என்பது வளையல் எனவும் வெண்மை எனவும் பொருளுண்மையுடைத்து. வயிரத்தின் வெண்ணிறத்தைக் குறிப்பார். 'குருகாம் - வயிரமாம்' (திருக்கருகாவூர் - திருத்தாண்டகம் - 1) என்றனர்

சொல்லரசர். இறைவி தன் திருக்கரங்களில் வளையல்கள் அணிந்திருந்தமையான் உயிர்களுக்கு அருளைப் பாலிக்குந் திறமும், இறைவன் தனது திருமேனியில் வெண்ணீறணிந் திருந்தமையான் உயிர்கட்கு ஈசனாகுந் திறமும் விளக்கிய வாறறிக. மேலும் அம்மடுவில் விளங்கிய அரவங்கள் இறைவி இறைவன் அணிகின்ற ஆபரணங்களை நினைவூட் டின. பிழை செய்யும் உயிர்களைப் பொறுக்குமியல்பை விளக்குவதாயிற்று. இதனை "வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினாற், பொறுப்பவனே யராப் பூண்பவனே'(அடைக்கலப் பத்து-2)எனுந் திருவாசகம்வலி யுறுத்துவது காண்க. மடுவினுள் இனி நீராடுவார் தங்கள் உடல் அழுக்குகளைப் போக்கிக்கொள்ளும் வகை கண்டு, இறைவியும் இறைவனும் தங்களை யடைந்தார் மூவகை மலங்களாகும் ஆணவம், கன்மம், மாயை என்பவற்றைத் துடைத்தலை நினைவுற்றனர் அக் கன்னியர். இது பாச நீக்கத்தைக் குறித்தவாறு. "மலந்தாங்கிய பாசப் பிறப் பறுப்பீர்" (சுந்தரர் - திருச்சுழியல் - பண் - நட்டபாடை - 6) என்பது தமிழ் மறை. மெய் அழுக்கினைப் போக்கிக் கொள்ள விரும்புவோர் தூய நீரை நாடுவராதலின் உயிர் களும் மும்மலங்களை நீக்கிக்கொள்ள இறைவனை நாடுவர். அங்ஙனம் நாடுவதனை வந்து சார்தலினாலென ஐந்தாமேது வினைக் குறித்தார். சார்தல் என்பது அடைதல் என்னும் பொருண்மை யுடையதாயினும் இறைவனைப் புகலிடமாய்ப் பற்றிக் கொண்டிருத்தலெனப் புலப்படுத்தியது. "உறு வர் செல்சார் வாகி" (205) எனும் புறநானூற்றடியில் சார்வு என்பதற்குப் புகலிடமென்று நச்சினார்க்கினியர் உரைத்த தறிக. இறைவன் பற்றுதற்குச் சிறந்த புகலிட மாவானென்பது.

"பற்றாய்நினைந்திட டப்போது நெஞ்சேயிந்தப் பாரைமுற்றும்
சுற்றாய்அலைகடன் மூடினுங் கண்டேன்புக னமக்கு

உற்ற னுமையவட் கன்பன் றிருப்பாதிரிப் புலியூர்
முற்றமுளை மதிக் கண்ணியி னன்றனை மொய்கழலே"
— அப்பர் - திருப்பாதிரிப்புலியூர் - 2

எனுந் திருவிருத்தத்தினுணர்த்தப் படுவதறிக. இங்ஙனங் கூறிய ஐந்து வேதுக்களினால் இறைவனது எண்குணங் களுள் குவளை என்றதனால் பேரருளுடைமையையும், செங் கமலம் என்றதனால் வரம்பிலின்பமுடைமையையும், குரு கினம் என்றதனால் தூயவுடம்பினன் என்பதனையும், அர வம் என்றதனால் முடிவிலாற்ற லுடைமையையும், மலங் கழுவுவார் என்றதனால் இயல்பாகவே பாசங்களினீங்கியவ னென்பதனையும் புலப்படுத்தியவாறுன்னுக. இவ்வேதுக் கள் முறையே நயன, மானசிக, பரிச, வாசிக, தீக்கைகளால் ஞானாசிரியன் பக்குவமுள்ள உயிர்களுக்குப் பாசமொழிப்ப தற்குச் செய்யும் சிவநெறிச் சடங்கு முறையெனக் கதிர் மணி விளக்க முரைத்ததூஉங் கொள்க. ஈண்டுப் பிராட் டியை முன்வைத்தது தாயை யறிந்த பின்பே தந்தையை யறிதல் உலகியல் முறைப்படியாகும். மேலும் சத்தியே உயிர்களைக் கைக்கொண்டு சிவத்தோ டொன்றுவித்தல் முறை. இசைதல் - ஒத்து விளங்குதல். நீரின்றி உலகமை யாதது போன்று இறைவனும் அவனதருளுமின்றி உயிர்கள் உய்யுமாறில்லை யெனும் நுண்பொருள் விளங்க பொய்கை யும் பிராட்டியும் கோனும் ஒத்து நின்றமை குறித்தது. மடு வென்பது முன்னர்க் குறித்த பொய்கையே யாகும். பொய்கை நீரிலிறங்கி யமர்ந்து தாவுதல் பெண்கள் இயற் கையைக் குறிப்பார் புகப்பாய்ந்து பாய்ந்து என்றார். பாய்தல் - தாவுதல். ஒருமுறை தாவுதலினால் மெய் நனைய மாட்டாதாதலின் பலமுறை செய்தமையைக் குறிக்கப் பாய்ந்து பாய்ந்து என அடுக்கி மொழிந்தனர். சங்கம் ஆகுபெயராய் அணிந்துள்ள வளையல்களைக் குறித் தது. தாவுதலில் கைகளும் கால்களும் அசைவுறுதலினால்

அணியப் பெற்றிருந்த வளையல்களும் சிலம்புகளும் ஒலித்தன. இவ்விரு அணிகளாலும் வெளிப்படும் ஓசைகள் வேறு வேறாயினும் கலந்து ஒலித்தன வென்பார் கலந்தார்ப்ப என்றார். நீராடுங் காலத்துத் தாவி மூழ்கிய பின்பு சிறிது சிரத்தினை நீர்மட்ட மேலாக வைத்தமர்வது இயல்பு. அங்ஙனம் அமருமிடத்து கொங்கைகள் மேலெழுவனவாகு மென்பார் கொங்கைகள் பொங்க என்றார். பொங்குதல் - மேலெழுந்து நிற்றல். குலுங்குதலென்னலுமாம். எழுவனவாகிய கொங்கைகளுடன் துளைக்கப்பெற்ற நீரும் மேலெழுந்த தென்பார் குடையும் புனல் பொங்க என்றார். இப்புனல் தூய்மையினை யாக்குதலின் பூம்புனலெனப் பட்டது. ஈண்டும் ஆடு என்றது வியங்கோளீறு தொக்கு நின்றது. (13)

காதார்குழையாடப்பைம்பூண்கலனுடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய் (கச)

(இதன் பொருள்) காது ஆர் குழை ஆட – காதுகளில் அணிந்துள்ள குழைகள் அசையவும், பை பூண் கலன் ஆட— அழகிய அணியப்பெற்றுள்ள ஆபரணங்கள் அசையவும், கோதை குழல் ஆட – மலர் மாலை பொருந்திய கூந்தலசையவும், வண்டு இன் குழாம் ஆட – மலர் மாலையில் நிறைந்துள்ள வண்டுகளின் கூட்டம் அசையவும், சீதம் புனல் ஆடி – குளிர்ந்த நீரினில் குளித்து, சிற்றம்பலம் பாடி – இறைவனார் விளக்கமாயுள்ள சிதாகாயத்தைப் போற்றியும், வேதம் பொருள் பாடி – நான்மறையின் பொருளமைந்த புகழ்ப் பாடலைப் பாடியும், அ பொருள் ஆமா

பாடி - அப் புகழ்ப்பாடலா லுணர்த்தப்படும் பொருளா குந் திறத்தைப் பாடியும், சோதி திறம் பாடி-ஒளி வடிவின னுகும் இறைவனது மேன்மையைப் பாடியும், சூழ்கொன் றைத் தார்பாடி - இறைவனது அடையாள மாலையாகும் சுற்றிய கொன்றை மாலையைப் பாடியும், ஆதி திறம் பாடி - இறைவன் எல்லா வுயிர்கட்கும் முன்னவனுகுந் தன்மை யைப் பாடியும், அந்தம் ஆமா பாடி - யாவர்க்கும் முடிவிட மாகின்ற தன்மையைப் பாடியும், பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன் பாதம் திறம் பாடி - உலகியலி லுவர்ப்பு வருமாறு வேறுபடுத்தி உயிர்களாகிய நம்மைச் சிவஞான மூட்டிப் பாதுகாத்து மேலேற்றிய வளையல்க ளணிந்த கையையுடைய இறைவியினது திருப்பாதங்களின் பெருமையைப் பாடியும், ஆடு - நீராடுவோமாக என்பது.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் கன்னியர்கள் பொய்கையில் பாய்ந்து பாய்ந்து நீராடத் தொடங்கியதனை அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் அவர்களுடலின் உறுப்பும் மேலணிந்திருந்தனவும் பிறவும் அசைந்து நின்ற காட்சியினை விரிப்பார் காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக் கோதை குழலாட வண்டின் குழாமாட வென் ருர். ஈண்டுக் குழை என்பது பொதுவாக மகளிர் காதணி யைக் குறித்தது. குழையாட என்றதனுல் செவியும் செவி யினை யுடைய சிரமும் அதனை யேந்திநின்ற கழுத்து மசைந் தனவெனப் பெறப்பட்டது. கழுத்திலணிந்திருந்த ஆபர ணங்கள் அசைந்தன வென்பார் பைம்பூண் கலனுட என்ருர். பைம் பூண் கலன் - பசிய பொன்னுலாகிய அணி கலன்கள். சிரமசைந்த தாதலின் அதன்கண் விளங்கிய கூந்தலும் அசைந்தது வென்பார் குழலாட வென்ருர். குழலாடவே அவண் விளங்கிய மலர் மாலையிலுள்ள வண் டின் கூட்டங்க ளசைந்தனவென வண்டின் குழாமாட வென்ருர். கோதை - மலர் மாலை. நான்குமுறை பயின்ற ஆட என்ற வினையெச்சம் ஆடி, பாடி என்ற வினையெச்சங்

களைத் தொடர்ந்து ஆடுக எனும் வியங்கோள் வினையிருக முடிந்தது. இங்ஙன முரைத்தது இறையருணிலையை யடைதற்குப் படிமுறையைக் கற்பிப்பது போலும். ஞானம் வீடு பெறுதற்குச் சாதனமென்று அருணூல்கள் கூறுப. அது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என நான்கு கூறுபாடுடையது. "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்" (சுபக்கம் - 276) எனச் சிவஞான சித்தியார் அருளிய தறிக. காது கேட்டலையும், பைம் பூண் கலன் சிந்தித்தலையும், குழல் தெளிதலையும், வண்டின் குழாம் நிட்டையினையும் குறிப்பாற் புலப்படுத்தியவாறு காண்க. ஞானங் கைவரப் பெற்றவர் பிறவிவெப்பம் நீக்கிக்கொள்வரெனக் கருதிச் சீதப் புனலாடி யென்றார். பனிக் காலத்ததும் வைகறைப்போதில் விளங்குவதுமான புனலாதலின் மிக்க குளிர்மையுடைய காரணங் கருதிச் சீதப் புனல் என்றார். பிறவி வெப்பந்தீர முயல்பவர் இறைநிலை யறியவும் வழிபடவும் முற்படுவராதலின் சிற்றம்பலம், வேதப் பொருள், அப்பொருளாமாறு, சோதிதிறம், கொன்றைத் தார், ஆதி திறம், அந்தமாமாறு, பெய்வளைதன் பாதத் திறம் ஆகிய இவற்றைப் பாடி நீராடுகவென வேண்டினாரென்பது. அன்பு வெள்ளத்திற் றலைப்படுவார் இறைவனது உறைவிடமறிய விரும்புவராதலின் அவன் விளங்கும் சிற்றம்பலம் முன் கூறப்பட்டது. "சிற்றம்பலம் நுண்ணிய ஞானப் பரவெளி. ஆவின் உடல் முழுவதும் நிறைந்த பால் கன்றின் பொருட்டுச் சுரந்து வெளிப்படுதற்குச் சுரக்கும் உறுப்பு இடமாயவாறு போல எங்கும் நிறைந்த இறை விளக்கம் அன்பர் பொருட்டுப் புலப்படுதற்கு இடங்கூறியபடியாம்" என்பது கதிர்மணி விளக்கம். ஞானப்பரவெளியி னுள்ளவனது பொருள்சேர் புகழ் ஞானப்பனுவலி லறிதற்கிடமாயது பற்றி வேதப்பொருள் பாடி யென்றார். வேதம் - இறைவனது திருவாக்காகக்

கருதப்படும் ஞானப்பனுவல். அதனுள் விளங்குஞ் சொற் யாவும் பொருளா லறியப்படுபவன் இறைவன். அப் பொருள் வடிவமாய் இறைவன் நிற்றல்பற்றி அப்பொருளா மாறு எனக் குறித்தனர். ஆமா என்புழி ஆமாறு என்பதன் ஈறு தொக்கது. இதனை 'மறையுமாய் மறையின் பொருளு மாய் வந்து என் மனத்திடை மன்னிய மன்னே' (கோயிற் றிருப்பதிகம் - 5) எனத் திருவாசகம் விளக்கியது காண்க. மறையின் பொருளாவது இறைவனது பர நிலையும், அரு ளுரு நிலையும், இலக்கணமும், அருள்பாலிக்குந் திறமுமாக அமைவதே யாகும். அப்பொருளாமாறு என்பது மறை யின் பொருளால் குறிக்கப்படும் அறிதற் கருமையாகும் பொருள். அஃது இறைவனே யாகும். இங்ஙனம் சிந்தனைக் கமைவதாகும் இறைவன் வடிவம் அருவம். இவ் வடிவம் அவனருளினால் வெளிப்படுவதேயாகும். பின்னும் பொருளை யறிதற் கியலாத பக்குவர்க்குக் காட்டப்பெறும் வடிவம் அருவுருவ மாகும். அதனையே சோதி திறம் பாடி யெனக் குறித்தார். சோதி என்பது பேரொளி. அஃது உருவினை யுடையதாயும் உறுப்புக்கள் விளக்கமின்றி யிருப்பதாயு முள்ளது. மேலுஞ் சோதி என்பது இருளில் மறைந்து நின்ற பொருளை விளக்கின் றுணைகொண்டு காண்பது போன்று, அறியாமையான் காண வியலாத இறைவனை ஞானத்தின் துணைகொண்டு காண்பதுகருதி ஞானவடிவின னாகிய இறைவனைக் குறித்தது. 'சொல்லக விளக்கது சோதியுள்ளது' (அப்பர் - நமச்சிவாயத் திருப்பதிகம் - பண் - காந்தார பஞ்சமம் - 8) எனுந் தமிழ் மறையின் கருத்து முன்னுக. ஈண்டுத் திறம் என்பது மேன்மையைக் குறித்தது. சோதியாய் நின்று உயிர்கட் குபகரிக்கும் இறைவனை அவனது அடையாளமாகிய கொன்றைத்தார் அறிவிப்பது பற்றி அதனைப் பாடுதல் முறையெனக் கருதிச் சூழ் கொன்றைத் தார்பாடி என்றார். கொன்றை சிவ பெருமானது அடையான மாலையென்ப. எனவே உருவத்

திருமேனியையும் குறிப்பாற் புலப்படுத்தியவாறு. இறைவன் மூவகைத் திருமேனியைக் கொண்டு உயிர்கட்கு அருளுமுறை யுணர்த்தப்பட்டது. கொன்றை மரம் பூத்து தாழ்ந்திருந்த காட்சியினை ஆனாய நாயனார் கண்ணுற்று இறைவன்பால் அன்புருகிய பெருமையைத் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள்,

> சென்றணைந்த ஆனாயர் செய்தவிரைத் தாமமென
> மன்றல்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல்
> நின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
> ஒன்றியசிந்தையி லன்பை யுடையவர்பால் மடைதிறந்தார்
>
> — ஆனாய நாயனார் புராணம் - 21

என விளக்கிய தறிக. இறைவன்மாட் டெழுமன்பு அவனை நினையூட்டும் அறிகுறிகள்பால் சார்ந்து அவற்றின் வழியாய் இறைவனை யணுகும் பெருமையை யுன்னுக. மூவகைத் திருமேனிகளைக் காட்டி உயிர்களை யாட்கொள்வான் உயிர்கட்கு முன்னவனுவா னென்பதனை யறிவுறுத்துவார் ஆதி திறம் பாடி என்றார். முன்னவனுகும் இறைவன் யாவர்க்கும் முடிவிட மென்பார் அந்தமா மாபாடி என்றார். அந்தம் - முடிவு. ஆமா என்பது ஈறு தொக்கு நின்றது. ஈண்டு ஆமாறு என்பது ஆகுந்திறம் குறித்தது. இறைவனை 'அந்தமா யுலகாதியு மாயினான்' (திருவாரூர் - பண் – கௌசிகம் – 1) என ஆளுடைய பிள்ளையார் போற்றுவதறிக. உயிர்கட்கு ஆதியு மந்தமு மாவான் இடைநின்ற காலத்து யாது செய்வானெனும் வினாவிற்கு விடையிறுப்பார் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம் பாடி என்றார். பேதித்தல் –வேறுபடுத்தல். உலகியல்பி லுவர்ப்புத் தோன்றச் செய்தல். நம்மை - உயிர்களனைத்தையும். வளர்த்தல் - பாதுகாத்தல். எடுத்தல் – ஞானநிலைக்கேற்றுதல். இங்ஙனம் உயிர்கட்கு உலகியல்பில் உவர்ப்புத் தோன்றுமாறு

செய்வித்துத் துன்பக் குழியினின்றும் தூக்கிக் காத்து மெய்ஞ்ஞானநிலைக் கேற்றுவது இறைவனது திருவடிக ளாகும் திருவருளே என்பர் அப்பர் பெருமான்.

இருடரு துன்பப்படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடரு கண்ணிழந்துண் பொருணாடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப்பரவக் கொடுநரகக் குழிநின்
றருடரு கைகொடுத்தேற் றுமையாற னடித்தலமே

— திருவையாறு – 4

எனவருந் திருவிருத்தத்தின் கருத்தினை யுணர்க. அருள் என்பது இறைவனது சத்தியாதலின் ஈண்டுத் திரோதான சத்தியைக் குறித்தது. அஃது உயிர்கள் பக்குவமாதற் பொருட்டுப் பந்திந்து நின்ற மலத்திற்கு அநுகூலமாய் நின்று அவைகளை நடத்தி மலம் பரிபாக மெய்திய காலத்து மறச் செய்கை மாறி கருணை வடிவாகும் பராசத்தி வடிவ மாகத் திகழ்வது. "ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை யியற்ற ஏவும், தூயவன் தனதோர் சத்தி திரோதான கரியதென்னும்" (177) எனச் சிவஞான சித்தியார் திரோ தான சத்தியின் செயல் விரித்துரைத்த தறிக. இறைவன் சத்தியாலருளுவன் என்பது தோன்ற பெய்வளை என்றார். வளையலணிந்த அருள்தரு திருக்கரங்களைக் குறித்து இறை வியை யுணர்த்தினார். பெய்வளை – பெண். பாதத் திறம் என்பது திருவடியின் மேன்மை. "தாயின் திருவடிப் புகழ்ச்சி தந்தையின் திருவுள்ளத்தை உவப்பிக்கும் என் னும் உறுதிகொண்டு பெய்வளைதன் பாதத் திறம் பாடி என்றனர்" என்பது கதிர்மணி விளக்கம். இங்ஙனமாக இறைவனது புகழையும் அவனது கருவியாக விளங்கிச் செயற்படும் இறைவியாகிய சத்தியினது புகழையும் பாடி நீராடுவோமாக என்பது. (14)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றே நம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமா று
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண் முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கரு)

(இதன் பொருள்) வார் உருவ பூண் முலையீர் - கச்சினை யுடைய அழகிய அணிகலன்கள் அணிந்த நகில்களையுடை யீர் !, (சிவனருள்சேர் முத்திநிலை நின்ற ஒருத்தி) ஓர் ஒரு கால் எம்பெருமான் என்று என்றே நம் பெருமான் சீர் ஒருகால் வாய் ஓவாள் - ஒவ்வோர மயத்தில் எமது தலை வனே என்று பலமுறை அரற்றி நமது தலைவனுகும் சிவ பெருமானது புகழ்களை ஒருகாலும் இடைவிடாமல் வாயாற் பேசுவாள், சித்தங் களிகூர — உள்ளத்தில் பேரின் ப்ம் மிகுதலினுல், கண் நீர் ஒருகால் ஓவா நெடு தாரை பனிப்ப - கண்களினின்றும் நீர் ஒரு சமயமும் ஓயாது நெடிய தாரையாகப் பொழியவும், ஒருகால் பார் வந்தனை ஆள் - ஒருபொழுது நிலத்தின்மீது விழுந்து விழுந்து வணக் கஞ் செய்தலை மேற்கொள்வாள், விண்ணோரை தான் பணி யாள் - மற்றைத் தேவர்களைச் சிறிதும் வணங்கமாட்டாள், பேர் அரையன் கு ஒருவர் பித்து ஆமாறும் இங்ஙன் ஏ — பேரரசனுகிய இறைவற்கு ஒருவர் மயலாகுந் திறம் இத் தன்மைத்தே போலும், இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் ஒருவர் ஆர் - இந்நெறியாக அடிமை கொள்ளு கின்ற ஞானவடிவினரெவரோ அவரது, தாள் வாயார நாம் பாடி - திருவடிகளை வாய்நிரம்ப நாம் பாடிக்கொண்டு, ஏர் உருவ பூம் புனல் பாய்ந்து ஆடு - அழகு மிக்க தாமரை நிறைந்த புனலில் தாவி நீராடுவோமாக.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் நீராடா நின்ற கன்னி யர்கள் வாயிலாக ஞானத்தின் சிறப்பினையும், அதனுலுண ர

நின்ற இறைவனது பெருமையினையும், அவனேவலினால் திரோதானசத்தி உயிர்களைப் பக்குவஞ் செய்யும் முறைமையினையும் அறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட்டில் இறைவயப்பட்ட ஒருத்தியின் சொல்லுஞ் செயலு மின்னவாறிருந்ததென்று கன்னியருளொருத்தி மற்றை யர்க்கு அறிவிப்பாள் போன்று உணர்த்தலுற்றார். இங் ஙன முணர்த்தப் புகுந்த கன்னியர் மற்றவரை வாருருவப் பூண்முலையீர் என விளித்தனர். வார் உருவி நிற்றல் கன்னியரின் மணப்பருவமுற்ற நிலை குறித்தது. பூண் முலை என்றது முலைசொரி பாலை குழவிகட்கு ஊட்டி வளர்க்கு மாபோல் இறைவனது சத்தி உயிர்களைப் பரிபாகஞ் செய் கின்ற தன்மை நினைப்பூட்டியபடியாம். இங்ஙனம் விளித் துச் சிவபெருமான் திருவருள் பெற்றாளொருத்தியின் பேச் சுஞ்செயலுமின்னவாறிருந்ததென் றறிவிப்பாள், "ஓரொரு கால் எம்பெருமானென்றென்றே நம்பெருமான் சீரொரு கால் வாயோவாள் சித்தங்களிகூர, நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப் பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்" என்றாள். அவனியில் வாழும் உயிர்கள் அல்லற்படுவதெல்லாம் தத்தம் முனைப் பினாலாவதென்றும், தம்மையும் ஏனைய பொருள்களையும் உடைப் பொருள்களாக இறைவனுடையவனென்றும், அநுபவத்தால் இறைவனே தமக்குக் கதியாவானென்றும் நினைவூட்டிக்கொள்ளும் அடியவர் ஒவ்வோர் சமயத்தில் எம்பெருமான் என்று பலமுறை அரற்றுவாரென்பது விளங்க ஓரொருகால் எம்பெருமானென்றென்றே என்றார். தம்மை இறைவனதடிமையென்றுணர்ந்தஞான்றே இறை வனை யுணர்தல்கூடும் என்பது 'தம்மை யுணர்ந்து தமை யுடைய தன்னுணர்வார்' எனும் சிவஞானபோத அவை யடக்க வெண்பாவிற்குச் சிவஞான முனிவர் உரை வகுத் தது காண்க.

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானு முன்னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னைநா னும்பிரா னென்றறிந் தேனே

—தனித்திருநேரிசை - 8

என ஆளுடைய அரசுகள் அருளியதுமறிக. தனக்குத் தலைவன் என்று கருதலுமே, உயிர்களெல்லாவற்றிற்குந் தலைவனுவான் என்பதுணர்ந்து நம்பெருமான் என்றுர். எம்பெருமான் என்றது இறைவன்றிருவருள் பெற்றுளுடைய கூற்றுகவும், நம்பெருமான் என்பது கன்னியரின் கூற்றுகவுங் கொள்க. எம்பெருமான் என்றரற்றியதுமன்றி நமது தலைவனது புகழ்களை ஒரு சமயமும் இடைவிடாது வாய் ஓயாமற் பேசினுளென்பார், நம்பெருமான் சீர் ஒருகால் வாயோவாள் என்றுர். சீர் - புகழ். பூமிமேல் புகழ்தக்க பொருள் இறைவனேயாகும். 'இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' (5) எனுந் திருக்குறளின் கருத்தையுன்னுக. "அன்னஞ்சேர் பிரமபுரத்தா ரமுதை யெப்போதும், பன்னுஞ்சீர் வாயதுவே" (திருப்பிரமபுரம் – பண் – சீகாமரம் - 3) எனத் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் ஆணை அமைத்தபடியுமறிக. இங்ஙனம் முதல்வனைத் தனது தலைவனென்று நினைவூட்டிக்கொள்கையினுலும், அவனது புகழ்களை வாய்விட்டு அலறியதாலும், அவள் மனத்தே ஆனந்தம் மிக்கதென்பார் சித்தங்களிகூர என்றுர். களி - ஆனந்தம், பேரின்பம், களிப்பு. ஆனந்தநிலையடைந்தாள் தன்கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினுளாக. சிவானந்தா நுபவநிலை யடைந்தோர்க்குக் கண்ணீர் சுரந்து பாயும் என்பது. "கண்பனிக்குங் கைகூப்புங் கண்மூன் றுடை, நண்பனுக்கென நான்கொடுப்பேனெனும், வண்பொனித்தென் வலஞ்சுழிமேவிய, பண்பனிப் பொனைச்செய்த பரிசிதே" (திருவலஞ்சுழி - 9) எனவருந்

திருக்குறுந்தொகை சிவானந்தாநுபவ நிலையுடையார் செயல் விரித்துரைப்ப தறிக. கண்களில் நீர் சொரிவதே யன்றி இறைவனை முன்னிலைப்படுத்திக் கொண்டதுபோல் நிலத்தினில் ஒருசமயம் ஓயாது வீழ்ந்து வணங்குவாள் என்பார், பாரொருகால் வந்தனையாள் என்றார். ஆள் என்பது மேற்கொண்ட வொழுக்கத்தை யுணர்த்தியது. ஈண்டு அவள் மனமொழி மெய்களால் பரவசமானமை குறிக்கப் பட்டது. தன்னை இறைவன்பால் ஒப்புவித்தமையான் மற்றைத் தேவரை மதியாதவளெனும் ஒழுக்கத்தை யறிவிப்பார் விண்ணோரைத் தான்பணியாள் என்றார். இவ் வரிய சிவஞானிகளது நிலை, ' திருவு மெய்ப்பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்க ளென்றெண்ணி, ஒருவரை மதியாதுறாமைகள் செய்து மூடியு முறைப்பனாய்த் திரிவேன் ' (வடதிருமுல்லைவாயில் - பண் - தக்கேசி - 1) எனுஞ் சுந்தரர்த் திருவாக்கானுமுணர்க. இறையருள் பெற்றோர் நிகழ்ச்சிகள் பித்துத் தன்மையபோலும் என்பார் பேரரையற் கிங்ஙனே பித்தொருவராமாறும் என்றார். ஈண்டு அரசர்கள் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதியிலுள்ள மக்களை யாளுதலின் அண்டங்கள் பலவற்றுமுள்ள உயிர் களையாளுந் திறம்பற்றி இறைவன் பேரரையன் எனப் பட்டார். பித்து - மயல், மயக்கம்; பற்றிய இறையருளை விட்டு நீங்காமை யறிவித்தது. ' மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும் ' (அப்பர் - திருப்பூவணம் - திருத்தாண்டகம் - 5) எனுந் தமிழ்மறையானு மறிக. ஙனம் - தன்மை. இறைவனும் இம்முறையே உயிர்களை யாட்கொள்ளும் வகை என்பது அறிவிப்பார் ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் என்றார். வித்தகர் - சதுரப்பாடுடையவர். அறிவுடைய ஆசிரியர் மாணவர் பக்குவங் கருதி அவரவர் தன்மைக்கேற்பக் கற்பிக்கும் முறைபோல உயிர்கள் பரிபக்குவங்களுக்கொத்த முறையாகப் பலபல நெறிகளைக் கற்பிக்குஞ் சதுரப்பாட்டினைக் குறித்தது.

இங்ஙனம் இறைவன் திருவருளைப் பாலிக்குந் திறங்கருதி அவனது சத்தியாகிய திருவடிகளை வாயார வாழ்த்துவது கடனென்பார் தாள் வாயார நாம்பாடி என்றார். நாம் - கன்னியர்களனைவரும். ஆர - நிரம்ப, குறையின்றித் திருத்தமாக. ஆடுதற்கமைந்த பொய்கை தெள்ளிய நீரையுடைத் தாதல்பற்றி ஏருருவப் பூம்புனலென்றார். பாய்ந்து என்பது கன்னியர்கள் ஒருமுறை தாவி நீரில்மூழ்கி மீண்டுமமர்ந்து இறைவனைப் பாடித் திரும்பவும் நீரினில் தாவினர் என்பதனைக் குறித்தது. ஆடு என்பது வியங்கோளீறு குறைந்து நின்றது. (15)

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
 ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
 பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ
மென்னச்சிலைகுலவிநந்தம்மையாளுடையா
 டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவணமக்குமுன்சுரக்குமின்னருளே
 யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய் (கசு)

(இதன் பொருள்) மழை - மேகமே!, கடலை முன்னி சுருக்கி எழுந்து உடையாள் என்ன திகழ்ந்து - கடலை நெருங்கி நீரை முகந்து வானத்தின் மேலெழுந்து எம்மையுடையவளாகும் உமா தேவியார் திருமேனியைப்போல கருநிறமாக விளங்கி, எம்மை ஆள் உடையாள் இட்டு இடை இன் மின்னி பொலிந்து - எங்களை அடிமை கொண்டுடையவளாகும் உமாதேவியாரின் சிறிய இடைபோன்று மின்னலைக் கான்று விளங்கி, எம்பிராட்டி திருவடிமேல் பொன்னம் சிலம்பு இன் சிலம்பி - எங்களது தலைவியாகிய. உமாதேவியார் திருவடிகளில் அணியப்பெற்ற பொன்னாலாகிய சிலம்பைப்போல் இடியிடித்து விளங்கி, திருப்புருவம் என்ன சிலை குலவி - உமாதேவியாரது திருப்புருவம் என்றுரைக்கும்படி வானவில்லை விளங்க நிறுத்தி, நம்

தம்மை ஆள் உடையாள் தன்னில் பிரிவிலா எம் கோமான் அவள் அன்பர்க்கும் நமக்கும் முன் முன்னி சுரக்கும் இன் அருள் என்ன பொழியாய் - உயிர்களை அடிமை கொள்ளும் உமாதேவியாரிடத்து நீக்கமின்றி நிற்கின்ற எமது அரசனும் சிவபெருமானும் சத்தியாகிய உமையம்மையும் அன்பர்களுக்கும் நமக்கும் முன்னே நெருங்கிச் சொரிகின்ற நன்மை பயக்கும் அருளைப்போல பொழிவாயாக என்றவாறு.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறையருணிலையிதென் றருளி அச் சிவாநுபவ நிலைக்குக் காரணமாவது இறைவன் றிருவருளே யாகுமென் றறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட்டில் அத்திருவருள் பாலிக்கும் முறைமையை மழையெனும் எடுத்துக்காட்டால் உணர்த்தலுற்றார். ஈசன் திருவடிகளை வாயாரப் புகழ்ந்து பாடி நீராடுகின்ற கன்னியர்கள் பொய்கை நீரைக் கண்டு அது மழையின் காரியமாமென்று கருதி, அதனை இறைவனும் இறைவியும் திருவருளைச் சொரிகின்ற தன்மையாக நீரைப் பொழிவாய் என்று போற்றத் தொடங்கியவர் மழையை விளிப்பாராய் மழை என்றனர். மழை என்பது ஆகுபெயராய் மேகத்தை யுணர்த்தியது. அண்மை விளி. மேகத்தை விளித்த இவர் அதன் செயலைத் தொடர்ந்து சிந்திப்பாராய் வெண்முகிலாயிருந்த அது, கடலைச் சார்ந்து நீரை முகந்து வானிடை எழுந்தபோது கருநிறம் பெற்ற காட்சியை அறிவிப்பார் முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா ளென்னத் திகழ்ந்தென்றார். சுருக்குதல் முகத்தல் என்னும் பொருட்டு' 'கடல் குறைபடுத்த நீர் கல் குறைபட வெறிந்து' என்றார் பிறரும். வானிடை யெழுந்த மேகம் கடலினிடத்தே நீரை முகந்து சென்றமையான் கருநிறம் பெற்றது. அக் கருநிறம் உமாதேவியார் நிறமொக்க விருந்ததனை உடையாள் என்னத் திகழ்ந்தென்றார். இக்கருத்தையே,

தெய்வநாயகனீ றணிமேனிபோற்சென்று
பௌவமேய்ந்துமைமேனிபோற்பசந்துபல்லுயிர்க்கும்
எவ்வமாற்றுவான்கரந்திடுமின்னருளென்ன
கெளவைநீர்சுரந்தெழுந்தனகனைகுரன்மேகம்

—திருநாட்டுப் படலம் - 2

எனத் திருவிளையாடற் புராணமும்,

கருவிமாமழைகலைமகளருளெனவிளங்கி
யிருவிசும்பிடைப்படர்ந்துசென்றினமணிகொழிக்கும்
பரவைவெண்டிரைமேய்ந்துயர்பனிவரையுயர்த்த
வுருவவோடரித்தடங்கணாளுருக்கொடுமீண்ட

—திருநாட்டுப் படலம் - 1

என நைடதமும் போற்றியது காண்க. மேலே வானிடை யெழுந்த மேகம் மின்னலைக் கான்றதென்பார் எம்மையா ளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து என்றார். இட்டிடை - சிறிய இடை. இன் - உவம உருபு. இடை மின்னலுக் குவமிக்கப்படுதல் மரபாதலின் இட்டிடையின் மின்னியென்றார். மின்னலுக்குப் பின் இடி கேட்டல் இயல்பாதலின் எம்பிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி என்றார். உமாதேவியார் திருவடிகள் மேலுள்ள பொற்சிலம்பைப்போல இடிஇடித்த தென்பது. இன் - உவமவுருபு. இங்ஙனம் மழைக் குறிகள் நிகழுங் கால் வானத்தில் வானவில் அமைவதுண்டு. அதுவும் நிகழ்ந்த தென்பார் திருப்புருவம் என்னச் சிலை குலவி என்றார். சிலை ஈண்டு வானவில்லைக் குறித்தது. குலவி - விளங்கி. பின்னர் மழை சொரிதல் இறைவனும் இறைவி யும் அன்பர்களுக்கு அருளைப் பாலிக்குந் திறமொக்கு மென் பார், நந்தம்மையா ளுடையாள் தன்னிற் பிரிவிலா வெங் கோமான் அன்பர்க்கும், முன்னியவ ணமக்கு முன்சுரக்கு மின்னருளே என்னப் பொழியாய் என்றனர். நந்தம்மை யாளுடையாள் - கன்னியர் கூற்றாதலின் அவர் தம்மை

யாளும் உமாதேவியார் என்க. இது மனோன்மணி முதலிய ஒன்பது சத்திகளார் கூற்றெனவுரை கொள்ளின் அவர் தம்மை செயற்படுத்தும் பராசத்தியைக் குறித்ததென்னலு மாம். உடையாள் தன்னிற் பிரிவிலா வெங்கோமான் என்பது "வண்டார் குழலரிவையொடுபிரியா வகைபாகம், பெண்டான் மிகவானுன்" (திருஞானசம்பந்தர் - வேணு புரம் - நட்டபாடை – 1) எனவரும் தமிழ் மறையானும், "உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவுணீ யிருத்தி" (கோயின்மூத்த திருப்பதிகம் – 1) எனவரும் திருவாசகத்தானும் வலியுறுத்தப்படுத லறிக.

இனி, இத்திருப்பாட்டு, பாவைப் பாட்டின் உறுப்பா யுள்ள மழை வேட்டலைக் குறித்தது. ஈண்டு உமாதேவி யாரை, உடையாள், எம்மையாளுடையாள், எம்பிராட்டி, நந்தம்மையாளுடையாள், அவள் என ஐம்முறையாக வுணர்த்தினார். முதன் மூன்றனையுங் கொண்டு, "கேவல நிலையிற் கிடக்கும் உயிர்த் தொகுதிகளை யுடைமையாகக் கொண்ட நிலையில் அன்னையை 'உடையாள்' எனவும், பின் சகல நிலையில் பிறப்பில் உழலும் நமக்குத் தனுகரண முதலியவற்றைத் தந்து சிறிது அறிவு விளங்கச் செய்து ஆட்கொள்ளுதற்குத் தகுதியளித்தலின் அந்நிலை நோக்கி "எம்மையாளுடையாள்" எனவும், பின் சுத்த நிலையில் பஞ்சமலங்களும் நீங்கிச் சிவத்தோடு கூடி இன்புறுதற்கு உதவிபுரியும் இயல்பு நோக்கித் தலைவியாயினாள் என்பார் "எம்பிராட்டி" எனவும் கூறப்பட்டாள்" என்பது கதிர் மணி விளக்கம். ஐவகையாக இறைவி குறிக்கப்படுவது அவள் ஐந்து சத்திகளாக அமைந்து உயிர்கட்குப் பேரின் பத்தைக் கூட்டுதற் பொருட்டேயாம். "தனுதருளின் பஞ்சவிதரூப பரசுகமாய்" (கந்தர் கலிவெண்பா - 10–11) எனக் குமரகுருபரரும், "பரந்த பராபரை யாதி பரன திச்சை பரஞானம் கிரியை பரபோக ரூபம், தருங்கருணை

யுருவாகி" என உமாபதி சிவமும் குறித்தவாறு காண்க. சிவஞான சித்தியாரில்,

> ஒன்றதாய் இச்சாஞானக் கிரியையென்றொரு மூன்றாகி
> நின்றிடுஞ் சத்தி இச்சை உயிர்க்கருள் நேசமாகும்
> நன்றெலாம் ஞானசத்தி யால்நயந் தறிவன்நாதன்
> அன்றருட் கிரியைதன்னா லாக்குவ னகிலமெல்லாம் (83)

எனவருந் திருவிருத்தத்துள் மூவகைச் சத்திகள் உயிர்கட்குத் துணைபுரிதலைக் கூறுவதுணர்க. கிரியாசத்தியால் உயிர்களைச் செயற்படுத்தி அவரவர் இருவினைக்கேற்ப பயன்களைக் கட்டுப்படுத்திக் கூட்டுமியல்பால் "உடையாள்" எனவும், கட்டுநிலை துன்பந்தரத்தக்கது; அழியாவின்பம் நாடுதலே சிறப்புடைத்து என்றவுணர்ச்சி ஞானசத்தியாற் கூட்டுவித்து உயிர்களை யாட்கொள்ளுங் காரணமாக "எம்மையாளுடையாள்" எனவும், இங்ஙனம் நல்லறிவாகிய ஞானத்திற்றலைபட்ட உயிர்களைத் தம்பால் ஈர்த்து ஆட்கொள்ளும் இச்சாசத்தியை "எம்பிராட்டி" யெனவும், மூவகைச் சத்திகளோடு கலந்து நின்று உயிர்கட்குப் பாகம் வருவிக்கும் திரோதானசத்தியாகும் ஆதிசத்தியை "நந்தம்மையாளுடையாள்" எனவும், உயிர்கட்குப் பக்குவமடைந்தபோது இருவினையொப்பு, சத்திநிபாதம், மலபரிபாகம் முற்றியபின் பராசத்தியருளால் சிவாநுபவமுண்டாதலினால் அப்பரையை யாதொரு அடைமொழியின்றி "அவள்" எனவும் இறைவி போற்றப்படுவது காண்க. நந்தம்மையாளுடையாளாகிய திரோதானசத்தியை நீங்கா நிலையில் இறைவனுளனென்பது "ஆணையி னீக்கமற நிற்கு மன்றே" என மெய்கண்டதேவரருளிய சிவஞான போதத்துள் இரண்டாஞ் சூத்திரத்தால் அறியப்படுவதாகும். எங்கோமான் அன்பர் என்பது இறைவன் தமக்கு ஆண்டவனென்றுணர்ந்த அன்பர். நமக்கும் என்றதனால் கன்னியர்களைக் குறிக்குமேனும்

பொதுவாக உயிர்களனைவருக்குமெனக் கொள்க. உம் - ஈரிடத்தும் எண்ணுப்பொருள். இன்னருள் - பேரின்பத்தைப் பயக்கும் அருள். சுரத்தல் - ஒழியாது பயனளித்தலைக் குறித்தது. ஈண்டு உலகினலங் குறித்து மழை சொரிவது போல உயிர்கணலங் குறித்து அருள் பொழியவேண்டுமென்பது. "அருளே யுலகெல்லாம் ஆள்விப்ப தீசன், அருளே பிறப்பறுப்ப தானல் - அருளாலே, மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும், எப்பொருளு மாவ தெனக்கு" (அற்புதத் திருவந்தாதி - 9) எனக் காரைக்காலம்மையார் அருளியதறிக. அருள்வேட்டல் இன்றியமையாமைகருதி அருள்பொழியுமாறு வேண்டினர் என்பதாம். மழைவேட்டலைக் குறிக்கும் திருப்பாவைத் திருப்பாட்டும் ஈண்டுக் கருதற்பாலதாம்.

ஆழிமழைக் கண்ணாவொன் றுநீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்து கொடார்த் தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னிவலம் புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் (4) —(16)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின்பநம்பாலதாக்
கொங்குண் கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுசேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய் (கஎ)

(**இதன் பொருள்**) கொங்கு உண் கரு குழலி-மணந்தங்கிய கருநிறம் வாய்ந்த கூந்தலையுடைய இறைவி, செம் கணவன் பால் – சிவந்த கண்ணையுடைய திருமாலினிடத்தும், திசை முகன்பால் - நான்கு திருமுகங்களுடைய பிரமனிடத்தும், தேவர்கள்பால் - இந்திரன் முதலிய ஏனைய தேவர்களிடத்தும், எங்கும் – இன்னும் பிறிதாகவுள்ள அண்டங்களி லுள்ள உயிர்களிடத்தும், இலாத ஓர் இன்பம் - இல்லாத தாகும் ஒப்பற்ற பேரின்பத்தை, நம் பாலதா - நம்மிடத்தில் கூட்ட, நம் தம்மை கோது ஆட்டி - நம்மைக் குற்றங்களி னின்றும் நீக்குதலும், இங்கு - இவ்வுலகில், நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி செம் கமலம் பொன் பாதம் தந்து அருளும் சேவகன் ஐ - நம்முடைய வீடுகளாகிய நெஞ்சகந் தோறும் வந்திருந்து சிவந்த தாமரை யொத்த அழகிய திருவடியைக் கொடுத்து நிலவுமாறு அருளுகின்ற வீரனை யும், அம் கண் அரசு ஐ – அழகிய அருட்கண்ணோட்ட முடைய அரசனையும், அடியோங்கள் கு ஆர் அமுது ஐ - அடிமைகளாகிய எங்கட்குத் தெவிட்டாத அமுதமாயும், நங்கள் பெருமானை - நமது தலைவனுயுமுள்ள இறைவனை, நலம் திகழ பாடி - நன்மை பயக்குமாறு பாடி, பங்கயம் பூம் புனல் பாய்ந்து ஆடு - தாமரை நிறைந்து தெள்ளிய நீரையுடைய பொய்கையில் தாவி நீராடுவோமாக.

(**விளக்கம்**) மேலைத் திருப்பாட்டில் இறைவி இறைவர்க ளது திருவருள் போன்று மழை பெய்யுமாறு கன்னியர் விரும்பியதனை அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் இறைவி உயிர்களின் குற்றங்களை நீக்குதலும் இறைவன் அவைகட்கு அருளுந் திறம் உணர்த்துகின்றனர். கன்னி யர் மழையை இறைவி இறைவர் பொழிகின்ற இன்னரு ளைப் போலப் பொழியுமாறு விரும்பியபோது தங்கள் குலத்திற்குத் தனி நாயகமாகும் உமையம்மையை நினைவா ராய்க் கொங்குண் கருங்குழலி என்றூர். கொங்கு - மணம். உண் - ஏறுண்ட அல்லது தங்கிய. முன்னைத் திருப்பாட்

டில் திரோதான சத்தியின் நலமறிந்தவர் அச் சத்தியார் செய்யும் அருட்செயல் அறிவுறுத்துவார் செங்கணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா லெங்குமிலாததோ ரின்பம் நம்பாலதா நந்தம்மைக் கோதாட்டியென்றார். செங்கணவன் என்பதனுள் கண்ணவன் என்பது கணவனென குறுகிநின்றது. சிவந்த கண்ணையுடைய திருமால். செந்தாமரைக் கண்ணன் எனத் திருமாலின் திருப்பெயருண்மையறிக. திசைமுகன் - பிரமன். நான்கு திக்கினும் முகமுடையவன். தேவர்கள் - இந்திரன் முதலானவர்கள். எங்கும் என்றது மேற்கூறிய தேவர்கள் அண்டங்கள் தவிர்த்துப் பிற அண்டங்களிலுள்ள உயிர்களிடத்தும் என்பது. இலாததோ ரின்பம் - ஒப்பற்ற இன்பம். நம்பாலதா - நம்மிடத்துக் கூடும் பொருட்டு. கோதாட்டி - குற்றங்கணிக்கி. குற்றங்கணிங்கியவுடனே இறைவன் நெஞ்சகத்தில் குடிகொண்டு ஆட்கொள்வான் என்பார் இங்கு நம்மில்லங்கடோறும் எழுந்தருளி, செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை என்றார். இல்லம் நெஞ்சகங் குறித்தது. உயிர்கள் தங்கள் பெரு முயற்சியாலும் நெஞ்சகத்தில் இறைவனது திருவடிகளை நிறுவமுடியாமையான் இறைவனே அவை பொருந்துமாறு செய்வித்தலைக் குறித்தது. பொருந்துமாறு செய்தல் வீரச் செயலாதலின் அதனையாக்கிய இறைவனைச் சேவகனை யென்றார். அப்பரும் தன்னுள்ளக்கிழியில் இறைவனைத் தந்திருவடிகளை எழுதிவைக்குமாறு வேண்டுவது நினைவுகூரத் தக்கது. அது,

வெம்மைநமன் றமர்மிக்குவிரவிவிழுப்பதன்முன்
இம்மையுன்றாளென்றனெஞ்சத்தெழுதிவை யீங்கிகழில்
அம்மையடியேற்கருளுதியென்பதிங்காரறிவார்
செம்மைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே

—திருச்சத்திமுற்றம் - 6

எனுந் திருவிருத்தத்தி னுணர்த்தப்படுவ துன்னுக. பொற்

பாதம். பொன் - அழகு. திருவடி செந்நிறமுடைய தாதலின் செங்கமலம் உவமையாக அருளப்பட்டது. உயிர் கட்குப் பாதந்தந்து அவைகளது நீக்கமற நின்ற ஆணவ மலச் சேட்டையை அடக்கும் வன்மை காரணமாகச் சேவகனை யென்றார். சேவகன் - வீரன். தாமேபோந்து திருவடி யருளுகின்ற கருணையைப் போற்றுவார் அங்கணரசை யென்றார். அம் கண் - அழகிய அருட்கண்ணோட்டங் குறித்தது. அரசை யென்றது உயிர்களைக் காத்தற் பொருட்டு. காத்தலோ டன்றி அடியவர்கட்கு அமுதமாய் நின்று பேரின்பம் நுகருமாறு செய்தலின் அடியோங்கட்காரமுதை யென்றார். ஆரமுது - தெவிட்டாத அமுதம். இங்ஙனம் அமுதமாவான் தங்கட்குத் தலைவனென்பார் நங்கள் பெருமானை யென்றார். நமக்கு நலமருளுகின்ற இறைவனைப் பாடுதலே கடனென்பார் நலந்திகழப் பாடி யென்றார். பின்னர் நீராடுவான் பொய்கையிலிருந்தாராதலின் தாமரை நிறைந்த தெள்ளிய நீரினில் தாவி நீராடுகவென வேண்டினரென்பது. (17)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்

(இதன் பொருள்) பெண்ணே - பெண்ணே!, அண்ணாமலையான் அடி கமலம் சென்று இறைஞ்சும் விண்ணோர் முடியின் மணி தொகை வீறு அற்றால் போல் - திருவண்ணாமலையில் திருக்கோயில் கொண்டுள்ள இறைவனது திருவடித் தாமரை மலர்களைச் சார்ந்து வணங்கும் தேவர்களது மகு

டத்தின் விளங்கும் பலவகைப்பட்ட இரத்தினங்களும் பொலிவிழந்து ஒளி மழுங்கியதுபோலவும், கார் கரப்ப கண் ஆர் இரவி கதிர் வந்து தண் ஆர் ஒளி மழுங்கி தாரகைகள் அகல - இருள் நீங்க உலகெங்கணும் சூரியனதொளி வெளிப்படலும், குளிர்ச்சி பொருந்திய ஒளி நீங்கி விண் மீன்கள் மறைந்து நிற்கின்ற தன்மை போலவும். பெண் ஆகி ஆண் ஆய் அலி ஆய் பிறங்கு ஒளி சேர் விண் ஆகி மண் ஆகி - பெண்ணுகியும், ஆணுகியும், அலியாகியும், ஒளி யைத் தரும் இரு சுடர்கள் பொருந்திய ஆகாயமாகியும், நிலமாகியும், இத்தனை உம் வேருகி - இவைகட்கெல்லாம் வேருகியும், கண் ஆர் அமுதம் உம் ஆய் நின்ருன் கழல் பாடி - ஞாஞனுபவத்திற்கு அமுதமயமாகியும் கலந்து என்றும் விளங்குபவனுகிய இறைவனது திருவடிகளைப் பாடி, இ பூம் புனல் பாய்ந்து ஆடு — இந்தப் பொலிவினை யுடைய நீரினில் தாவிக் குதித்து நீராடுவோமாக என்பது. தாம் - அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறைவனது சத்தி உயிர்களின் பாசங்களை யறுத்தலும் இறைவனருளுகின்ற முறைமையினையும் அறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட் டில் இறைனது அத்துவித நிலையை யுணர்த்தலுற்ருர். ஈண்டுக் கன்னியர்கள் தமக்கு ளொருத்தியைப் பெண்ணே என விளித்து இறைவனது அத்துவித நிலையின் சிறப்பைக் கூறத் துணிந்தாராய் இறைவனும் உயிரும் ஒன்றுபட்டு அத்துவிதமாய் நின்றபோது இருவரது நிலை இரண்டு உவமைகள் முகத்தால் விளக்குவார் அண்ணுமலையானடிக் கமலஞ் சென்றிறைஞ்சும் விண்ணோர் முடியின் மணித் தொகை வீறற்ருற் போலும், கண்ணுரிரவி கதிர் வந்து கார் கரப்பத் தண்ணுரொளி மழுங்கித் தாரகைகள் தாமகல்வ போலுமென்ருர். இறைவனது அடிமுடிகளைத் தேடிய திருமால் நான்முகன் இவர்கட்கு அளவா வண்ணம் அழலாகிய அண்ணுமலை அண்ணல் அடித்தாமரை மலர்க

ஞம் பேரொளி பொருந்தினவாகும். அவை "சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோடு" (திருவை யாறு - திருவிருத்தம் - 17) எனத் திருநாவுக்கரசர் அருளிய தறிக. அத்தகைய பேரொளி வாய்ந்த திருவடிகளைத் தேவர்கள் தங்கள் மணிமகுடத்தோடு வணங்கின ரென்ப. கண்டராதித்தரும்,

> நெடியானோடுநான்முகனும்வானவருநெருங்கி
> முடியான்முடிகண்மோதியுக்கமுழுமணியின்றிரளை
> அடியாரலகினாற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
> கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென்றுகொலோ

எனும் திருவிசைப் பாவினாலும், பரஞ்சோதி முனிவரும்,

> வந்திறையடியிற்றாழும்வானவர்மகுடகோடி
> பந்தியின்மணிகள்சிந்தவேத்திரப்படையாற்றாக்கி
> அந்தியும்பகலுந்தொண்டாலகிடுங்குப்பையாக்கும்
> நந்தியெம்பெருமான்பாதம்நகைமலர்முடிமேல்வைப்பாம்

எனும் திருவிளையாடற் புராணச் செய்யுளானும் உணர்த்துவதறிக. வீறு - பொலிவு. 'சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி' (திருமுருகாற்றுப்படை 283) என்றவிடத்து நச்சினார்க்கினியர் வீறு வென்பதற்குப் பொலிவு எனப் பொருளுரைத்தவா றறிக. ஈண்டு இறைவன் திருவடிகளின் பேரொளியால் தேவர்கள் முடியணியிலுள்ள இரத்தின மணிகளின் பொலிவு ஒடுங்கி நின்றதென்பது புலப் படுக்கப்பட்டபடியாம். இங்ஙனமே இருள் நீங்க உலகெங் கணும் கதிரவனொளி பரந்து நிற்றலும் வானிடை விளங் கிய விண்மீன்களத்துணையும் தங்களொளி குறைந்து மறைந்து நின்றன வென்பார் கண்ணாரிரவி கதிர்வந்து கார் கரப்பத் தண்ணாரொளி மழுங்கித் தாரகைகள் தாம் அகல வென்றார். இரவிகதிர் என்பது குழவிகை என்பதுபோல் கொள்க, இவ்விருவுவமைகளும் இறைவனும் உயிரும் முத்தி நிலையில் ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றுமிரண்டுமா

காமல் கலந்து நிற்கும் பெற்றிமையை அறிவித்தன. அத்துவிதக் கலவியினைச் சிவஞான முனிவர் பல உவமை முகத்தான் விளக்கியதனை,

"பண்ணிசை வெம்பரிதிமதி திலசயிலந்
தீயிரும்பு பாணி யுப்பு
விண்ணநில மூடலுயிர்நீர் நிழலுச்சி
பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளி போற்பிரிவரிய
வத்துவிதக் கலவி காட்டி
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
சிவாயகுரு சரணம் போற்றி"

எனச் சிவஞான சித்தியாருரையின் உரைப்பாயிரச் செய்யுளிற் காண்க. இங்ஙனம் அத்துவிதமாய் நின்ற இறைவன் அறிவுப்பொருள் அறிவில் பொருள்களோடும் கலப்பினால் அபேதமாயும், பொருட்டன்மையால் பேதமாயும், உயிர்க்குயிராதற் றன்மையால் பேதாபேதமாயும் விளங்குவனென்பார் பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி, யித்தனையும் வேறாகிக் கண்ணாரமுதமுமாய் நின்றானென்றார். உயர்திணை அறிவுப்பொருள் குறிக்கப் பெண்ணாகி யாணாய் அலியாய் நின்றார். பெண்மையின் சிறப்புக் கருதி முதற்கண் வைக்கப்பட்டது. 'பெண்ணாணலியெனும் பெற்றியன் காண்க' (திருவண்டப்பகுதி – 57) என்பது திருவாசகம். 'முன்னே யுரைத்தால் முகமனே யொக்கும் மூவுலகிற், கன்னையு மத்தனு மாவாய்' (அப்பர் - தனித்திருவிருத்தம் - 3) எனுந் தமிழ்மறையானுமறிக. அறிவில் பொருள்களைக் குறிக்க விண்ணாகி மண்ணாகி என்றார். பூதங்கள் முதலு மிறுதியுங் குறித்ததனால் இடைப்பட்ட நீர், நெருப்பு, வளி உடன் கொள்ளப்படும். ஆகாயத்தைச் சிறப்புற விளக்குவார் பிறங்கொளிசேர் விண்ணென்றார். பிறங்கொளிகளாவன சூரியன், திங்கள்,

மற்றும் விண்மீன்கள். இத்துணைப் பொருள்களும் நிலைப் படுமாறு அபேதமாய் உடலுயிர்போல் கலப்பினால் ஒன்றாய் விளங்குதல் என்பது. இவைகளை அறிவுறுத்துவதற்குப் பேதமாய்க் கண்ணருக்கன்போல் பொருட்டன்மையால் வேறாய் என்பது விளங்குதற் பொருட்டு இத்தனையும் வேறாகி என்றார். இவைகளைச் செலுத்துதற்குப் பேதா பேதமாய் உயிரும் உணர்வொளி போல் உடனாய் என்பது விளங்க கண்ணாரமுதமுமாய் என்றார். கண் என்பது ஞானம். அமுதம் ஞானவொளியினைக் குறித்தது. ஈண்டு. சிவப்பிரகாசத்துள்,

புறச்சமயத் தவர்க்கிருளாயகச் சமயத் தொளியாய்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதாய் இருளொளிபோல் பேதமும்சொற் பொருள்போல்
பேதாபேதமு மின்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினால் விளைவதாயுடலுயிர் கண்ணருக்கன்
அறிவொளிபோல் பிறிவருமத்து விதமாகும்
சிறப்பின்தாய் வேதாந்தத் தெளிவாஞ்சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம். (7)

எனவரும் திருவிருத்தத்தின் பொருளாராய்ந் துணர்க. நின்றான் என்பது விளங்கியிருத்தல். "இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி யியமானனா யெறியுங் காற்றுமாகி, அரு நிலையதிங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்டமூர்த்தி யாகிப் பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந்தம் முருவுந்தாமேயாகி, நெருநலையாயின்றாகி நாளையாகி நிமிர் புன் சடையடிக ணின்றவாறே" (1) எனும் நின்ற திருத் தாண்டகத்தா னு முணர்க. உலகெங்கனும் அத்துவித மாய்க் கலந்து நிற்பவனாகும் இறைவன் நற்றாள் பாடுதல் சிறந்த பயனாவதென்பார் கழல்பாடி என்றார். கழல் என் பது வெற்றியுடையார் காலில் அணியாய் ஈண்டுத் திரு வடியை யுணர்த்திற்று. பின்னர்த் தெளிந்த பொய்கை

நீரில் மேலும் நீராடத் துணிந்தாராய் இப் பூம்புனல் பாய்ந் தாடு என்றார். இ என்னும் அண்மைச் சுட்டு, புலர் காலை யில் அறிதற்கமைந்த நீரைச் சுட்டியது. சென்ற கன்னி யர்கள் புலர்காலை வரை நீராடினரெனப் பெறப்பட்டது. ஆடு – வியங்கோளீறு குன்றி நின்றது. (18)

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
 றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தா
லெங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
 ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க
வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
 கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
 லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய்.(கக)

(இதன் பொருள்) எங்கள் பெருமான்-எங்கள் தலைவனே!, உம் கை இல் பிள்ளை உனக்கு ஏ அடைக்கலம் என்று அ பழம் சொல் புதுக்கும் எம் அச்சம் அத்து ஆல் - உன் கையிற் விடுத்த மகன் உனக்கே அடைக்கலமானவாறு என்று ஆட்பட்ட நாளன்று சொல்லிய இப் பழமையான மூதுரையை மீண்டும் மொழிவது பொருத்தமன்று என் றுணர்ந்த யாம் எமது அச்சத்தினால், உனக்கு ஒன்று உரைப் போம் கேள் – இறைவனாகிய உனக்கு ஒரு விண்ணப்பம் மொழிவோமாக. அதனைச் செவிசாய்த்துக் கேட்பீராக, எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க - எங்களது நகில்கள் உன்னுடைய அன்பர்களல்லாதாரது தோள்மாட்டுப் பொருந்தாதொழிக, எம் கை உனக்கு அல்லாது எ பணியும் செய்யற்க - எமது கைகள் உனக் கன்றி வேறொருவர்க்கும் எத்தகைய தொண்டுகளையும் செய்யாதொழிவனவாக, எம் கண் கங்குல் பகல் மற்று ஒன்றும் காணற்க - எமது கண்கள் இரவிலும் பகலிலும் உன்னையன்றி வேறொரு பொருளையுங் காணா தொழிவன

வாக, இங்கு இ பரிசே எமக்கு எங்கோன் நல்குதி எல் - இவ்வுலகத்தில் இவ்வாறே எங்களுக்கு எங்கள் தலைவனாகிய நீ அருளுவாயானால், ஞாயிறு எங்கு எழில் எமக்கு என் - சூரியன் கீழ்த்திசையன்றி வேறு எந்தத் திசையில் உதிப்பினும் எமக்கு வருபயனின்று என்பதாம்.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறைவனது அத்துவித நிலையை அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் உயிர்கள் தம்மை இறைவன்மாட்டு அடைக்கலமாக ஒப்புவித்த பின்னர் அவைகட்கு யாதொரு செயலுமின்று, இறைமாட்டு வருபயன்களை விழைதலும் தகுதியன்றெனவுணர்த்தலுற்றார். அத்துவித நிலையைப் புகழ்ந்துபாடிய கன்னியர்கள் இறைவனிடத்து உயிர்கள் முன்னரே அடைக்கலம் புகுந்துள்ளமை நினைவூட்டுவாராய் எங்கள் பெருமான் என விளித்தனர். அண்மை விளி. உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலம் என்பது பழமொழி. ஒருவரிடத்து ஒரு மகனை அடைக்கலமாக ஒப்புவித்தபோது அவனைக் காப்பது அப்பெரியவரது கடமை என்பது. 'தமக்கன்பு பட்டவர், பாரமும் பூண்பர்' (அப்பர்-திருவாரூர் அற நெறி - பண் - இந்தளம் - 2) என்பது தமிழ்மறை. பிள்ளை - மகன், சிறுவன். சிறுவர்களை ஆசிரியர்பால் கல்வி பயிற்சிக்காக இவ்வாறு சொல்லி ஒப்படைத்தல் பண்டைய வழக்கு. அடைக்கலம் என்றதனால் ஏற்றுக்கொள்ளப் பட்டவரை ஆதரித்தல் கடமையென விளக்கப்பட்டது. ' தாயு நீயேயாகித் தாங்கு ' (சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதை-136) என்பதன் கருத்துன்னுக. ஏற்றுக் கொள்ளப் பட்டோர் இவை இவை எமக்குத் தருகவென்று தந் தலைவரை யணுகிக்கேட்டல் தகுதியன்றென்பார் புதுக்கும் மெச்சத்தால் என்றார். ஆங்கு - ஆட்பட்ட நாள். புதுக்குதல் - மீண்டுஞ் சொல்லுதல். அச்சம் - பயம். அடைக்கலமுடையார்க்கு அவர்தங் கடமையை அறிவுறுத்த, அது கேட்டு உள்ளம் பொறுது சலித்தா லென்செய்வதென்ற

ஐயத்திறுலுண்டாவது. பெரியார்பால் எளியவர் ஒன்று சொல்வதாகக் கூறிப் பலவற்றை மொழிவதுபோல உனக் கொன்றுரைப்போம் கேள் என்ருர். இது விநயமாக வுரைக்கும் வழக்கு. 'சொல்லக்கருதிய தொன்றுண்டு கேட்கில்' (திருவொற்றியூர் - திருவிருத்தம் - 2), 'பொன் ஞர் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்' (திருத்தூங் கானை மாடம் - திருவிருத்தம் - 1) எனவரும் அப்பர் அருண்மொழிகளைக் காண்க. மீண்டும் விண்ணப்பிக்கத் தகுவது இறைவனை மனமொழி மெய்களாற் போற்றுவதே என்பதனை எதிர்மறைமுகத்தாற் கூறுவார், 'எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள்சேரற்க, எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க, கங்குல் பகல் எங்கண் மற்ருென் றுங் காணற்க என்ருர். கொங்கை - நகில், அன்பிற்குறை விடம், மனத்தைக் குறித்தது. மனத்தின் விழைவு மருள் நீங்கிய அன்பர் கூட்டத்துள் விளங்கவேண்டு மென்பது கருத்து. 'தெருளார் கூட்டங் காட்டாயேல் செத்தே போளுற் சிரியாரோ' (கோயின் மூத்ததிருப்பதிகம் - 8) எனவும், 'அன்பரொடு மரீஇ' (சிவஞானபோதம் - 12ம் சூத்திரம்) எனவும் வரும் திருவாக்குகள் அன்பர் திருக் கூட்டத்தின் இன்றியமையாமையை விளக்குவன. தோள் வன்மை குறித்ததாதலின் ஈண்டு ஞானவலியினைக் குறித்தது. கை என்றது மெய்யினுலாகும் தொண்டு. 'கை வினைசெய் தெம்பிரான் கழல் போற்றுதும் நாமடி யோம்' (திருக்கொடிமாடச் செங்குன்றூர் - பொது - 1) என்பது ஆளுடைய பிள்ளையார் ஆணையாகும். கண் - அறிவு. இதனை வெளிப்படுத்தும் மொழியினைக் குறித்தது. காண்டல் – அநுபவித்தல். 'பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு' (சிவஞானபோதம் – பாயிரம் – 3) என்ருற் போல. கங்குல் பகல் - கனவும் நனவும், கனவிலும் நன விலும் இறைவன் திருவுருவத்தைக் காண விழைந்தார் என்பது. 'நனவிலுங் கனவிலு நாளுந் தன்னெளி, நினை

விலு மெனக்கு வந்தெய்து நின்மலன்' (சம்பந்தர் – திருக்கருக்குடி – பண் – பியந்தைக் காந்தாரம் – 1) எனவும், 'நனவிலுங் கனவினு நம்பா வுன்னை, மனவினும் வழிபடன் மறவே னம்மான்' (சம்பந்தர் - திருவாவடுதுறை - பண் - காந்தாரபஞ்சமம் - 3) எனவும் அருளிய தமிழ்மறைக் கருத்துக்களும் அறியத்தக்கன. ஈண்டு இவை எதிர்மறையா லுணர்த்தப்பட்டது இன்றியமையாமையை விளக்குதற்கு. இவ்விண்ணப்பங்கள் முறையே நிறைவுபட வேண்டுமென் பார் இப்பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல் என்றார். பரிசு - முறை. நல்குதல் - அருளுதல். இங்ஙனம் இறைவனையும் அவனது அன்பர் திருக்கூட்டத்தையும் நீங்காது பணிசெய்து இறைவனையே எக்காலத்துங் காணும் பேற்றி யுடையார்க்கு உலகில் யாது நிகழினும் அவர்தம் அறிவும் மனமும் மாறுபடுவதில்லை என்பார் எங்கெழிலென் ஞாயி றெமக்கு என்றார். "எங்கெழிலென் ஞாயிறெனை வின்னணம் வளர்ந்தோம்" (சீவகசிந்தாமணி - 1793) என்பது காண்க. ஈண்டு அவர்கள் எதனுனும் கவலையின்மையை அறிவித்தார்களென்பதாம். அருந்தொண்டர்கள் தங்கள் கரணங்கள் யாவும் இறைபணிக்கே விழைந்து மொழிந்த அருட்பாக்கள் இங்கு ஒப்புநோக்கத்தக்கன. இத்திருப் பாட்டு இறைவனுக்கு மனமொழி மெய் பயன்படுமாறு குறித்ததாகும். தவமுயல்பவர் உலகப் பற்றின்றி வாழ் தற்கு வேண்டிய வரங்களும் கருதத்தக்கன. குமரகுருபரர் சிதம்பரமும் மணிக்கோவையில்,

மல்லலம் பொழில் சூழ்தில் லைவாண
வரமொன் றிங்கெனக்கருளல் வேண்டும், அதுவே
பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன் றுகிடையா தாக, வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடக்கைக்

இடம்பிறி தில்லை யாக, கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கை யூணல்லது
மற்றோ ருண்டிவாய் விட்ட ரற்றினும்
ஈகுந ரில்லையாக, நாளும்
ஒழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் சூழாத்தொடும் வைக, வித்திறம்
உடனீங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மின்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே. (8)

எனவரும் திருப்பாட்டி னுரைத்தவை கருதுக. பின்னும், முன்னைத் திருப்பாட்டில் புலர்காலை குறித்தமையான் இங்குக் கதிரவன் எழுச்சியைக் கண்டு நீராடுதலை முடித்துக் கொண்டனரென்க.

இனி, இறைவன்பால் அடைக்கலம் புகுந்த பின்னர் நிகழ்வன யாவும் இறைவன் செயல்களாதலின் அவை உயிர்கட்குரியன அல்லவென கருதுதற்கு உயிர்கட்கு உரிமையின்று என்பது அடிகள் கருத்தாகும். அது.

அன்றேயென் றன்னுயிரு முடலு முடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மா
னன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே. [னே

—குழைத்தபத்து - 7

எனுந் திருவாசகத்திற் குறிப்பிடுவதறிக.

இனி, இத்திருப்பாட்டு ஒரு வரலாறு உடையது. திருவரங்கத்தில் அரங்கநாதரது பெரிய கோயிலில் பரிசாரகராகவிருந்த திருக்குடந்தை வைணவ வேதியர், திருவானைக்காவில் சிவாலயத்தொண்டு செய்துவந்த மோகனாங்கிபால் மால்கொண்டு மறைந்து வொழுகி வந்தனர். ஒரு மார்கழித்திங்களில் அதிகாலை திருக்கோயிலில்

இத்திருப்பாட்டினை மோகனுங்கி யோதுதலும் மற்றைப் பணிப்பெண்கள் அவளைப் பார்த்துச் சிரித்தனர். எள்ளி நகையாடியதற்குக் காரணம் சைவரல்லாத வைணவ வேதியரோடு மறையொழுக்கமே என அவள் அறிந்து அவ்வைணவ வேதியரைச் சைவராக விரும்பவும், அவ் வேதியர் அவள் விரும்பியவாறே சைவாசாரத்தைத் தீக்கை முறைமையால் பெற்று, சிவாலயத்திலே பரிசாரக ராக அமர்ந்தனர். ஆங்கு அவர் அகிலாண்டேசுரி திருவரு ளால் காளமேகப் புலவரானு ரென்பது. (19)

போற்றியருளுகநின் ஞதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறுமிணையடிகள்
போற்றிமாறன்முகனுங்காணுதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய் (உ०)

திருச்சிற்றம்பலம்

(இதன் பொருள்) போற்றி நின் ஆதி ஆம் பாதம் மலர் அருளுக - எங்களைப் பாதுகாத்து உன்னுடைய எப் பொருட்கும் முன்னே விளங்கிய திருவடி மலர்களை அருளு வாயாக, போற்றி நின் அந்தமாம் செந்தளிர்கள் அருளுக - எங்களைப் பாதுகாத்து உன்னுடைய எப்பொருட்கும் முடி விடமாகும் சிவந்த தளிர்போன்ற திருவடிகளை அருளுவா யாக, எல்லா உயிர்க்கு உம் தோற்றம் ஆம் பொன் பாதம் போற்றி – எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் தோன்றுதற்கு ஏதுவாகிய பொன்னையொத்த திருவடிகள் எம்மைக் காத் தருள்க, எல்லா உயிர்க்கு உம் போகம் ஆம் பூம் கழல்கள் போற்றி - எவ்வகைப்பட்ட, உயிர்களுக்கும் பயன்களை

நுகர்விக்கும் ஏதுவாகிய அழகிய திருவடிகள் எம்மைக் காத்தருள்க, எல்லா உயிர்க்கு உம் ஈறு ஆம் இணை அடிகள் போற்றி – எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் ஒடுக்கத்திற் கேதுவாகிய இரண்டு திருவடிகளும் எம்மைக் காத்தருள்க, மால் நான்முகன் உம் காணுத புண்டரிகம் போற்றி - திருமாலும் பிரமனும் காணமாட்டாது மறைந்து நின்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க, யாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன்மலர்கள் போற்றி - யாங்கள் உய்யும்படி அடிமைகொண்டு சிவப்பேற்றினை யருளுகின்ற அழகிய திருவடி மலர்கள் எம்மைக் காத்தருள்க, யாம் ஆடு மார்கழி நீர் போற்றி – யாங்கள் நீராடுதற்கமைந்த மார்கழித்திங்கள் நீர் எம்மைக் காத்தருள்க,

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் கன்னியர்கள் தங்கள் மனமொழி மெய் எனும் முக்கரணங்கள் முதல்வன் பணிக்கே ஆகுமாறு விண்ணபித்த முறைமையை அறிவுறுத்திய அடிகள் இத்திருப்பாட்டில் அவர்கள் நீராடி முடித்துக்கொண்டு இறைவன் தம்மைக் காத்தருள்க வெனப் போற்றியதனை யுணர்த்தலுற்ருர். கன்னியர்களனைவரும் இறைவனைப் போற்றத் தொடங்குவார் அவன் யாவர்க்கும் முன்னவன் என்று நினைவூட்டிக்கொள்வாராய்ப் போற்றியருளுக நின்னுதியாம் பாதமலர் என்ருர். இறைவனே முடிவிடம் என்பார் போற்றியருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள் என்ருர். ஈண்டுத் திருவடிகளை வழுத்தியது இறைவனைப் போற்றியதாகும். திருவடி என்றது அவனது திருவருளுக்கு உருவாயமைந்த நிலை. திருவடிகளே ஆதியுமந்தமுமாயின என்பது. 'ஆதியுமந்தமுமாவன வையாறனடித்தலமே' (திருவையாறு - திருவிருத்தம் – 17) என ஆளுடைய அரசுகள் அருளியதறிக. "திருவடிக்கு முதன்மை கூறுங்கால் மலரெனவும், ஈறு கூறுங்கால் செந்தளிர்களெனவுங் கூறியது! "ஒடுங்கியுளதாம்" (சிவஞானபோதம் - சூத்திரம் - 1) என்னும்

சைவ வுண்மை புலப்படற்கென்க. " தளிரினின்றே மலர் தோன்றும் உண்மை கருதத்தக்கது " என்பது கதிர்மணி விளக்கம். இவ்வாதியினுக்கும் அந்தத்திற்கும் இடைப் பட்டன இறைவனது ஐந்தொழில்கள். அவற்றால் உயிர் களுக்குக் கன்ம பரிபாகமும், வினை நுகர்ச்சியும், மலபரி பாகமும் முத்தியும் நேர்படுவன. அவற்றைக் கூறுவான் தொடங்கிப் போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் என்றார். ஈண்டுப் படைப்பு குறிக்கப்பட் டது. போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல் கள் என்றதனால் அளித்தல் குறிக்கப்பட்டது. போகம் என்பது உயிர்கள் வினைப்பயனுகர்ச்சியால் இன்பதுன்பம் அநுபவித்தல். போற்றி யெல்லாவுயிர்க்கு மீறுமிணையடி கள் என்றதனால் அழித்தல் குறிக்கப்பட்டது. இங்குக் குறித்த ஈறும் மேற்சொல்லிய அந்தமும் வேறு வேறு. முன்னதாகிய ஈறு கன்ம பரிபாகத்திற்காக ஒடுங்குமிடம். பின்னதாகிய அந்தம் முத்திநிலை. இது மீண்டுவாராநெறி. போற்றி மால் நான்முகனுங் காணாத புண்டரிகம் என்றத னால் மறைப்பு குறிக்கப்பட்டது. மறைத்தலை நேர்முகமாகக் கூறாது திருமால் பிரமன்மீது வைத்து உணர்த்தியதெற்றுக் கெனின் அத்தகைய பெரிய தேவர்களும் வினைவயப்பட்டவ ரென்றும், வினைப்பயனுகர்ச்சியில் உண்மை நிலையறி யாது மயங்குவரென்பதும் விளக்கவே யாகும். உம்மை . உயர்வு சிறப்பு. புண்டரீகம் – தாமரை மலர். ரகரவீகாரம் குறுகி நின்றது. அப்பர் சுவாமிகள் திருவையாற்றுத் திருவிருத்தத்துள், 'பொலம் புண்டரீகப் புதுமலர் போல் வன... ....திருவடி காண்க (12) எனக்குறித்த தறிக. போற்றி யாமுய்ய வாட்கொண்டருளும் பொன் மலர்கள் என்றதனால் அருளல் குறிக்கப்பட்டது. ஆட் கொண்டு அருளல் என்பது உயிர்களை அடிமை கொண்டு முத்தியில் நிலைக்கச் செய்தல். இங்ஙனம் ஐந்தொழில்களை இறைவன் திருவடிகளே செய்தன என்பார் பொற்பாதம்

பூங்கழல்கள், இணையடிகள், புண்டரிகம், பொன்மலர்கள் என்றார். இஃதென்னைக் கருத்தெனின் இறைவன் சத்தியே திருவடிகளாய் விளங்குவது. இறைவனொருவனே ஞாயிறு மொளியும்போல் சிவனுஞ் சத்தியுமாய்த் தாதான்மிய ஒற்றுமையால் இருதிறப்பட்டுப் பொதுமையில் நிற்கும். தீயின் சத்தியொன்றே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டாற் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி என்றற்றொடக் கத்துப் பலவேறு வகைப்படுமாறு போலச் சிவசத்தி யொன்றே காரியவேறுபாட்டாற் பரை, திரோதானம், இச்சை, ஞானம், கிரியை எனப் பெயரிய சத்திகளாயும் பல வேறு வகைப்பட்ட சத்திகளாயும் விளங்குமென்ப. இவற் றின் விரிவைச் சிவஞான பாடியம் இரண்டாஞ் சூத்திரத்து நான்காமதிகரணத்துட் காண்க. படைப்பு முதலிய ஐந் தொழில்களினுண்மையும் அவற்றால் விளையும் பயனும் மேற்குறித்த பாடியத்துள் இரண்டாஞ் சூத்திரம் முதலதி கரணத்தே விளக்கப்பட்டவாறறிக. மேலுஞ் சிவப்பிர காசத்துள்,

ஏற்றஇவை அரனருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள் அணுக்களிடர்க்கடல்நின் றெடுத்தே
ஊற்றமிக அருள்புரிதல் ஏதுவாக
உரைசெய்வர்ஒடுக்கம்இளைப்பொழித்தல்மற்றைத்
தோற்றமலபாகம்வரக்காத்தல்போகம்
துய்ப்பித்தல்திரோதாயிநிறுத்தலாகும்
போற்றலரும்அருள்அருளேயன்றிமற்றுப்
புகன்றவையும்அருளொழியப்புகலொணாதே (18)

என ஐந்தொழிலின் சிறப்பினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தவாறறிக. இங்ஙனம் ஐந்தொழில்களையியற்றும் திருவடிகள் தம்மைக் காத்தருள்க என்று கூறியவர் இது காறும் நீராடி இறைவனை வாழ்த்துதற்கு ஏதுவாயிருந்தது மார்கழி நீராயினமையின் அதுவும் தம்மைக் காத்தருள்க

வென்பார் போற்றியா மார்கழி நீராடு என்றார். எண் வகையாய் நின்ற இறைவனைத் தொழுவார் போற்றி என்று எண்முறை கூறினரென்க. 'நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாய மைந்தனோ டெண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்' (திருத்தோணோக்கம் - 5) எனும் மணிவாசகமும், 'எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவா றிதென்னையே' (திருவாலவாய் - பண் - கௌசிகம்-2) எனும் திருஞானசம்பந்தர்த் தேவாரமும் இறைவனது எண்வகை நிலையினை வலியுறுத்துவன. இங்ஙனம் இறைவனையும் பொய்கை நீரையும் ஏத்திக் கன்னியர்கள் தங்கள் வீடு திரும்பினரெனக் கருதுக. (20)

திருவெம்பாவை உரை முற்றிற்று.

உ

சிவமயம்

திருப்பள்ளியெழுச்சி உரை

தோற்றுவாய்

திருப்பள்ளியெழுச்சி எனும் இந்நூல் தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுளொன்ருகும். இது திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் என்னும் உயிர்க்கினிய பனுவலு ளொரு பகுதியாய் விளங்குகிறது. சிவபெருமானைத் திருப்பள்ளியைவிட் டெழுந்தருளுமாறு வேண்டுவதே இதன் பொருளாகும். எனவே பள்ளியெழுச்சி எனுந் தொடர் பள்ளியினின்றும் துயிலுணர்ந்து நீங்குதலைக் குறித்தது. திரு என்பது மங்கல அடைமொழி.

இனிப் பள்ளியெழுச்சிப் பிரபந்தம் பாடும் வழக்கு தொல்காப்பியர் காலம் முன்பாகவிருந்து விளங்குகிறதெனலாம். தொல்காப்பியர் தமது பொருளதிகாரத்துள்,

> தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
> சூத ரேத்திய துயிலெடை நிலையும் — புறத்திணை - 36

என வகுத்த சூத்திரத்தால் துயிலெடை நிலையினுள் திருப்புள்ளி யெழுச்சி அடங்குவதாயிற்று. துயிலெடை நிலையாவது தம் வலியால் பாசன்றைக்கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் (நின்றேத்துவார்) துயிலெழுப்புதலாகப் பாடுவது. வைகறையில் துயிலெழுப்புதல் வழக்காதலினல்

அரசர்கள் தம் அரண்மனைகளில் வைகறைப் பாடும் பாணர் களை அமைத்திருந்தன ரென்பது சங்ககால மருவிய நூல் களானும் பின்வந்த நூல்களானும் அறியப்படும். இப் பாணர்கள் தாம் பாடும் அரசர்களது வெற்றிப் பெருமை களையும் அவர்களது முன்னோர் பெருமைகளையுங் கூறுவது வழக்கு. துயிலுணர்த்துவது வைகறைப் போதினில் நிகழ்வ தாதலின் புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளையுமுடன்கூறி அறி வுறுத்துவ ராயினர். இங்ஙனம் அதிகாலை நிகழ்ச்சிகளை அறிவிப்பது 'பொழுது விடிந்தது, கண்ணுறக்கத்தி னின்றும் எழுந்து வருக' என்பதற்கேயாம். வைகறைப் பொழுதின் இயற்கை வருணனை பலவுள. அவற்றுட் சில இந்நூலின் வரும் வருணனைகளை ஒப்புநோக்கிச் சுவைப்ப தற்கு ஈண்டுத் தருகின்றும்.

பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்க முறைமுறை யார்ப்ப
வுரவு நீர்ப்பரப் பிணார்துயி லெழுப்பி
யிரவுத்தலை பெயரும் வைகறை காறும்

— சிலப்பதிகாரம் - அந்திமாலைச் சிறப்பு செய்காதை - 75 - 80

பொய்கைத் தாமரை புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்கம் நள்ளிருள் கடிய

— சிலப்பதிகாரம் - கடலாடு கதை - 115 - 117

வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
காலை முரசங் கனைகுர லியம்ப

— 'சிலப்பதிகாரம் - ஊர்காண் காதை - 13 - 14

குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றன்றென் றூயநெஞ்சம்

தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்று எனவே
— குறுந்தொகை - 157

காவ லாளர் கண்டுயில் கொள்ள
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
புகர்முக வாரண நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணங் குறுங்கூ விளிப்பப்
பணைநிலைப் புரவி பலவெழுந் தாலப்
பணைநிலைப் புள்ளும் பலவெழுந் தாலப்
பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பப்
பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக்
கடவுட் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ
வூர்துயி லெடுப்ப வுரவுநீ ரழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்ததும்
— மணிமேகலை - துயிலெழுப்பிய காதை - 111 - 126

இனித் தமிழ் மொழியுள் திருவாதவூரடிகள், தொண்டரடிப்பொடி யாழ்வார், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆகிய மூவரருளிய திருப்பள்ளி யெழுச்சிகள் மூன்றுஞ் சிறப்புடையன. திருவாதவூரடிகள் திருப்பெருந் துறையில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானைத் துயில்நீங்கி யெழுந்தருளுமாறு அருளினார். தொண்டரடிப் பொடி யாழ்வார் திருவரங்கத்துப் பெரிய கோயிலிலுள்ள அரங்கநாதரைத் திருப்பள்ளிவிட் டெழுந்தருளுமாறு பாடினார். சிதம்பர சுவாமிகள் திருப்போரூரில் திருக்கோயில் கொண்டுள்ள முருகப்பெருமானைத் துயிலுணருமாறு பாடி

னர். இவைகளுள் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருப்பள்ளி யெழுச்சியில், "கதிரவன் குணதிசை உதயஞ் செய்தான்; இருளகன்றது; மலர்மது ஒழுகிற்று; அரசர் ஈண்டினர்; யானையும் பிடியும் முரசமும் முழங்கின; இளைக் காற்று வீசிற்று; அன்னம் சிறகுதறி எழுந்தது; தாரகைகளொளி சுருங்கின; மதி மறைந்தது; மேதிகள் தளைவிடு மாயர்கள் வேய்ங்குழ லூதினர்; இடபம் கனைக் குரல் கேட்டது; வண்டுகள் முரல்வன; புட்கள் புலம்பின; தேவர்கள் யாவரும் எதிர்நோக்கிக் காத்தனர்; சங்கம், கபிலை, படிமக்கலம் காட்ட நிற்கின்றனர்; தண்ணுமை, யெக்கம், யாழ், குழல், முழவம் முழங்கின; கீதங்கள் பாடினர்; கமலங்கள் மலர்ந்தன; பெண்கள் நீராடித் துகிலுடுத்தினர்" என இவை காலை நிகழ்ச்சிகளாக அறிவுறுத்தப்பட்டன.

இனித் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் அருளிய திருப்பள்ளி யெழுச்சி திருவாதவூரடிகளருளிய திருப்பள்ளி யெழுச்சியினை ஒருபுடை யொத்துள்ளது. ஆயினும் ஞான சாத்திரக் கருத்துக்களை யுவமையாக வமைத்து இயற்கை வருணனை யியற்றுவது சாலச் சிறப்புடையதாம். கதிரவனுதயத்தை "இருவினைச் சமமல பாகம், பருவம துடையவர் தமதுளமெனவே பாரகம் விளங்கின அவர் குணக்கிரி மேல், அருளொளிவீசி நின்றிலகுமுன் பதம்போல் அருக்கனுங் குணதிசைப் பொருப்பெழு கின்றான்" எனவருளியது இன்புறற்பாலதாம். கடன்மீது கதிரவனெழுதலை மரகத மயின்மீது முருகனைப்போலென வுவமிக்கின்றனர். மாதவர் முகம்போல் கமலம் மலர்ந்தன வெனவும், வேல்கண்ட பாதகர் மனம்போல் தாரகை மின்னொளி சுருங்கிற் றெனவும், வேல்கண்ட சுரர் மனம்போல் முளரிகள் விகசித்தன வெனவும், உயிர்கள் சிறுபோதம்போல் திங்கள் மறைந்த தெனவும் ஞான சாத்திரத்தைத் தொடர்புபடுத்திக் கூறுவது நினைவுகூரத் தக்கது. சேவல் கூவுதல் 'மலர்விழி

மலர்ந்தெழு சமயம், உளமிருள் போக்குவன் என்றழைத்தல் போலும்' என்றது களிகூரத் தக்கதாம். வண்டுகள்முரல் கின்றன, சங்கம் தொனித்தது, அன்னம் சிலம்பின, கின்னரர் கிம்புருடர் முதலியோர் வந்துள்ளனர், ஐந்தொழில் வாத்தியம் இயம்பிற்று என இவை அறிவுறுத்தப்பட்டன; வடமொழி தென்மொழிப் பாமாலைகள் பாடப்பெற்றன, நவவீரர் ஒருபுறம், கணநாதர் ஒருபுறம், திசைப்பாலகர் ஒருபுறம், தேவர்கள் முனிவர்கள் ஒருபுறம் விளங்குகின் றனர் எனவும் அறிவிக்கப்பட்டன. முருகனை யலங்கரிக்க நவமணி மாலைகள் முதலியன கொணர்ந்தன ரென்ப துணர்த்தப்பட்டது. மேலும், தமையன் கணபதி தம்மைத் தழுவ நினைந்து முன் நிற்கிறானெனவும், முக்கண் தாதை கண்டு களிக்க வந்துற்றானெனவும், உமையம்மையார் பாலூட்ட முற்பட நின்றாளெனவும் மொழிவது இன்ப வூற்று பெருகுவது போலும்.

மேற்குறித்த இரண்டு திருப்பள்ளி யெழுச்சிகளினும் திருவாதவூரடிகள் அருளிய திருப்பள்ளி யெழுச்சி சொற் சுருக்கமும் பொருளாழமு முடையதென யாவருமறிந்ததே. சைவ வொழுக்கந் தலைநின்ற பெருமக்கள் இதனை நாளும் ஓதும் நியமமுடையர். திருவாசகத்துள் பிறபகுதிகளுக் கமைத்த தலைப்பினைப்போல் இப்பகுதிக்குத் திரோதானசுத்தி என்றுகுறிக்கப்பட்டுள்ளது. திரோதானம்என்பதுமறைப்பு. சுத்தி தூய்மை செய்வது. மறைப்பினீக்கம் என்பது அதன் பொருளாகும். உயிர்கட்கு மறைப்பினைச் செய்து வினைப்பய னுகருமாறு பக்குவஞ் செய்துவந்த திரோதான சத்தி அருட் சத்தியாக வெளிப்படும் அவசரமுன்னி இறைவனைப் பள்ளி யெழுந்தருள்கவென விழைந்தபடியாம். திருப்பள்ளி யெழுச்சியின் பயனீதென்று தெய்வச் சேக்கிழார் அடிகள்,

"நீறணிந்தா ரகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினில்"

— திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 68

எனவருளியது காண்க. எனவே உயிர்கள் அகவிருணீங்கி அருளோடுங் கூடி நிற்றற்கு விழைந்தனவாய் இறைவனைத் திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்கவென்று வேண்டுவதே திருப்பள்ளி யெழுச்சியின் கருத்தாகும். "ஏர்மருவும் பள்ளி யெழுச்சி பணிவிடைகேட், டார்வமுட னுண்ட வரற்கன்பு செயுமியல்பே" என முதற்றிருப் பெருந்துறைப் புராணத் துள் திருவாசகச் சிறப்புரைத்த சருக்கத்து ளுணர்த்திய வாறு மறிக.

இனி, இத்தகைய சிறப்பினை வாய்ந்த திருப்பள்ளி யெழுச்சியினைத் திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் ஒருநாள் வைகறைப்போதில் கண்டதும் கேட்டதுமான காட்சிகளை யமைத்துத் தம் அகவிருணீங்க, மெய்ஞ்ஞான வொளிபெற ஆன்ம நாயகராகுந் திருப்பெருந்துறைப் பெருமானைத் திருப்பள்ளிவிட் டெழுந்தருளுமாறு வேண்டிப் பாடலுற்றனர்.

நூல்

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணை துணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தெமக்கருண்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ்
சேற்றிதழ்க்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (க)

(இதன் பொருள்) என் வாழ்முதல் ஆகிய பொருள் ஏ - எனது வாழ்விற்கு மூலமாகிய பொருளே !, இதழ் கமலங்கள் மலரும் தண் சேறு வயல் சூழ் திரு பெருந்துறை உறை சிவபெருமான் ஏ - இதழ்களையுடைய தாமரை மலர்கள் மலருகின்ற குளிர்ச்சி பொருந்திய சேற்றினையுடைய வயல்களாற் சூழப்பெற்ற திருப்பெருந்துறையில் இடங்கொண்ட சிவபெருமானே !, ஏறு உயர் கொடி உடையாய் - இடபம் பொறித்த உயர்த்திய கொடியை யுடையவனே !, எனை உடையாய் - என்னை அடிமை கொண்டவனே !, எம்பெருமான் — எனக்குத் தலைவனே !, போற்றி - வணக்கம், புலர்ந்தது — பொழுது விடிந்தது, பூ கழல் கு இணை துணை மலர் கொண்டு ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும் எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம் — அழகிய திருவடிகளின்மீது இணைக்கப்பட்ட இரு மலர்களாலாகிய விடு பூக்களைத் தூவி உனது திருமுகத்தில் யாங்களுய்யும்படி அருளுகின்ற அழகிய புன்னகையைக் கண்டு நினது திருவடிகளை வணங்கு நியமமுடையோம், பள்ளி எழுந்தருளாய் — படுக்கையினின்றும் துயிலுணர்ந்தெழுந்தருள்க என்றவாறு. ஏ - அசை.

(விளக்கம்) உலகியலில் துயிலிலழுந்தியுள்ள அரசனை வைகறை பாடுவார் அவன் பெயர், விருதுகளையுங் கூறி விளித்துத் துயில் நீக்குவதுபோல் பள்ளியெழுச்சிக் காலத்தில் இறைவனைப் பள்ளியினின்று நீங்கி யருளுமாறு விரும்புமடியார் இறைவனது பெயர்களையும் பெருமைகளையுங் கூறி முற்படுவர். அங்ஙனமே திருவாதவூரடிகள் இறைவனுக்குந் தனக்குமுள்ள தொடர்பால் தான் பெற்ற பயன் கருதி இறைவனை விளிப்பார் என் வாழ் முதலாகிய பொருளே என்றார். வாழ் முதல் – வாழ்விற்கு மூலம். வாணிகஞ் செய்வார் முதலாகிய ஒரு நிதியின்றி வாணிகஞ் செய்யமாட்டாமைபோல் இறைவனின்றித் தன் வாழ்வு அமையுமாறில்லை என்பது. பொருள் - உண்மைப் பொருளாயவன். இவ்விளி தஞ் சிந்தனைக்கே விளங்கும் பொருளைக் குறித்ததாதலின் தங் கண்களாலுங் காண்பதற்கு நினைவாராய்ச் சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல் சூழ் திருப்பெருந்துறையுறை சிவபெருமானே யென்றார். இது சிந்தனைக்கு மரிய இறைவன் நினைவாரது உள்ளக் கமலங்களில் வீற்றிருக்க வருவனென்பது குறிப்பாற் புலப்படுத்தியதறிக. பெருந்துறை என்பது ஊர்ப் பெயராக அமையினும் அப்பெயரின் சிறப்பைக் கடவுண்மா முனிவர்.

வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லாம்
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தால்
எம்பரன ருட்கரையி லேறுதுறை யாமால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை யதன்பேர்

என திருவாதவூரடிகள் புராணத்துள் (58) உரைத்தது காண்க. உயிர்கள் அருட்கரைக்கு ஏறுகின்ற துறையாதலினால் இவ்வூரின் பெயர் பெருந்துறை என்றாயிற்று. திரு என்னும் அடைமொழி இறை தொடர்பு கொண்டவூர் என்பது கருதி. உறை - இறைவன் திருக்கோயில் கொண்டுள்ள

மையைக் குறித்தது. இத்துறை வளத்தின் சிறப்பு சேறுடைய வயல்களில் செழித்த தாமரை மலர்களுண் மையா லுணர்த்தப்பட்டது. மேலும், இறைவன் தம்மை யாளுந் தகவுடையான் என்பார் ஏற்றுயர் கொடியுடையா யென்றார். ஏறு - இடபம். இறைவ னுயர்த்திய கொடியி னிடத்து ஏற்றினுருவம் பொறித்திருந்தமையைக் குறித் தது. வாழ் முதலாகிய பொருளே யென்பதனானும், திருப் பெருந்துறையுறை சிவபெருமானே யென்பதனானும், ஏற் றுயர் கொடியுடையா யென்பதனானும் முறையே இறைவ னது இலயபோக வதிகார அவத்தை நிலைகள் கொள்ளப் பெறும். இம் மூன்றவத்தைகளில் முறையே அருவமாயும் அருவுருவமாயும் உருவமாயும் இறைவன் விளங்குவன். கொடி முதலியன அதிகார வர்க்கத்தினருக்கு இன்றி யமையாதனபோல ஏற்றுயர் கொடியுடையா னென்பது அதிகார சிவத்தினியலைக் குறித்தது. இறைவன் உருவங் கொள்வதெல்லாம் உயிர்களைப் பக்குவப்படுத்தித் தன்னடி மைகள் என்று அவைகளுணருமாறு செய்தலே யாதலால் எனையுடையாய் என்று விளித்தார். என்னை, யென்பது எனையெனக் குறுகி நின்றது. உடைப் பொருள்கள், அறி வுண்மையால் அடிமைகளெனவும் அறிவின்மையால் உடை மைகளெனவும் இரண்டு வகைப்படும். ஈண்டுத் தன்னைக் குறித்தமையான் அடிமை கொண்டவனே யெனப் பொரு ளுரைக்கப்பட்டது. அடிமை கொண்ட காரணத்தால் இறைவன் தலைவனாயினானென்பது கருதி எம்பெருமான் என்றார். எம்பெருமான் - அண்மைவிளி. இஃது இறைவனை அண்மித்து நின்ற நிலையுணர்த்தியது. இங்ஙனம் இறை வனை ஐந்து தொடர்களான் விளித்தது இறைவன் செம் முகம் ஐந்துடையவன் என்பது கருதிப் போலும். அம் முகங்கள் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம் என்பன. இவை முறையே வடகிழக்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்குத் திசைகளை நோக்குவன.

இதனால் யாண்டும் நிறைந்து விளங்குவதோர் பொருளென் பதல்லாமல் இறைவன் சர்வ வல்லமையுடையவனெனவும், உயிர்களுக் குயிராகுந் தன்மையுடையவனெனவும், ஞான மூட்டுபவனெனவும், உயிர்கள் அறம் பொருளின்பம் நுகருமாறு செய்பவனெனவும், அவரவர்களுக்குப் போகங்களை வேகமாய்க் கூட்டுபவனெனவும் இம் முகங்கள் அறிவிப்பன. இது மிருகேந்திரவாகமத்துள் கண்டது. ஈசானம் ஞானத்தையும், தற்புருடம் செல்வத்தையும், அகோரம் பாச நீக்கத்தையும், வாமதேவம் சம்பத்துக்களையும், சத்தியோ சாதம் முத்தியையும் அருளுவனவென மொழிதலுமுண்டு. இங்ஙனமாக இறைவனை விளித்து வணக்கம் அறிவிப்பார் போற்றி என்றார். போற்றி யென்பார்க்குப் பயனாய் விளைவது

‘ முத்த னாரும்புனன் மொய்ய ரிசிற்கரைப்
புத்த ரன்னடி போற்றியென் பாரெல்லாம்
பொய்த்த னாரும்புல னைந்தொடு புல்கிய
மைத்த னாரும்வினை மாற்றவும் வல்லரே ’

எனத் தமிழ் மறையான் (அரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை - 1) திருநாவுக்கரசர் உணர்த்திய துன்னுக. வணக்கஞ் செய்து பணிவாகப் பொழுது விடிந்தமை அறிவிப்பார் புலர்ந்ததென்றார். இறைவனது திருவருளைக் கங் காண விழைபவர் இறைவனை முதலிற் வழிபடல் கடமையாதலின் திருவடிகளுக்கு மலர்கள் தூவியவதனைக் குறிக்கப் பூங்கழற்கிணை துணைமலர் கொண்டேற்றி யென்றார். பூ - அழகு. இணை துணைமலர் - இரண்டிரண்டாக இணைக்கப்பட்ட மலர்கள். இணை – ஒப்புவெனக் கொண்டு திருவடிகளுக் கொப்பாகும் இருமலரெனினுமாம். ஏற்றுதல் - தூவுதல். எதுகை நோக்கி ஏத்தி யென்பது ஏற்றி யெனத் திரிந்ததெனக் கொள்ளின் மலர் மாலைகளைச் சாத்தி வாழ்த்தியெனப் பொருள் கொள்க. இங்ஙனம்

மலர்களைத் தூவலாலும் வாழ்த்துவதனாலும் இறைவன் திருமுகத்தில் விளங்கும் புன்முறுவல் காண ஆர்வங் கொண்டவராய் அவனது திருவடி தொழுவோம் என்பார் நின்றிருமுகத்தெமக் கருண்மலரு மெழினகை கொண்டு நின்றிருவடி தொழுகோ மென்றனர். திருமுகத்தால் பெறுவது அருளெனத் தோன்றத் திருமுகத்தெமக்கருண் மலரும் எனக் கூறினார். திருமுகம் அருளுவதால்தான் திருவடி தொழுகை நேருமென்பது 'அவனருளாலே யவன்றாள் வணங்கி' என்பதனால் (திருவாசகம்-சிவபுராணம் - 18)வலியுறுத்தப்படுவதறிக. நகை - இறைவனது அருண் மகிழ்ச்சி. தொழுகையைக் கடமையாகவுடையோம் என்றறிவுறுத்தியவர் இறைவனைப் பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு விண்ணப்பிப்பார் பள்ளியெழுந்தருளாயென்றார். (1)

அருணனிந்திரன்றிசைய ணுகினனிருள்போ
 யகன்றதுவுதய நின்மலர்த்திருமுகத்தின்
கருணையின்சூரியனெழவெழ நயனக்
 கடிமலர்மலரமற்றண்ணலங்கண்ணாந்
திரணிரையறுபதமுரல்வனவிவையோர்
 திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யருணிதிதரவருமானந்தமலையே
 யலைகடலேபள்ளியெழுந்தருளாயே (உ)

(இதன் பொருள்) திருப்பெருந்துறை உறை சிவபெருமான் ஏ -, அருள் நிதி தர வரும் ஆனந்த மலை ஏ - அருட்சேமவைப்பினை உயிர்கட்குத் தரும்பொருட்டு நேர்படுகின்ற பேரின்பமலையே, அலை கடல் ஏ - அலைகளையுடைய கடல் போன்றவனே, அருணன் இந்திரன் திசை அணுகினன் - கதிரவனது தேர்ப்பாகனாகிய அருணன் கீழ்த்திசையை நெருங்கி விட்டனன், இருள் போய் உதயம் அகன்றது - புறவிருள் நீங்க யாண்டும் ஒளி பரந்து நின்றது, நின்மலர் திருமுகம் அத்து இன் கருணை இன் சூரியன் எழ 'எழ அண்

ணால் அம் கண் ஆம் நயன் அ கடி மலர் மலர - நினது தாமரை மலரையொத்த திருமுகத்தினிடத்துப் பொழியுங் கருணையை யொத்தவனாகிய கதிரவன் வானிற் மேற்செல்லச் செல்ல இறைவனது அழகிய கண்ணையொத்து இன்பந்தரும் மணந்தங்கிய தாமரை மலர் விரியா நிற்கவும், (அத்து, அ - சாரியை) திரள் நிரை அறுபதம் முரல்வன - கூட்டமாகவும் வரிசையாகவும் விளங்கிய வண்டுகள் இசை பாடின, இவை ஓர் - காலை நிகழ்ச்சிகளாய இவற்றை யறிவாயாக, பள்ளி எழுந்தருளாய்—. மற்று, ஏ - அசைகள்.

(**விளக்கம்**) மேலைத் திருப்பாட்டில் பொழுது புலர்ந்த தென்று அறிவுறுத்திய அடிகள் மற்றும் புலர் காலையில் நிகழ்வனவாகிய அறிகுறிகளை யுணர்த்த முற்படுவார் திருப்பெருந்துறையுறை சிவபெருமானே யெனவும், அருணிதி தரவரு மானந்த மலையே யெனவும், அலைகடலே யெனவும் விளித்தனர். ஈண்டு இறைவனை மலையாகவும் கடலாகவும் உருவகித்தனர். மலை வறப்பினும் வளந்தரும் வண்மையுடைய தாதலின் அருணிதி தரவரு மானந்த மலை என்றார். அடியார் தமக்கு அருள் சேமவைப்பாக விளங்கும் பேரின்ப வடிவமான மலை என்பது. 'ஆராதவின்ப மருளுமலை போற்றி' (சிவபுராணம் - 16), 'இருள்கடிந் தருளிய இன்பவூர்தி, அருளிய பெருமை அருண் மலையாகவும்' (கீர்த்தித் திருவகவல் - 123 - 124), 'நெஞ்சத் திருளகல வாள்வீசி இன்பமரு முத்தி, அருளுமலை யென்பது காணுய்ந்து' (திருத்தசாங்கம் - 5) எனவரும் திருவாசகக் கருத்துக்களையு முன்னுக. கடலென்பது இறைவன் நெகிழ்ச்சியுடன் கூடிய பரமானந்தமாயிருத்தலைக் குறித்தது. 'பரமானந்தப் பழங்கடல்' என்பது திருவாசகம் (திருவண்டப் பகுதி - 66). மேலும், பட்டினத்தடிகள் நிற்பதும் நடப்பதுமாய பொருள்க ளனைத்தும், நுரை திரை முதலியன கடலினிடத்தே தோன்றி யொடுங்குவது

போல, இறைவனிடத்தே தோன்றி அவன்பாலே ஒடுங்கு வனவென,

... ... உளர்தரும்
நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி யிருங்கட லடங்குந்
தன்மை போலச் சராசர மனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கும்

எனவரும் கோயினான்மணி மாலை (24) அடிகளால் விளக்கிய தறிக. அலை - சாதி அடை. மலையுங் கடலும் என்றது பிறவி நோயைத் தீர்த்தற்கு மலைமேன் மருந்தாகவும், தேவர்கள் இறப்பினை யொழித்தற்குக் கடலமுதமாகவும் விளங்கிய காரணத்தானெனினுமமையும். இவ்வாறு விளித்து இறைவனுக்குக் காலை நிகழ்ச்சிகள் அறிவுறுத்துவார் அருண னிந்திரன் றிசையணுகின னென்றார். அருணன் - கதிரவனது தேர்ப்பாகன். இந்திரன் திசை - கிழக்கு. எட்டுத்திக்குப் பாலர்கள் எண்டிசைகளிலும் விளங்குவர். இந்திரன் கிழக்கிலும், அக்கினி தென் கிழக்கிலும், இயமன் தெற்கிலும், நிருதி தென்மேற்கிலும், வருணன் மேற்கிலும், வாயு வடமேற்கிலும், குபேரன் வடக்கிலும், ஈசானன் வடகிழக்கிலும் வீற்றிருப்பாரென்பது மரபு. அணுகினன் என்பது நெருங்கினான் என்னும் பொருட்டு. கிழக்கின் கண்ணே இன்னும் மேலெழவில்லை யென்பதாம். அதன் பயனாக உலகின் கண்ணுள்ள புறவிருள் நீங்க ஒளி பரவுகின்றதென்பார் இருள்போய் உதயம் அகன்றதென்றார். உதயம் - வெளிச்சம். ஒளி பரவுகின்றமை சூரியன் மேலெழுகின்றமையான் என்பது விளங்க நின்மலர்த் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழ எழ வென்றார். ஈண்டுக் கூறிய இன்னுருபிரண்டும் ஐந்

தாம் வேற்றுமை யாயினும் முன்னது நீக்கப் பொருண்மை; பின்னது ஒப்புப் பொருண்மை. திருமுகத்தின் கருணை யென்பது திருமுகத்தினின்றும் பொழிகின்ற கருணையைக் குறித்தது. 'முகம் பொழி கருணை போற்றி' (கந்த புராணம் - 3) கருணையே கதிரவனென்பது விளக்கிற்று. கதிரவனெழுதலும் தாமரை மலர்கள் மலரா நின்றன வென்பார் அண்ணலங் கண்ணாம் நயனக் கடிமலர் மலர என்றார். தாமரை மலர் இறைவனது திருக்கண்களுக் கொப்பாகக் கூறுதல் மரபுபற்றி அண்ணலம் கண்ணாம் கடிமலர் எனப் பட்டது. அண்ணல் - பெருமையுடையோன். நயனக்கடி மலர் என்பது இன்பந் தருகின்ற வாசனை பொருந்திய மலர். நயன் - இன்பம். 'நயன்புணர்க்கும் புங்கவன்' (கந்த புராணம் – கடவுள் வாழ்த்து - 6) 'நயனில் கூற்றம்' (புறநானூறு - 227 - 1) என்பவற்றா லறிக. தாமரை மலர்கள் மலருதலும் அவற்றினின்றும் வண்டுகளிசை பாடின வென்பார் திரணிரை யறுபதம் முரல்வன வென்றார். திரள் நிரை என்பன வண்டின் எண்ணிக்கை அளவின்மையைக் குறித்தன. அறுபதம் - வண்டு. முரலுதல் - இசை பாடுதல். வண்டுகள் அதிகாலை இசை முரலுதல்,

மழலைவண்டு தடமலர் குடைந்துபுது
மதுவருந்தி நறுமல்லிகைச் சேக்கையின்
வடிபசுந் தமிழினிசை பயின்றபெடை
யொடுதுயின்றினிய செவ்வழிப் பாட்டினை
வருவிபஞ்சி பயிறரு மதங்கர்தெரு
மரமுரன்று நெடுவைகறைப் போய்ச்செழு
மலரிலஞ்சி தொறுமுலவு கந்தபுரி
மருவுகந்தனை யெமையனைக் காக்கவே

எனக் குமரகுருபரர் அருளிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் அறிவிக்கப்படுதல் காண்க. கதிரவன் கீழ்த் திசையை நெருங்குதலும் ஒளி பரவியதெனவும், ஒளிபரவி

யதும் தாமரை மலர்கள் மலர்ந்தன வெனவும், தாமரை மலர்கள் மலரவும் வண்டுகளிசை பாடின வெனவும் காரண காரிய முறையாய்ப் புணர்ந்த வழக்கு உன்னுக. இங்ஙனம் இயற்கையை வளம்பெற விரித்துரைத்த வகையால் இறை யெனும் ஞானச்சுடர் நெருங்கியதும் அன்பர்தம் அகவிருள் கழியா நின்றது. அவர் தம் மனம் முகிழ்த்த சுருணீங்கா நின்றது. அவர் இறைவன் பொருள்சேர் புகழை இன்பத் தோடு பாடினரென்பதும் குறிப்பாற் புலப்படுக்கப்பட்ட படியாம். முன்னர்ப் பொழுது விடிந்தது என்று கூறிய தற்குப் பின் இவை நிகழா நின்றன வென்பார் இவை யோர் என்றார். ஓர்தல் - அறிதல். இவ்வா றறிவுறுத் திப் பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு வேண்டியபடி யென்பது. (2)

கூவின பூங்குயில்கூவின கோழி
குருகுகளியம்பின வியம்பின சங்க
மோவின தாரகையொளியொளியுதயத்
தொருப்படுகின்றதுவிருப்பொடு நமக்குத்
தேவ நற்செறிகழற்றாளிணை காட்டாய்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யாவருமறிவரியாயெமக்கெளியா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே (௩)

(இதன் பொருள்) தேவ - தேவ தேவனே !, திருப்பெருந் துறை உறை சிவபெருமான் ஏ –, யாவரும் அறி அரியாய் - எவராலும் அறிதற்கு அரியவனே !. எமக்கு எளியாய் - எங்களுக்கு (அன்பர் தமக்கு) எளிமையானவனே !, எம் பெருமான் - எமது தலைவனே !, பூ குயில் கூவின - அழகிய குயில்கள் கூவின, கோழி கூவின - சேவல்கள் கூவின, குருகுகள் இயம்பின - பறவைகள் ஒலித்தன, சங்கம் இயம் பின – சங்குகள் முழங்கின, உதயம் அத்து ஒளி ஒருப்படு கின்றது - காலை வெளிச்சம் - தோன்றுகிறது, '(அத்து

சாரியை), தாரகை ஒளி ஓவின - விண் மீன்கள் ஒளி மறைந்தன, நமக்கு விருப்பொடு கழல் செறி நல் தாள் இணை காட்டாய் - எங்களுக்கு விருப்பத்துடனே வீரக்கழல் அணிந்த நன்மையை யருளுந் திருவடிக ளிரண்டிணையுங் காட்டுவாயாக, பள்ளி எழுந்தருளாய்—. ஏ அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் அருணோதயமாதலை யும் ஒளி பரவுதலையும், தாமரை மலர்கள் மலர்தலையும் வண்டுகளிசை பாடுதலையும் அறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட்டில் பின்னர் நிகழும் காலை நிகழ்ச்சிகளை அறி விக்க முற்படுவார் இறைவனை விளிப்பாராய்த் தேவ என் றார். ஈண்டுத் தேவ என்றது அண்மை விளி. தேவதேவ னுந் தன்மையைக் குறித்தது. மகாதேவனுயுள்ள இறைவன் உயிர்கள் மாட்டுக் கருணையினுல் திருக்கோயில்களில் விளக்கமாயுள்ளானென்பார் திருப்பெருந்துறையுறை சிவ பெருமானே யென்றார். இறைவன் காட்டக் காண்பதே யன்றி எவராலும் அறியாமையை அறிவிப்பார் யாவருமறி வரியாய் என்றனர். "பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார் புறத்தார், யாராலுங் காண்டற்கரியா னெமக்கெளிய பேராளன்" (திருவம்மானை - 2) எனத் திருவாசகம் விளக்குவது காண்க. இங்ஙனம் அரியவனுயினும் அன்பர்க் கெளியவனென்பார் எமக் கெளியாயென்றார். எளிமை யாதல் இறைவன் உருக்கொண்டு போந்து காட்சி தருதலி னுலும் ஞானேபதேசத்தினுலும் நிகழ்வது. எளிமையாகப் போந்து ஆட்கொண்டதனுல் எம்பெருமானென்றார். எம் பெருமான் - அண்மை விளி. இத் திருப்பாட்டிலும் ஐந்து முறை விளித்தனர். இனிக் காலை நிகழ்ச்சிகளை அறி வுறுத்துவார் பூங்குயில் கூவினவென்றார். வினை பன்மை யாக முடிந்தமையான் வினைமுதலான குயில் பலவாகக் கொள்ளப்பட்டது. பூ - அழகு. குயில் - குறுந்தாளுடைய பிள்ளைப் பறவைகளிலொன்று. அதனைப் பிடித்து வளர்ப் பாரின்மை கருதி முற்படவைத்தோதினர். வானிற் பயின்று

சோலைகளில் தங்குங் குயில்கள் கூவினவென்னின் இல்லங்களில் பயிலும் பறவைகள் கூவினவோ என்பார்க்குக் கோழி கூவினவென்றார். ஈண்டும் வினை பன்மையாதலின் கோழிகளெனப் பொருள் கொள்க. கோழி என்பது சேவலைக் குறித்தது. அது இல்லங்களில் பிடித்து வைத்து வளர்க்கப்படுவது. சேவலினியற்கை வைகறையில் கூவுதல், 'பொறிமயிர் வாரணம் வைகறை யியம்பி' என்பது மதுரைக் காஞ்சி - 673. சேவலோடு பிற பறவைகளும் ஒலித்தன என்பார் குருகுக ளியம்பின என்றார். குருகுகள் - சிறு பறவைகள், அஃறிணையாகிய குயில், கோழி, குருகுகளொலித்தன. மாந்தர் எழுந்தனரோ என்பார்க்குப் பணியாளர்கள் முன்னெழுந்து சங்குகள் முழங்கினரென்பார் சங்கமியம்பின வென்றார். 'செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர், தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்' – திருப்பாவை – 14. இயம்பின என்பது பன்மை வினை முற்றாதலின் சங்கங்களெனப் பொருள் கொள்க. அதிகாலை சங்கங்கள் ஊதப்பெறுவது மங்கலமாகக் கருதப்படும். "விருப்போடு வெண்சங்க மூதாவூரும்" என வரும் (தனித்திருத்தாண்டகம் - 5) ஆளுடைய அரசுகள் திருவாக்கானும், "வால் வெண்சங் கொடுவகை பெற்றேங்கிய, காலை முரசங்கனை குரலியம்ப" (ஊர்காண் காதை – 13 - 14) எனும் சிலப்பதிகாரத்தானும் சங்கம் முழங்குதல் பண்டைய வழக்கெனவறிக. அக்காலையில் கதிரவனொளி வானோக்கி மேலெழுலும் விண்மீன்களொளி மழுங்கின என்பார் ஓவின தாரகை யொளி யொளியுதயத் தொருப்படுகின்றது என்றார். அடிகளார் இறைவனுக்கு அதிகாலை நிகழ்ச்சிகள் அறிவுறுத்தித் தான் அவரது தாளிணை காணுமாறு அருளுவாய் என விண்ணப்பிப்பார் விருப்பொடு நமக்கு நற் செறிகழல் தாளிணை காட்டாயென்றார். நமக்கு - உயிர்த்தொகுதியைக் குறித்தது. கழல் – வீரக்கழல். இறைவனுடைய காலில் தேவர் அணிவித்தது.

செறி - பொருந்தி. இணை - இரண்டு. நற்றாள் - பிறவிப் பிணியை யறுத்து வீடருளுந்தாள், காட்டாய் - காட்டுவா யாக. இறைவன் திருவருளால் காட்டினாலன்றிக் காண முடியாமையை அறிவிப்பது. 'காண்பாரார் கண்ணுத லாய் காட்டாக்காலே" (அப்பர் - தனித்திருத்தாண்ட கம் - 3) என்பது தமிழ் மறை. இறைவனைத் தமது திரு வடிகளைக் காட்டுமாறு விரைந்து பின் பள்ளி யெழுந் தருள்கவென இறைஞ்சினரென்க. (3)

இன்னிசைவீணையர்யாழினரொருபா
லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற்
றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற்
றொழுகையரழுகையர்துவள்கையரொருபாற்
சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்
றிருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே (௪)

(இதன் பொருள்) திருப்பெருந்துறை உறை சிவபெரு மானே !—, எம்பெருமான் !—, இன் இசை வீணையர் யாழி னர் ஒருபால் - இனிய இசையை இசைக்கும் வீணையை யுடையவரும் யாழினை யுடையவரும் ஒரு பக்கம், இருக்கு ஓடு தோத்திரம் இயம்பினர் ஒருபால் - வேத மந்திரங்க ளுடன் தென்றமிழ்த் தோத்திரங்களை யோதுவார்கள் ஒரு பக்கம், துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால் - நெருங்கக் கட்டப்பட்ட மலர் மாலைகளை ஏந்திய கையினை யுடையவர் கள் ஒரு பக்கம், தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால் - கும்பிட்ட கைகளையுடையவரும், ஆனந்தத்தால் கண்ணீர் சொரிபவரும், வாடி வளைபவரும் ஒருபக்கம், சென்னி இல் அஞ்சலி கூப்பினர் ஒருபால் – தலையின்மீது இரு கைகள் குவித்துக் கும்பிடுபவர் ஒருபக்கம், என்னை உம் ஆண்டு கொண்டு இன் அருள் புரியும்- தகுதியின்மைய

ளுகிய என்னையும் அடிமை கொண்டு முத்தியின்பத்தை யருள்புரிவீராக, பள்ளி எழுந்தருளாய்—. ஏ - அசை.

(விளக்கம்) இத் திருப்பாட்டிலும் அடிகள் இறைவனை திருப்பெருந்துறையுறை சிவபெருமானே எனவும் எம் பெருமானெனவும் விளித்தனர். இங்ஙனம் விளித்த பின்னர் மக்களாய்ப் பிறந்து வளர்வாராய்க் கற்கத் தகுவன வெல்லாங் கற்று வாலறிவன் நற்றாள் தொழுதல் பயனுடைத்து என்றுணர்ந்து வைகறையில் இறைவனைத் தொழுவார் பலருமிருந்த முறைமையீது என்றறிவுறுத்துவார் முதலில் இன்னிசை வீணையரியாழினை ரொருபால் என்றார். இனிமையைப் பயப்பது இசையாதலின் இன்னிசை யென்றார். வீணையினும் யாழினும் இன்னிசை விளங்குகின்றமையான் இறை நிலை விளக்கத்தை 'இன்னிசை வீணையிலிசைந்தோன் காண்க' (திருவாசகம் - திருவண்டப்பகுதி - 35) எனக் குறித்தவாறு காண்க. இசைக் கருவிகளுடன் இசை வாணர்கள் ஒருபக்கம் பாடினரென்பதாம். பிறிதொரு பக்கத்தில் இன்னிசையோடு மந்திரமும் தோத்திரமும் ஓதினரென்பார் இருக்கொடு தோத்திர மியம்பினை ரொருபாலென்றார். இருக்கு நான்மறைகளு ளொன்று. இருக்கொடு தோத்திர மென்பதனால் இருக்கு வடமொழியாதலும் தோத்திரம் தென்றமிழாதலு மறிக. இறைவனுக்கு நீராட்டுங்கால் இருக்கு மந்திரமோதுதல் மரபு. "தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரியி னன்னீர், கொண்டிருக் கோதியாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி (தனித்திரு நேரிசை - 1), 'மருதங்களா மொழிவர் மங்கையோடு வானவரு மாலயனுங் கூடித்தங்கள், சுருதங்களாற் றுதித்துத் தூநீராட்டித் தோத்திரங்கள் பல சொல்லித் தூபங்காட்டி' (திருவெண்காடு - திருத்தாண்டகம் - 8) எனும் திருநாவுக்கரசர்த் திருவாக்குக்களானு மறிக. தோத்திரம் தென்றமிழ்க் கீதமென்று குறிக்கப் படும். 'சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்

கால்' (திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி - 8) எனத் திருஞானசம்பந்தர் அருளியது காண்க. ஊர்தொறும் வடமொழி வேதமும் தென்றமிழ்த் தோத்திரமும் பயிலப்பட்டன. 'கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடு, வேதத் தொலியோ வாவீழி மிழலையே' (திருவீழிமிழலை - பண் - குறிஞ்சி) எனத் திருஞானசம்பந்தரும், 'சொற்பால பொருட்பால சுருதியொரு நான்குந் தோத்திரமும் பல சொல்லித் துதித்திறை தன்றிறத்தே, கற்பாருங் கேட்பாருமாயெங்கு நன்கார் கலைபயிலந் தணர்வாழுங் கலயநல்லூர் காணே' (திருக்கலயநல்லூர் - பண் - தக்கராகம் - 5) எனச் சுந்தரரும் அருளியன காண்க. மேலும், வடசொல் தென்சொல் எனும் இரு மொழிகளிலும் இறைவனுக்கு அருச்சனைகள் செய்வது மரபு போலும். "செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெரிந்தவரோடந்தமில் குணத்தவர்க ளர்ச்சனைகள் செய்யவமர் கின்றவரனூர்" (திருவீழிமிழலை - திருவிராகம் - பண் - சாதாரி - 4) என வரும் ஆளுடைய பிள்ளையார்த் திருவாக்கானுணர்க. இங்ஙனம் வேதமோதுதலும் தோத்திரங்கள் பாடுதலும் உயிர்கள் தம் அகத்திருளைப் போக்குவதற்கே யாகும். "தென்சொல் விஞ்சமர் வடசொற் றிசைமொழி யெழினரம்பெடுத்துத், துஞ்சுநெஞ் சிருணீங்கத் தொழுதெழு தொல்புகலூரில்" (திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் - பண் - பியந்தைக் காந்தாரம் - 7) எனத் திருஞானசம்பந்தர் போற்றியதறிக. நாமணக்கப் பாடிய தொண்டர்கள் ஒருபுறமிருக்க மலர்மாலை யேந்திய தொண்டர் மற்றொருபுறமிருந்தனரென்பார், துன்னிய பிணைமலர்க் கையினரொருபால் என்றார். நாளுந் தலைசுமப்ப மலர்கொண்டு வருபவராதலால் இண்டை, கண்ணி முதலிய மாலைகளில் மலர்களை நெருங்கக் கட்டிய முறை புலப்படுக்கத் துன்னிய பிணைமலரெனக் குறித்தார். 'பழகமா மலர்பறித் திண்டைகொண் டிறைஞ்சுவார் பாற்செறிந்த, குழகனூர்' (திருஞானசம்பந்தர் - திரு

அம்பர் மாகாளம் - பண் - சாதாரி - 6) என்பது காண்க. மற்றுமொரு புறத்தில் தொழுதகை துன்பந் துடைப்பவன் இறைவனென உட்கொண்டு கூடு மன்பினில் கும்பிடலே கருத்துடை அன்பரைக் காண்பார் தொழுகையர் என்றார். அன்பினுலுருகிக் ஆனந்தக் கண்ணீர் சொரிபவரை அழுகையர் எனப்பட்டது. அழுகையர் - அழும் ஒழுக்கத்தினையுடையவர் என்னலுமாம். 'போற்றிநின் றழுதெழு மன்பர் சிந்தைத் திறத்தினர்'—(திருஞானசம்பந்தர் - திருவம்பர் மாகாளம் - பண் - சாதாரி - 5) என்பது காண்க. இங்ஙனம் அன்பினுலுருகி யழுபவருடலில் அசைவு காணப் படுமாதலின் துவள்கையரென்றார். துவளுதல் - வளைதல். மேலும் ஒரு புறத்தில் இரு கைகளையும் தலைமேற் கொண்டு கும்பிடுதலால் வணக்க மறிவிப்பார் இருந்தனரென்பார் சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாலென்றார். அஞ்சலி - வணக்கம். இவ்வடியவர் செயல்கள் யாவும் திருநாவுக்கரசர்பால் விளங்கியமை

கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுட
னுருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரையின்மிசை விழுமுன் பெழுதரு
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநட மெதிர்கும் பிடுமவ
ரார்வம் பெருகுத லளவின்றால்

—திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் – 167.

எனச் சேக்கிழாரடிகள் விரித்துரைப்பது நினைவு கூர்க. தொழுகையும் அழுகையும் துவள்கையும் அடியவர்களுக்கு மெய்யிற் காணப்படும் இலக்கணம் பத்துள் மூன்றாகும். இதனை உபதேசகாண்டத்துட் சிவபுண்ணியச் சருக்கத்தில் 26, 27 செய்யுட்களி லுரைப்பது காண்க. மேலும் உப

தேச காண்டத்துட் சூராதிக ளொடுக்கச் சருக்கத்துள் திருமால் முதலியோர் திருக்கயிலையில் இறைவன் திருமுன் னின்ற காட்சியினைத்

தொழுத கையினர் துளங்கிய மெய்யின
ருருகிய தொடர்போடு
மழுத கண்ணின ரன்பினர் சென்றுழி
யணிநெடு மணிவாயின்
முழுதுணர்ந் தறிகந்திகைப் பிரம்படி
முடிதொட நெருக்கூடு
வழுவி யேகினர் திருநடந் தொழுதனர்
வழுத்தின ரயனின்றூர் (10)

எனக் குறித்தவாறு மறிக. திருத்தொண்டர் புராணத் துள்ளும் இவ்வன்பர்களாகிய மெய்ஞ்ஞானிகளது குணங் களை விரித்துரைத்த சேக்கிழாரடிகள்,

ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிப்பக்
கூசியே யுடல்கம் பிடுத்திடுவார் மெய்க்குண மிக்கார்
—பத்தராய்ப் பணிவார் புராணம் - 6

எனப் போற்றியதூஉ முணர்க. இம் மெய்த்தொண்டர் கள் அதிகாலையில் இறைவனுர்க்குத் தொண்டு செய்தல் பற்றி இறைவனது வருகையை எதிர்நோக்குகின்றன ரென்று அறிவுறுத்தியபடியாம். தொண்டர் நிலை அறி வுறுத்தியபின்பு தமக் கருள்புரிதல் வேண்டுமென்று முறை செய்வார் என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியுமென் றூர். என்னையும் என்பது மேற்குறித்த தொண்டர்கள் பணிகளொன்றினையும் முயலாத என்னையும் என்றபடி. உம்மை இழிவு சிறப்பு. இன்னருள் - பேரின்பமான நன் மையைப் பயக்கவல்ல அருள். புரியும் - முற்றுவினை.

ஆண்டுகொண்டு - அடிமையாகக் கொண்டு. தொண்டர்கள் எதிர் நோக்குதலும் தானின்னருள் பெறுமாறு விழைந்து நிற்றலும் அறிவுறுத்தி இறைவனைத் திருப்பள்ளியைவிட் டெழுமாறு வேண்டுவார் பள்ளியெழுந் தருளா யென்றனரென்க. (4)

பூதங்கடோறுநின்றுயெனினல்லாற்
போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர்
கீதங்கள்பாடுதலாடுதலல்லாற்
கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச்
சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னு
சிந்தனைக்குமரியாயெங்கண்முன்வந்
தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே (ரு)

(இதன் பொருள்) சீதம் கொள்வயல் திருப்பெருந்துறை மன்னு - நீர் பொருந்திய வயல்களாற் சூழ்ந்த திருப்பெருந்துறைக் கரசே !, சிந்தனை கு உம் அரியாய் - சிந்தனையினும் அரியமாட்டாதவனே !, எம்பெருமான் - எமது தலைவனே !, நினை புலவோர் - உன்னை அருட் புலவர்கள், பூதங்கள் தோறும் நின்றுய் எனின் அல்லால் - ஒவ்வொரு பூதத்தினிடத்தும் விளங்குகின்றுயென்பது மல்லாமல், போக்கிலன் வரவிலன் என கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் - மரணமில்லாதவன் பிறப்பில்லாதவன் என்று இசைப் பாடல்கள் பாடப்பெறுவதும் பேசப்பெறுவது மல்லாமல், உனை கண்டு அறிவாரை கேட்டறியோம் - உன்னை யநுபவித்துணர்ந்தவர்களை யாங்கள் கேட்டோமில்லை, எம் கண் முன் வந்து ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள் புரியும் - எங்கள் கண்கள் காணுமாறு முன்னிலைப்பட உருக்கொண்டு போந்து குற்றங்களைக் களைந்து எங்களை யடிமைகொண்டு அருள்பாலிப்பீராக, பள்ளி எழுந்தருளாய் - ஏ - அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் அடியவர் பணிசெய்ய இறைவன் வருகையை எதிர்நோக்கி நிற்றலையும், தாம் அருள் விழைந்து நிற்றலையும் அறிவுறுத்திய அடிகள் இத் திருப்பாட்டில் தங் கண்முன் வந்து குற்றங் களைந்து அடிமைகொண்டருள் புரியுமாறு விண்ணப்பிக்க, திருப் பெருந்துறை மன்னு, சிந்தனைக்கு மரியாய், எம்பெருமான் என விளிப்பாராயினர். திருப்பெருந்துறை நிலவளங் குறிப்பார் சீதங் கொள்வயலென்றார். சீதம் என்பது குளிர்ச்சி என்னும் பொருண்மை யுடைத்தாயினும், கொள் வயல் என்பதற்கேற்ப நீர் எனப் பொருள்பட நின்றது. பிறவி வயப்பட்ட வுயிர்கட்குற்ற வெப்ப நீங்கக் குளிர்ச்சி யுடைமை குறிப்பாற் புலப்படுக்கப்பட்டதறிக. மன்னு என்பது திருப்பெருந்துறைக் கரசனெனப் பொருள்பட நிற்பினும் ஈண்டு அடியவர்தமக் கரசன் எனக் குறித்தது. 'அரைசனே யன்பர்க்கு' என்பது (கோயிற்றிருப்பதி கம் - 3) திருவாசகம். அன்பர்கட் கெளியவன் அல்லா தார்க் கரியவனென்பார் சிந்தனைக்கு மரியாயென்றார். கேட் டல், சிந்தித்தல், தெளிதல் எனும் மூவகை ஞான நிலைகள் கடந்து நிட்டை கூடுபவரே யறிவரென்பது கருத்து. சிந்தித் தல் இரண்டாவதாதலின் அந்நிலை நிற்போர் அறியமாட் டா ரென்பதாம். உம்மை - உயர்வு சிறப்பு, பிறகரணங் களினு முயர்ந்ததென்ப துணர்த்த. கு என்பது நான்காம் வேற்றுமை யுருபு மூன்றும் வேற்றுமைப் பொருளில் வந் தது. 'சிந்திப்பரியன' (அப்பர் - திருவையாறு - திரு விருத்தம் - 1) என்பது தமிழ்மறை. ஈண்டுநமை இய லாமையை அறிவித்தது. இங்ஙனம் அரியவனாயினும் கருணையினால் எளி வந்து தம்மை ஆட்கொண்டானாதலின் எம்பெருமானென்றார். இறைவனை இவ்வாறு விளித்தபின் அவனைக் காண்டலே கருத்தாய் விழைந்தமையை அறிவிப் பார், பூதங்கடோறும் நின்றாயெனினல்லால் போக்கிலன் வரவிலனென நினைப்புலவோர், கீதங்கள் பாடுதல் ஆடுத

லல்லால் கேட்டறியோ முனைக் கண்டறிவாரை யென்றார். பூதம் பல பொருளொரு மொழியாய் நிலர் நீர் நெருப்பு வளி வானெனும் ஐம்பூதங்கள், உயிர், செல்காலம், பூதகணம், பேய் ஆகிய பொருள்களைக் குறித்தது. எனவே பொருள்களொவ்வொன்றிலும் விளங்குந் தன்மை, நின்ற யென்பதனால் விளக்கப்பட்டது. இறைவன் எல்லாமாகி அபேதமாய் நின்ற தன்மை யுணர்த்தியது காண்க. ஈண்டுக் குறித்த இறைவன் அத்துவித நிலை, திருவெம்பாவைப் பதினெட்டாந் திருப்பாட்டு விளக்கத்திற் குறித்தவாறறிக. இஃது இறைவன துண்மையை யுணர்த்துவதாயினும் இறை எஞ்ஞான்றும் விளங்கும் பொருளோ என்றை யுறுவார்குத் தெளிவிப்பார் போக்கிலன் வரவிலனென்றார். போக்கு - இறத்தல், வரவு - பிறத்தல். "போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே" (சிவபுராணம் - 77) எனுந் திருவாசகமும், 'பிறப்பிலா ரிறப்பிலார்' (அப்பர் - திருப்பந்தணை நல்லூர் - 8) எனுந் திருத்தாண்டகமு மருளுவன வறிக. இவை புலவர்கள் அருட்பாடல்களா லறியப்படுவது என்பது. புலவர்-கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிட்டை கூடிய மெய்யுணர்வினை யுடையோர். கீதம் - இசைப் பாட்டு. பாடுதலே யன்றி ஆடுதலுஞ் செய்தார். ஈண்டு ஆடுதலென்பது கேட்டறியோம் என்னும் பயனிலையைக் கொண்டு முடிதலின் பேசுதல் என்னும் பொருள்பட நின்றது. ஆடுதல் - கூத்து நவிற்றலெனின் அது காண்பதற்கே யுரியதன்றி கேட்டற் குரியதன்று. எனவே அது சொல்லாடல் என்பது தெளிவு. அன்பர்கள் தம்மை மறந்து இறையின்பத்திற் றிளைத்துக் கூத்தாடுநராயினும் அவர்கள் உரை நடை மொழிகளாலும் ஏத்தினரென்பது. உன்னை - உனையென இடைக்குறை. கண்டு - அநுபவித்து 'பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு, (சிவ ஞானபோதம் - பாயிரம்) என்பது போல. அறிவார் - உணர்ந்தவர். கேட்டறியோம் - கேட்டுணர்ந்தோமில்லை. கேட்டு முணர்ந்தோ

மில்லை எனவும்மை வருவித் துரைப்பினு மமையும். இங்ஙன மரியராயினும் தங் கண்முன்பாக உருக்கொண்டு போந்து மலங்களைப் போக்கி அடிமை கொண்டருளுமாறு வேண்டுவார், எங் கண்முன் வந்து ஏதங்களறுத் தெம்மை யாண்டருள் புரியுமென்றார். எம் - உயிர்த் தொகுதியைக் குறித்தது. கண் - ஊனக்கண். முன் - முன்னிலையாக. வந்து - உருக்கொண்டு போந்து. கண் என்பது ஞானம், எம்மைச் சிவஞானத்திற் றலைப்படுமாறு செய்வித்து எனக் கோடலுமொன்று. ஏதங்கள் - உயிர்க்குள்ள ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள். 'ஏதந்தீரத் தொழுமினே' என்பது தமிழ்மறை மும்மலங்கள் நீக்கி யடிமை கொண்டு அருள்புரிவீராகவென அறிவுறுத்திப் பள்ளி யெழுமாறு போற்றினரென்க. இத் திருப்பாட்டு முதல் உலகிற் புறத்தே நிகழும் அதிகாலை நிகழ்ச்சிகள் குறிக்கப் படாமை யறிக. (5)

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்
பந்தனைவந்தறுத்தாரவர்பலரு
மைப்புறுகண்ணியர்மானுடத்தியல்பின்
வணங்குகின்றாரணங்கின்மணவாளா
செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே (௬)

(இதன் பொருள்) அணங்கு இன் மணவாளா! — உமையம்மையாரின் கணவனே!, செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப்பெருந்துறை உறை சிவபெருமானே - சிவப்பு நிறம் வாய்ந்த தாமரை மலர்கள் விரியாநின்ற குளிர்ச்சி பொருந்திய வயல்களாற் சூழப்பட்ட திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானே! எம்பெருமான் - எமது தலைவனே!, பப்பு

அற வீடு இருந்து உணரும் நின் அடியார் - பரப்பு நீங்கப் பேரின்ப நிலையினின்றும் உணர்கின்ற உனதடியவர்களும், வந்து பந்தனை அறுத்தார் அவர் பலர் உம் - பிறந்து கட்டாகிய பாசத்தை நீக்கிக்கொண்டவர்களாகிய பலரும், மைப்பு உறு கண்ணியர் - மையின் தன்மை சூழப் பொருந்திய கண்களுடைய குல மகளிரும், மானுடம் அத்து இயல்பு இன் வணங்குகின்ருர் - அறிவுடைமைக்குக் குறியாகும் சிறப்பினுல் உம்மைப் பணிகின்றனர், எமை ஆண்டு இ பிறப்பு அறுத்து அருள் புரியும் - எங்களை யடிமைகொண்டு இந்தப் பிறவியை யொழித்து அருள்புரிவீராக, பள்ளி எழுந்தருளாய் - ஏ - அசை.

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் தங்கண் முன்போந்து அடிமைகொண்டு அருள்புரியுமாறு விழைந்த அடிகள் இத் திருப்பாட்டில் அடியவர்கள் இறைவனை வழிபாட்டினுல் அடைந்தனர். யானும் அங்ஙனே தொடர்வேன், அருள் புரிக என அறிவுறுத்த உன்னுவார் அணங்கின் மணவாளா என்ருர். அணங்கு - உமையம்மை. ஈண்டு அணங்கின் மணவாளா என்றது அடிகள் இறைவன் றிருவுரு காண விழைந்தாராதலினுல் அவ்வுரு உமையம்மையின்றி இன்மையான் அங்ஙனம் குறித்தார். 'உமையலாதுருவமில்லை'- (அப்பர் - திருவையாறு - திருநேரிசை - 9) என்பது தமிழ்மறை. மேலும் இறைவன் செயலெல்லாம் தஞ் சத்தியினுலாவது பற்றி இறைவனைச் சத்தியோடு நினைவார் அணங்கின் மணவாளா வென்றனரென்னலுமாம். அச்சத்தியாரும் இறைவனதருளே. 'அருளுண்டாமீசற்கது சத்தியன்றே' என்பது சிவஞான போதம் (ஐந்தாஞ் சூத்திரம் - இரண்டாமதிகரணம் - 33). 'அரிதரு கண்ணியாளை யொருபாக மாகவருள் காரணத்தில் வருவார்' (பண் - பியந்தைக் காந்தாரம் - சிவனெனு மோசை - 2) எனவரும் அப்பர் அருண்மொழியினுமுணர்க. மணவாளனுய் நிற்குந் தன்மை இறைவன் இச்சைப்படி சத்தியொழுகும் முறை

மையை விளக்கியவாறு. 'எத்திறம் நின்றா னீசனத்திறம வளும் நிற்பள்' (இரண்டாஞ் சூத்திரம்-75) எனும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தானறிக. சத்தியுஞ் சிவமுமாய பிரானை விளித்தபடியென்க. அத்தகைய முதல்வன் திருப் பெருந்துறையில் தம்மையாட் கொண்டபடி நினைந்து திருப் பெருந்துறையுறை சிவபெருமானே, எம்பெருமானென விளித்தனர். இறைவன் அன்பரிதய தாமரைகளி லெழுந் தருளுபவனென நினைவூட்டிக் கொள்ள செப்புறு கமலங் கண்மலருந் தண்வயல்சூழ் திருப்பெருந் துறையென்றார். செப்பு - சிவப்பு நிறம். இங்ஙனம் இறைவனை விளித்து எனது பிறவித்தாளை யறுத்தற்கு உபாயமாவது இறைவனை வழிபட்டுத் தொழுதலே என்பதுணர்ந்தேன், அடியவரும் பிறரும் இறைவனை வழிபடுகிறார்கள் என்றுணர்த்த முற் படுவார், பப்பற வீட்டிருந்துணரு நின்னடியா ரென்றார். பப்பு - பரப்பு. வேகத்தைக் குறித்தது; பிறவி நீக்கம் வேகங் கெட்டபின்பே நிகழும். 'வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க' என்பது திருவாசகம் (சிவபுராணம் - 6). 'பரப்பற்றருக்குரியோனே' (சமாஜப் பதிப்பு - திருப் புகழ் - 405) என்பதனானு மறிக. 'திரையில்லாக் கடல் போலச் சலனந்தீர்ந்து' என்னும் தாயுமானவடிகள் (பன் மாலை - 9) திருவாக்கும் வலியுறுத்துவது காண்க. பப்பு என்பது ஒப்பு என்னும் பொருண்மை சூடாமணி நிகண்டி லுள்ளது. அரசியலார் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon)யிலும் குறிக்கப்பட்டுள்ளது. ஒப்புவெனப் பொருள் கொள்ளின் இணையற்ற வீடு எனப் பொருளுரைத்துக் கொள்க. வீடு - பேரின்பநிலை. உணரும் என்பது தெளிந்த நிலை யுணர்த்தியது. மனவேகத்தைக் கெடுத்துப் பேரின்ப வீட்டில் திருவருளையே பற்றி நிற்குமிவர்கள் அடியா ரென்பது. இன்னும், பிறந்து தவநெறிகள் பேணி வினைப் பாசத்தை யொழித்துக் கொண்டவர்களைக் குறிப்பார் பந்தனை வந்தறுத்தாரவர் பலருமென்றார். பந்தனை - பாசக்

கட்டு. வருதல் - பிறத்தலைக் குறித்தது. பிறத்தலினால் வினைநுகர்ந்து கழிவுண்டாயவழி நல்லறிவால் உடற்கரணங்களால் இறைவனை வழிபடற்கியலும்; அதனால் பாசக் கட்டறுத்தல் விளையும். அவர் - பகுதிப்பொருள் விகுதி. மேலும் குலமகளிர்களும் இறைவனை வழிபடும் நியமமுடையவரென் றுணர்த்தப்பட்டது. மையினைப் பூசுதல் 'மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலை' (சம்பந்தர் - திருமயிலாப்பூர் - பண். சீகாமரம் - 2) எனுந் தமிழ்மறையானும் மகளிர் வழக்கெனவுணர்க. பு என்பது தன்மையைக் குறித்தது. பலரும் என்பதனை நடுநிலைவிளக்காக அடியாரோடுங் கண்ணியரோடு மொட்டுக. அடியார் பலரும், பந்தனை யறுத்தார் பலரும், கண்ணியர் பலருமாக வணங்குகின்றா ரென்று முடிக்க. இவர்கள் இறைவனை வணங்குதல் மானுடத்தன்மைக் காரணமாக வென்பார் மானுடத்தியல்பின் வணங்குகின்றாரென்றார். மானுடத்தியல்பு - அத்து - சாரியை. மானுஷத்தன்மை என்பது தீயன செய்தானொருவனைப் பிறர் தம் சொல்லாற் கடிகின்றபோது இது மனுஷத்தன்மையாகுமோ வென்பர். இஃது அறிவுடைமையைத்தான் குறித்தது. மனிதர் அறிவுடையோரெனக் கருதப்படவேண்டுவராயின் தீயன நெஞ்சினும் கருதலின்மையுடையவராதல்வேண்டும். ஈண்டு அறிவுடைமையாவது இறைவன் நற்றாள் வழிபடுதலைக் குறித்து நின்றது. வாலறிவன் நற்றாள் தொழுதல் கற்றதனாலாய பயனென்பர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். எனவே இறைவனைத் தொழுதல் சிறப்பெனக் கொள்ளப்பட்டது. இவ்வழிபாடு இறைநிலை யடைந்தோரும், உலகியலில் தற்கொண்டானையே பேணி நாளும் வழிபடவேண்டுமென்று விதிக்கப்பட்ட பெண்டிரும் கைக்கொண்டுள்ளனரெனின் உயிர்களுள் தலையாயவர்களாகும் மக்களனைவரும் இறைவழிபாட்டினைக் கடமையாகக் கோடல்வேண்டுமென்று அறிவுறுத்தியபடியாம். மெய்ஞ்ஞானிகளாயி

ரோர்க்கு இவ்வுலகில் செய்யக்கடவதொன்றில்லையாயினும் இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்காது சிவானந்தம் மேன்மேல் வளரச் செய்யும் மாண்புடையது. இங்ஙனமே தற்கொண்டானைப் பேணி யொழுகி வருந் தையலார்க்கு உடலால் வருமின்பம் நிலைத்தலின்மையானும் துன்பந்தரத் தக்கதாகவிருத்தலினானும் உயிர்க்கு நாயகனாகிய இறைவனை வழிபடுங் காரணத்தான் பேரின்பம் மிகுமென்பது ஒருதலை. எனவே இவ்விருவகையினரும் இறைவனை வணங்குதலே அறிவுடைமை யென்றுட்கொண்டு நாளும் வணங்கினா ரென்பதாம். இங்ஙனமின்றி மெய்ஞ்ஞானிகள் நாயக நாயகி பாவமுறையில் இறைவனை வணங்குகின்றன ரென்றுரைப்பதுமுண்டு. இறைவழிபாடே பிறவியறுத்தற்குச் சிறந்த சாதனமாதல் அறிந்தவனாதலின் அவ்வழிபாட்டில் ஒருப்பட்டனன், என் பிறவியை யறுத்து அருள்புரியுமென்று வேண்டுவார் இப்பிறப்பறுத்தெமை யாண்டருள் புரியு மென்றார். எமை - இடைக்குறை. இப்பிறப்பு - இகரச்சுட்டு. எடுத்துள்ள பிறவியைக் குறித்தது. தம்மை அடிமைகொண்டு பிறவி வேரை யறுத்து மீண்டும் பிறவாத தன்மை யெய்தும்படி அருள்புரிவீராக வென விரும்பினா ரென்பது. (6)

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்
கரிதெனவெளிதெனவமரருமறியா
ரிதுவவன்றிருவுருவிவனவனெனவே
யெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு
மதுவளர்பொழிற்றிருவுத்தரகோச
மங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா
வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே (எ)

(இதன் பொருள்) மதுவளர் பொழில் திரு உத்தரகோச மங்கை உள்ளாய் - தேன் ததும்பும் மலர்களுடைய சோலைகள் சூழ்ந்து விளங்கும் திருவுத்தரகோசமங்கையெனும்

பதியில் திருக்கோயில் கொண்டுள்ளவனே !, திருப்பெருந் துறைமன்னு - திருப்பெருந்துறைக்கரசனே !, எம்பெருமான் - எமது தலைவனே !, அமரரும் அது பழம் சுவை என அமுது என அறிதற்கு அரிது என எளிது என அறியார் - தேவர்கள் யாவரும் சிவானந்தாநுபவம் கனிந்த பழத்தின் சுவை போலும், அமுதம் போலுமென அறிதற்கு இயலாதெனவும், அறிதற் கெளியதெனவும், அறியமாட்டார்கள், இங்கு இது அவன் திரு உரு இவன் அவன் எனவே எழுந்து எங்களை ஆண்டுகொண்டு அருளும் - இவ்வுலகத்தில் இப் பிறப்பிலே அமைந்தவுடலாகிய இது, இறைவனது திருமேனியாகத் திகழுமாறும், இவ்வுடலில் விளங்கும் உயிராகிய இவன் அவனாகிய சிவமாக விளங்குமாறு மருளிப் போந்து எங்களை அடிமைகொண் டருளுவாயாக, எமை பணி கொளும் ஆறு எது அது கேட்போம் - எங்களை ஏவல் கொள்வதற்கமைந்த பணி யாது ? அதனைக் கேட்கும் வாயுடையோம் யாம், பள்ளி எழுந்தருளாய்—. ஏ - அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் வழிபாட்டி னின்றி யமையாமையை யறிந்து வழிபாட்டினை மேற்கொண்டு தனது பிறப்பினை யறுத்து அருள் புரியுமாறு விரும்பிய அடிகள் இத்திருப்பாட்டில் சிவானந்தானுபவம் இன்ன தன்மையதென் றறிய முற்படுவார் இறைவனை மதுவளர் பொழிற்றிரு வுத்தரகோச மங்கையுள்ளாய் என விளித்தனர். மது - தேன். பொழில் என்றதனால் மலரின்கண்ணுள்ள தேன் குறித்தது. உத்தரகோசமங்கை என்பது சிவத்தலம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ளது. உள்ளாய் என்பது திருக்கோயில்கொண்டு விளங்கியமை குறித்தது. இப்பதியும் மணிவாசகனாருக்கு இறையருள் விளக்கங்கண்ட பதிகளிலொன்றாகும். அவைகளுள் முதன்மை பெற்றது திருப்பெருந்துறையாகும். அதனுள் வீற்றிருந்து, அரசன் மன்னுயிர்களைச்சமூகவிதிப்படிக் காப்பதுபோலத்

தன்னை யடிமைகொண்டு பசுபாசத்தளை யறுத்துக் காத்த செயலுடையா னென்பது விளக்கத் திருப்பெருந்துறை மன்னு வெனவும், உயிர்த்தலைவனுகின்றமையான் எம்பெருமான் எனவும் விளித்தனர். சிவானந்தாநுபவம் இத்தன்மையதென்றறிய தம்மினும் மிக்காராகிய தேவர்களும் அறியமாட்டா ரென்று நினைவுறுவார், அது பழச்சுவையென அமுதென அறிதற்கறிதென வெளிதென அமரருமறியா ரென்றனர். அது என்பது சுட்டி யறியப்படாததாய் அருளால் அநுபவிக்கப்படும் சிவானந்தம். அவ்வானந்தாநுபவம் இப்படி யிருந்ததென்று சொல்ல வியலாமையின் உவமை முகத்தாற் கூறுவார் பழச்சுவையென அமுதென என்றுர். சொல்லமாட்டாமையை "இங்ஙனிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன், அங்ஙணிருந்ததென்றுந் தீபற, அறியும் அறிவதன்றுந் தீபற" எனத் திருவுந்தியார் (4) உணர்த்துவதறிக. அப்பேரின்பாநுபவம் பயக்குமினிமை பற்றிப் பழச்சுவை யென்றும் அமுதென்றுங் கூறப்பட்டது. உலகவின்பம் எவற்றினும் மேம்பட்ட இனிமையுடைமையை "கனியினுங் கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும், தனிமுடி கவித்தாளு மரசினும், இனியன்றன் னடைந்தார்க்கிடை மருதனே" (திருவிடைமருதூர் - 10) எனுந் திருக்குறுந்தொகையில் அப்பர் உணர்த்தியவாறறிக. மேலும் அச்சிவானந்தாநுபவம் விளைந்த முறைமையை "தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர், உள்ளத்தேற லமுதவொளிவெளி, கள்ளத்தேன் கடியேன் கவலைக்கடல், வெள்ளத்தேனுக் கெவ்வாறு விளைந்ததே" (அப்பர் - தனிக் குறுந்தொகை - 10) என வியந்து பாராட்டப்படுவது காண்க. இங்ஙனம் விளையும் சிவானந்தாநுபவம் அன்பரல்லாதார்க்கு அரிதெனவும் அன்பர்க்கு எளியதெனவுங் கூறுவார் அறிதற்கரிதென எளிதென என்றுர். அரிது - இன்மைப் பொருள்பட நின்றது. அமரரும் - முற்றும்மை.

அமரரெல்லாரையுங் குறித்தது. இச் சிவானந்தாநுபவம் தான் அறியமாட்டாமையான் அதற்குத் தகுதியை யளித்து அடிமைகொள்ளுமாறு விரும்புவார் இதுவவன் றிருவுரு விவ ணவனெனவே எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந்தருளு மென்றார். தகுதியாவது உயிர் சிவமாக விளங்கிநிற்றலும் அதற்கேற்ப உயிர் விளங்குமுடல் சிவன் றிருமேனியாக மாறுதலுமாம். எனவே இது என்பது உடலைக் குறித்தது. அவன் - சிவன். திருவுரு-சிவத்தின் திருமேனி. "ஆன்மாப் பசுவென்னும் பெயர்நீங்கி முத்தனாய் அருளோடுங் கூடி நின்ற வழி, அவ் வான்மாவின் வியாப்பியமான மாயை முதலியனவுந் திரோதான சத்திபோலப் பாசமென்னும் பெயர் நீங்கி அருளேயாய் நிற்பது" என்பது சிவஞான பாடியம் (கழகப் பதிப்பு - 156). மாயேயமாகிய உடல் கரணங்களெல்லாம் சிவதநுவாகவும் சிவகரணங்களாக மாறுதல் அருளோடுங்கூடி நின்ற உயிர்களுக்கியல்பாகும். "கூறும் நாவே முதலாகக் கூறுங் கரணமெல்லாம் நீ" எனும் மணிவாசகமும் (குழைத்தபத்து - 5), "நாக்குஞ் செவியுங் கண்ணுநீ யென்பனு னலனேயினி நானுனை நன் குணர்ந்தேன்" எனுந் திருப்பாட்டும் (சுந்தரர் - திருவஞ் சைக்களம் - பண் - இந்தளம் - 7) வலியுறுத்துவ தறிக. இங்ஙனம் அங்கங்களாகிய கரணங்கள் சிவகரணங்களாக மாறியவெனின் அவையுடைய அங்கியாகிய உடலும் சிவ தநுவாக மாறியதென்க. தநு - உடல். உடல் சிவன்றிரு மேனியாதலும் உண்ணின்ற உயிரும் அருளோடுங் கூடிச் சிவமாய் நின்றதென இவனவனெனவே என்பதனாலுணர்த் தப்பட்டது. இவன் - உயிர். அவன் - சிவம். எனவே என்பது இங்ஙனமாறும்படி யருளியென விளக்கியது. இத்தகுதி நேர்படவில்லையாயின் சிவானந்தாநுபவம் நிக ழாதாகும். "ஆன்மாவின் வேறாய்ச் சிவன் கண்ணேயுள வாகிய முற்றுணர்தன் முதலிய எண்வகைக் குணங்களும் ஆன்மாவின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவா

நந்த வின்பம்; ஆன்மா அதுவாய் அழுந்தி நின்று அவ் விளக்கத்தை யறிதலே அநுபவமெனப்படும்" எனும் சிவ ஞானபாடியத்தானும் (கழகப் பதிப்பு - 398) வலியுறுத் தப்படுவது காண்க. இங்கு - இவ்வுலகத்து நேர்ந்த இப் பிறப்பிலே என்றபடி. அருளும் - வினைமுற்று. எழுந் தருள் என்றது தம் மனத்தே குடிகொண்டிருக்க விரும்பி யது. "அடியாருள்ளத் தன்பு மீதூரக் குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்" (திருவாசகம் - கீர்த்தித் திரு வகவல் - 9 - 8) என இறைவன் திருவுளப்பாங்கு விளக்கப் பட்டதறிக. தமக்குப் பக்குவத்தையாக்கி அடிமைகொண்டு சிவானந்தாநுபவம் கூட்டுமாறு விழைந்தஅடிகள் அவ்வநு பவம் இடையீடின்றி விளங்கத் தாம் இயற்றத்தகுவதாகிய ஏவற்பணியாதென அறிய விருப்புமுடையவர் எது எமைப் பணிகொளுமாறது கேட்போ மென்றார். அருளொடுங் கூடிய உயிர் சிவத்தோடும் ஏகனாகி நின்றமையான் உயிரை மறைத்து நின்ற ஆணவ மலவாதனை ஒழிந்தமையானும், மாயை கன்ம வாதனைகள் தீர்தற்கு இறைபணி நிற்கை இன்றியமையாததாயிற்று. இது சிவானந்தாநுபவத்திற்கு ஏதுவானது பற்றி இறை பணியாதென வினவினாரென்க. இறை பணியாவது சிவனருளால் யாதொன்றையுஞ் செய் தல். "தன்னுடைய இச்சா ஞானக்கிரியைகளின் தொழிற் பாட்டுக்கு முதல்வனது இச்சா ஞானக் கிரியைகளேயின் றியமையாத ஆன்மாவும் அவ்வியைபு பற்றி நிகழ்வனவெல் லாம் முதல்வனது இச்சா ஞானக்கிரியைகளது நிகழ்ச்சியே யெனக் கண்டு அம்முதல்வன் வியாபகத்துள்ளாக அடங்கி நிற்றல்" எனவரும் சிவஞானபாடியத்தானும் (கழகப் பதிப்பு - 473) உணர்க. கேட்போம் என்றது இறைவனது இச்சை ஞானக்கிரியைகளின் வழி யொழுகுவோமென்னலு மாம். இங்ஙனம் விண்ணப்பித்துத் திருப்பள்ளிவிட்டெழுக வென விழைந்தனரென்க. (7)

முந்தியமுதனடுவிறுதியுமானாய்
மூவருமறிகிலரியாவர்மற்றறிவார்
பந்தணைவிரலியுநீயுநின்னடியார்
பழங்குடிதொறுமெழுந்தருளியபரனே
செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி
யந்தணனாவதுங்காட்டிவந்தாண்டா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே (அ)

(இதன்பொருள்) ஆர் அமுது ஏ - பெறுதற்கரிய அமுதமே !, முந்திய முதல் நடு இறுதி உம் ஆனாய் - முற்பட்ட முதலும் நடுவும் முடிவுமானவனே !, மூவரும் அறிகிலர் - பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூவரும் நின்னையறிதற்கு வல்லவரல்லர், மற்று யாவர் அறிவார் - வேறு எவர் நின்னை அறியும் வன்மையுடையர், பந்து அணை விரலி உம் நீ உம் நின் அடியார் பழம் குடில்தொறும் எழுந்தருளிய பரனே - பந்தினையணைந்த விரல்களையுடைய உமையம்மையும் நீயும் உன்னுடைய அடியவர்களது பழமைவாய்ந்த குடிசைகளாகிய உள்ளந்தோறும் திருக்கோயில் கொள்ளும் மேலானவனே !, செம் தழல் புரை திருமேனி உம் காட்டி - சிவந்த நெருப்பை யொத்த நிறம் வாய்ந்த வடிவத்தைக் காட்டியருளியும், திருப்பெருந்துறை உறைகோயில் உம் காட்டி - திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டு விளங்குநிலை காட்டியும், அந்தணன் ஆவது உம் காட்டி - வேதியனாகிய உருக்கொண்டநிலை காட்டியும், வந்து ஆண்டாய் - என்முன் போந்து அடிமை கொண்டாய், பள்ளி எழுந்தருளாய்—. ஏ - அசை.

(விளக்கம்) மேலைத்திருப்பாட்டில் சிவானந்தாநுபவம் விழைந்த அடிகள் இத்திருப்பாட்டில் ஊரும் பேருமில்லா முதல்வன் உருக்கொண்டு வந்தருளுஞ் சிறப்புகூற நினை வுடையராய் ஆரமுதே யென்று இறைவனை விளித்தார். ஆர் என்றது பெறுதற்கரிய அருமை குறித்தது. அமுதம்

இனிமை தரும் முத்தியின்பம். ஆரா வென்பது ஆர் எனக் குறுகிய தெனின் தொலையாத இன்பமெனக் கொள்க. எவ்வளவு பருகினும் தெவிட்டாது மேன்மேலும் பருக நிற்கு மின்பம் என்னலுமாம். முத்தியின்பமாக விளங்கும் இறைவன் உயிர்கட்கு ஆதாரமாய்ப் படைத்தல் காத்தல் அழித்தல் எனும் முத்தொழில்களிலும் உடனாய் நிற்கும் முறைமையை யருளுவார் முந்திய முதனடு விறுதியுமானாய் என்றார். முந்திய என்றது யாவர்க்கும் முன்னமே தோன்றி ஆதாரமாய் விளங்குந் தன்மை. முதனடுவிறுதி - முத்தொழில்கள். இம் மூன்று தொழில்களைத் தனித் தனியே செய்வாராகும் நான்முகன் திருமால் உருத்திரர்களுக்கும் முத்தொழில்களுக்கும் மூலமாய் நிற்பது. தம்மினும் மேம்பட்ட பரம்பொருளொன் றுணராராதலின் மூவருமறிகில ரென்றார். இவர்களே அறியாரெனின் இவரினும் கீழ்ப்பட்டோர் எவருமறியா ரென்பார் யாவர்மற் றறிவா ரென்றார். இங்ஙனம் அறியமாட்டாதவராகும் மூலமுதற்பொருள் தானுஞ்சத்தியுமாய் அடியார் நெஞ்சகந்தனுள் விளங்கும் மேன்மையுடையதாதலின், பந்தணை விரலியும் நீயும் நின்னடியார் பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே என்றார். பந்தணைவிரலி - பந்தினைக் கையிலேந்தி யிருத்தல் மகளிர் பொதுவிலக்கணம். 'பந்து சேர்விரலாள்' (சம்பந்தர் - திருப்பூந்தராய் - பண் - காந்தாரபஞ்சமம் - 1) என்பது தமிழ்மறை. அடியவர்களுள்ளத்தே குடிகொள்ளுஞ் சிறப்பு குறிக்க நின்னடியார் பழங்குடில்தொறும், என்றருளினர். நின்னடியார் என்றது சிவபெருமானை யன்றி பிறதெய்வம் நினையாது பற்றி நிற்கும் இயல்பினர். பழங்குடில் என்பதனுள் பழமை, புறத்தே உலகில் விளங்கும் குடிசைகள் காலக் கழிவில் நைந்து சிதைந்துள்ளவாறு போல, திருவருளினால் நைந்துருகி உலகக்கட்டு சிதைந்தமை குறித்தது. குடில் என்பது அன்பருள்ளம். உலகில் குடில் இலை தருப்பை முதலியவற்றால் வேயப்பட்டு உறைவிட

மாதல்போல் அன்பினால் வேய்ந்து சிறந்த உறைவிடமாயதாதலின் அன்பருள்ளம் குடிலென உருவகஞ் செய்யப்பட்டது. இதனை, 'நகமெலாந் தேயக் கையா லுண்மலர் தொழுது தூவி, முகமெலாங் கண்ணீர் மல்கமுன் பணிந்தேத்துந் தொண்டர், அகமலாற் கோயிலில்லையையனையாறனார்க்கே" (திருவையாறு - 8) எனத் திருநாவுக்கரசர்த் திருநேரிசை வலியுறுத்தியது காண்க. இவ்வரிய மனக் கோயிலில் "அருள் நனி சுரக்கும் பிரளய விடங்கனின், செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற, அமையாக் காட்சி இமையக், கொழுந்தையு முடனே கொண்டிங், கெழுந் தருளத்தகும் எம்பெருமானே" எனப் பட்டினத்தடிகள் (திருக்கழுமல மும்மணிக்கோவை-4.) இறைவன் இறைவியையும் எழுந்தருளுமாறு விழைந்ததூஉங் காண்க. தொறும் என்றதனால் ஒவ்வொரு அடியவர் உள்ளத்தினும் அவர் நினைந்தவடிவோடு வீற்றிருந்தமை குறிக்கப்பட்டது. எழுந்தருளுதல் - உள்ளக் கமலத்தே போந்து நிற்றல். பரனே என்பது சொரூபம் என்னும் சிவத்தினுண்மைநிலை குறித்தது. இங்ஙனம் உண்மை நிலையிலுள்ள பரமசிவன் உயிர்கண் மாட்டருளுடையனாகி தனது வடிவம் உயிர்கள் காணுமாறு தடத்தநிலை யெனும் பொதுநிலையில் திருமேனி கொள்ளுமென்பது ஆகம முடிபு. பொதுநிலைத் திருமேனிகள் மூன்று. அவை அருவம், அருவுருவம், உருவமென்பன. அவற்றை இறைவன் காட்டியருளினா ரென்பார் செந்தழல் புரை திருமேனியுங் காட்டித் திருப்பெருந்துறை கோயிலுங் காட்டி, அந்தணனாவதுங் காட்டி வந்தாண்டாய் என்றார். இவை முறையே அருவம், அருவுருவம் உருவத் திருமேனிகளைக் குறித்தன.

அருவமோ உருவா ரூபமானதோ யன்றி நின்ற
உருவமோ உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங்கென்னின்

அருவமும் உருவா ரூபமானது மன்றி நின்ற
உருவமும் மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ளவாமே (58)

எனும் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தானும்,

அருவுமாகுவனுருவமுமாகுவனருவு
முருவுமில்லாதோர்தன்மையுமாகுவனூழின்
கருமமாகுவனிமித்தமாகுவன்கண்டாய்
பரமனுடலேயாவரேபகர்ந்திடற்பாலார்.

எனும்(மகேந்திர காண்டம் - சூரனமைச்சியற் படலம்-126) கந்தபுராணச் செய்யுளானும் இறைவனுக்குத் தடத்த வடிவங்கள் மூன்றுண்மை யறியத்தக்கது. திருக்கோயிலில் அமைக்கப்படும் அருட்குறியாகும் சிவலிங்கம் அருவுருவத் திருமேனி யென்ப. அதனை அருண்மொழித் தேவர்,'காணாத அருவினுக்கு முருவினுக்குங் காரணமாய், நீணாகமணிந் தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம் (சாக்கிய நாயனார் புராணம் - 8) என வருளியது காண்க. அந்தணனாவதும் என்றது தடத்த உருவத்திருமேனி கொண்ட முறைமை குறித்தது. இஃது அடிகளார் குருந்தமரத்தின் கீழ் கண்ட குருபரனுடைய திருக்கோலம். வந்து என்றது அங்கு மிங்குமெனாதபடி எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் உருவங்கொண்டு வெளிப்பட்ட தென்பது கருத்து. அங்ஙனம் உருக்கொண்டது தம்மை அடிமை கொள்வதற் கென்பார் ஆண்டாயென்றார். அருள் செய்வதே கடமை யெனக் கருதிய பெருமானே திருப்பள்ளி விட்டெழுந் தருள்க என்று வேண்டியபடியாம். (8)

விண்ணகத்தேவருநண்ணவுமாட்டா
விழுப்பொருளேயுனதொழுப்படியோங்கண்
மண்ணகத்தேவந்துவாழச்செய்தானே
வண்டிருப்பெருந்துறையாய்வழியடியோங்
கண்ணகத்தேநின்றுகளிதருதேனே
கடலமுதேகரும்பேவிரும்படியா
ரெண்ணகத்தாயுலகுக்குயிரானா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௯)

(இதன் பொருள்) விண் அகத்து தேவர் உம் நண்ணவும் மாட்டா விழுபொருள் ஏ - விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் நெருங்குதற்கு மரிய மேலான பரம்பொருளே !, உன தொழுப்படி யோங்கள் மண் அகத்தே வந்து வாழ செய்தான் ஏ - உனது அடிமைகளாகிய யாங்கள் உய்யுமாறு மண்ணிடை போந்தருளி எங்களை இறையின்பத்தில் வாழ அருள் புரிந்தவனே !, வண் திருப்பெருந்துறையாய் - வளமை மிக்க திருப்பெருந்துறையிலுள்ளவனே !, வழி அடியோம் கண் அகத்தே நின்று களிதரு தேன் ஏ - பரம்பரை அடிமைகளாகிய எங்கள் கண்ணிடத்தே விளங்கிப் பேரின்பத்தைத் தருகின்ற தேன்போ லினிமையானவனே !, கடல் அமுதே - திருப் பாற்கடலிலெழுந்த அருமருந்தானவனே !, கரும்பே - கரும்பு போன்று இனிமை பயப்பவனே !, விரும்பு அடியார் எண் அகத்தாய் - அன்புடைத் தொண்டர் கருத்திலுள்ளவனே !, உலகுக்கு உயிர் ஆனாய் - எல்லா உயிர்கட்கு உயிரானவனே !, பள்ளி எழுந்தருளாய்—. ஏ- அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் இறைவனுண்மை நிலையையும் உயிர்கள் மாட்டுக் கருணை காரணமாகக் கொள்ளும் மூவகைத் திருமேனிகளையும் உணர்த்திய அடிகள் இத் திருப்பாட்டில் இறைவனால் உயிர்கட்கு விளையும் பேரின்ப நிலையின் றிறம் நினைவு கொள்வார் இறைவனை விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே யென்றார். உயர்ந்த வானுலகங்களில் வாழும் தேவர்களாலும் நெருங்கவும் முடியாத மிக வுயர்ந்த பொருள் இறைவனென்பது. தேவரும் - உம்மை முற்றும்மை. நண்ணவும் என்றது நெருங்கவும் மாட்டாத அவர் அடையவும் மாட்டாரென்பது. அத்தகைய பொருள் இம் மண்ணுலகில் வாழுந் தொண்டர்களுக்கு எளிமையாய்ப் போந்து அவர்களைப் பேரின்பத்திற் றிளைக்கச் செய்யு மியல்புடையதென்பார் உன தொழுப்படி யோங்கள் மண்ணகத்தே வந்து வாழச்

செய்தானே யென்றார். தொழுப்பு - தொழும்பு - அடிமை யாதலைக் குறித்தது. மண்ணுலகத்தே வருதல் இறைவன திச்சை போலும். 'வான் பழித்து மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்' எனுந் திருவாசக முணர்த்துவது காண்க. உயிர்களை வாழச் செய்தல் குறிப்புடையா னுதலி னால் இம் மண்ணுலகத்தே கோயில் கொண்டா ரென்பார் வண் திருப்பெருந்துறையாய் என்றார். வண் - வளமை. நிலவளமும் நீர்வளமுமன்றி உயிர்களை அன்பராக்கும் அருள் வன்மை கருதியது போலும். திருக்கோயில் வழி பாட்டினால் அன்பராயினார் பரம்பரை அடிமைகளாகும் பெருமை பெற்றோராதலின் வழியடியோ மென்றார். அவ் வடியவர் சிந்தையிலும் சிரத்திலும் பேரின்ப மூற்றெடின விளங்கி இனிமை நுகருமாறு செய்வதுபற்றி கண்ணகத்தே நின்று களிதரு தேனே யென்றார். நின்று - அத்துவிதமாகக் கலந்து விளங்கி என்பது. கண் - ஞானம் என்னலுமாம். களி - பேரின்பம். தேன் - நோய்தனை நீக்கு மியல்பின தாய் இன்பந்தரும் மருந்தாதலின் உயிர்கட்கு ஆணவ முதலிய மலங்களை நீக்கிப் பேரின்ப மூட்டுவதற் கமைந்த காரணம் பற்றி அங்ஙனங் கூறினாரென்க. தேன் மலங்களை யறுத்து இன்ப மூட்டுந் தகைமைய தாயினும் நிரந்தர மின்மை கண் டார் இறையின்பம் நிரந்தரமாதல் பற்றி உவமை முகத் தால் விளக்கக் கடலமுதே யென்றார். அமுது - இறவாமை தரும் மருந்து. அதனினும் அண்ணிக்கு மியல்புடையது கருப்பஞ்சாறாகலின் கரும்பே யென்றார். இங்ஙனமாக, வீட்டின்பம் பயக்கும் இறைவன் அன்பால் நினைவா ருள் ளக் கமலங்களில் வீற்றிருந் தருளுவனாதலின் விரும்படியா ரெண்ணகத்தாய் என்றார். விரும்புதல் - அன்பால் நினைவா ரென்பது. அன்பர் மாட்டுள்ளவனெனின் பிறர் மாட்டி னின்மை கருதி யாண்டும் விளங்குவதோர் பெற்றியினில் குறை நீக்குவான் உலகுக் குயிரானாயென்றார். உயிர்க ளனைத்தினுக்கு முயிராய் விளங்குந் தன்மை குறிக்கப்பட் டது. யாவர்க்கும் முதற் பொருளாய் நின்ற இறைவன் தனக்குத் தலைவனென்பார் எம்பெருமானே என்று ஆர்வத் தாலழைத்துத் திருப் பள்ளிவிட் டெழுந்தருளுமாறு வேண் டினாரென்பது. (9)

புவனியிற்போய்ப்பிறவாமையினுணும்
போக்குகின்றேமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

(இதன் பொருள்) ஆர் அமுது ஏ - பெறுதற்கரிய அமுதமே!, இந்த பூமி சிவன் உய்ய கொள்கின்ற ஆறு என்று நோக்கி - இப்பூவுலகம் சிவபெருமான் உயிர்களை வீடருளி ஆட்கொள்கின்ற முறைமையுடையதென் றறிந்தும், புவனி இல் போய் பிறவாமை இல் நாள் அவமே போக்குகின்றேம் - நாம் பூமியிலிறங்கிப் பிறவாமையினுல் சிவபெருமானுல் ஆட்கொள்ளப் பெறும் பெற்றியை யிழந்தவர்களாய் நாட்களை வீணுகக் கழிக்கின்றேமே யென்று, திருமால் ஆம் அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசை படவும் - திருமால் விருப்பமடையவும், மலரிலுறைகின்ற நான்முகன் ஆசைப்படும்படியாகவும், நின் அலர்ந்த மெய் கருணை உம் நீ உம் அவனி இல் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய் - நினது விரிந்த பொய்யாத கருணையாகும் அருட்சத்தியும் நீயும் இப்பூமியின் கண்ணே போந்தருளி எங்களை அடிமை கொள்ள வல்லவனே! திருப்பெருந்துறை உறைவாய் - திருப்பெருந்துறையில் திருக்கோயில்கொண்டவனே!, பள்ளிஎழுந்தருளாய் - திருப்பள்ளியைவிட்டு எழுந்தருள்க, ஏ - அசை.

(விளக்கம்) மேலைத் திருப்பாட்டில் மண்ணிடை உயிர்களைப் பேரின்பத் தழுத்தி உயிர்க்குயிராய் நின்ற நிலையுணர்த்திய அடிகள் இத்திருப்பாட்டில் இப்பூமியின்கண் திருமால் பிரமன் ஆசை படும்படி எம்மை அடிமை கொள்வாய் என்று விண்ணப்பிக்க முற்படுவாராய் இறைவனை ஆரமுதேயென விளித்தார். ஆரமுதே என்பதன் குறிப்பு 8-ம் பாட்டில் விளக்கத்திற் காண்க பின் இந்தப் பூமியினுயர்வை இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கி, புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றேமவமே, திருமாலா மவன் விருப்பெய்தவும்

மலரவ னுசைப்படவும் என விளக்கினர். இந்தப் பூமியின் தகுதியை "மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம், ஆனிடத் தைந்துமாகு மரன்பணிக்காக வன்றே, வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனை யர்ச்சிப்பர், ஊனெடுத் துழலுமூம ரொன்றையு முணராரந்தோ (சிவ ஞானசித்தியார் - 182) என அருணந்தி சிவாசாரியார் உணர்த்திய தறிக. அரன்றன்னை வழிபடப்பெறாத நாட்கள் வீணாகிய நாட்கள் என்பது. 'வீழ்நாள் படாமை நன் றாற்றி னஃதொருவன், வாழ்நாள் வழி யடைக்குங் கல்' எனவரும் திருக்குறளின் (38) கருத்துன்னுக. 'பிறந்தே னின் றிருவருளே பேசினல்லாற் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' (திருவாவடுதுறை-திருத்தாண்டகம் - 10) எனவும், 'துன்பம் நும்மைத் தொழாத நாட்க ளென்பாரும், இன்ப நும்மை யேத்து நாட்களென்பாரும்' (திருவாரூர் - பண் - குறிஞ்சி - 9) எனவும் திருநாவுக் கரசர் அருளியவாறறிக. வீழ்நாள் படாதிருப்பதற்குச் சிறந்த தகுதிவாய்ந்த இந்தப் பூமியைத் திருமாலும் நான்முக னும் விரும்பினர்களென்பது. திருமாலினுக்கும் நான்முக னுக்குமுள்ள உயர்வு தாழ்வினைக் குறிக்கத் திருமால் விருப்பமெய்தினரெனவும் நான்முகனுசைப்பட்டானெனவு முரைத்த நயங் காண்க. தேவர்களாலும் விரும்பப்படு கின்ற இவ்வுலகத்திற்கு உமாதேவியாரோடும் இறைவனைப் போந்தருளுமாறு விரைவார் நின்னலர்ந்த மெய்க்கருணையு நீயும் அவனியிற் புகுந்தெனன்றார். அலர்தல் என்பது உயிர் கள் தோறும் மறைந்துநின்று வினைப்பய னுகருமாறு செய் தும் மலபக்குவமுஞ் செய்துவந்த திரோதானசத்தி அருட் சத்தியாக வெளிப்படுந் திறம் விளக்கியது. இறைவனதருள் என்றும் பொய்யாத தன்மை கருதி மெய்க்கருணையென் றுணர்த்தப்பட்டது. இங்ஙனம் இவ்வுலகத்தே வந்தருளிய இறைவன் உயிர்களை அடிமைகொள்ளும் வல்லமையுடையா னென்பார் எமை யாட்கொள்ளவல்லாய் என்றார். எமை - இடைக்குறை. யாம் விரும்புவதெல்லாம் எங்களை யாட் கொள்வதே யென்பதுணர்த்தித் துயிலுணருமாறு வேண்டு வார் பள்ளி யெழுந்தருளா யென்றாரென்பது. (10)

திருப்பள்ளியெழுச்சி உரை முற்றிற்று.

மேற்கோள் நூலகராதி

1. அற்புதத்திருவந்தாதி
2. உபதேசகாண்டம்
3. ஐங்குறுநூறு
4. கந்தபுராணம்
5. கந்தரநுபூதி
6. கந்தரலங்காரம்
7. கந்தர்கலிவெண்பா
8. கலித்தொகை
9. குறுந்தொகை
10. கோயினான்மணிமாலை
11. சிதம்பரமும்மணிக்கோவை (குமரகுருசுவாமிகள் பிரபந்தம் - ஸ்ரீகாசிமடம் பதிப்பு)
12. சித்தாந்த சாராவளி
13. சிலப்பதிகாரம்
14. சிவஞானசித்தியார் (சமாஜப் பதிப்பு)
15. சிவஞானபாடியம் (கழகப் பதிப்பு)
16. சிவஞானபோதம், (சிவஞான முனிவர் சிற்றுரை சமாஜப் பதிப்பு)
17. சிவப்பிரகாசம் (சமாஜப் பதிப்பு)
18. சீவகசிந்தாமணி
19. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
20. சூடாமணி நிகண்டு
21. தமிழ்ப் பாகவதம்
22. தாயுமானார் பாடல்
23. திருக்கழுமலமும்மணிக்கோவை
24. திருக்குறள்
25. திருச்சிற்றம்பலக்கோவையார்
26. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்
27. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

28. திருப்பாவை
29. திருப்புகழ் (சமாஜப் பதிப்பு)
30. திருப்போரூர்ச்சந்நிதிமுறை (சமாஜப் பதிப்பு)
31. திருமந்திரம்
32. திருமுருகாற்றுப்படை
33. திருவாசகம்
34. திருவாதவூரடிகள் புராணம்
35. திருவிசைப்பா (ஸ்ரீகாசிமடம் பதிப்பு)
36. திருவிளையாடற் புராணம்
37. திருவுந்தியார்
38. திருவெம்பாவை, கதிர்மணிவிளக்கப் பேருரை
39. தொல்காப்பியம் – பொருளதிகாரம்
40. நற்றிணை
41. நன்னூல்
42. நெடுநல்வாடை
43. நைடதம்
44. பரிபாடல்
45. பிங்கலந்தை
46. புறநானூறு
47. பெரியபுராணம்
48. மணிமேகலை
49. மதுரைக்காஞ்சி
50. மிருகேந்திரம்
51. முதற்றிருப்பெருந்துறை புராணம்
52. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
53. யாப்பருங்கலவிருத்தி
54. "ஹரிஸமயதிவாகரம்" 1927ஆம் டிசம்பர்மீ இதழில் வித்வான். மு. இராகவையங்கார் எழுதிய "மார்கழி நோன்பு ஆகிய தைந்நீராடல்" எனும் கட்டுரை.

மேற்கோள் முதற்குறிப்பகராதி

முதற்குறிப்பு	பக்கம்	வரி	முதற்குறிப்பு	பக்கம்	வரி
அகளமாய்	38	20	இங்ஙனி	144	12
அடியாரு	146	7	இருடரு	85	4
அத்தேவர்	18	5	இருநிலனாய்	102	20
அந்தணர்	42	12	இருள்கடிந்	124	21
அந்தமாயு	84	21	இருள்சேர்	88	15
அரிதரு	61	9	இவ்வாறே	68	1
,,	139	27	இனிஆழியான்	50	28
அருவமோ	149	28	இன்னதனு	5	15
அருவுமா	150	4	இன்னிசை	131	13
அருளுண்டா	139	25	ஈசனையே	134	15
அருளே	95	6	ஈசன்அறி	23	3
அருள்நனி	149	8	ஈரமென்	27	9
அரைசனே	136	15	ஈருடலா	20	14
அவனருளா	123	8	உடம்பை	19	2
அளக்கலா	37	16	உடையானு	93	8
அள்ளூற	28	2	உமையலா	61	4
அள்ளூறி	28	6	,,	139	20
அன்பரொடு	105	18	உருமேனி	38	26
அன்பர்பணி	57	6	உளர்தரும்	125	3
அன்றேயென்	107	18	உள்ளமள்	28	8
அன்னஞ்சேர்	88	18	உறவாவா	63	23
அன்னவர்	8	2	உறுவர்	78	24
ஆணையினீ	94	26	உற்றவன்	33	17
ஆதியுமந்	109	26	ஊசல்கயி	19	23
ஆராத	124	20	ஊழிமுதல்வன்	51	9
ஆழிமழை	95	14	எங்கெழி	106	15
ஆறுதசீர்	70	24	எட்டிசைந்த	112	6
ஆன்மா	145	8	எத்திறம்	140	1
ஆன்மாவின்	145	29	எந்தையீ	27	28

முதற்குறிப்பு	பக்கம்	வரி
என்னப்ப	27	26
என்னையேது	88	1
எதந்திர	138	10
எயும்மும்	85	15
எர்மருவும்	118	4
ஏற்ற இவை	111	18
ஐந்தின்முத	2	3
ஐயனே	67	20
ஒப்புடை	44	30
ஒருநாம	63	17
ஒருவன் எறி	19	26
ஒல்லை நீ	35	11
ஒழிவாயொழி	17	18
ஒன்றதாய்	94	3
கடல்குறை	91	26
கண்டார்	34	17
கண்பனிக்	88	28
கருணையொடு	55	28
கருவிமா	92	7
கனியினுங்	144	18
கனைக்கு	2	19
காணுத	150	12
காண்பாரார்	130	4
காயமோ	61	6
காவலாளர்	115	4
கிளிமழலை	32	24
கீதத்திசை	132	4
கீதமினிய	60	24
குக்கூ	114	28
குருகாம்	77	30
குருகினம்	77	23
குருசுபாய	77	20
குவளைக்கண்	76	17
குவளைக்கள	76	29
குறைவி	57	18
குறைவிலா	37	11
குன்றியி	76	27
கூடாவொ	55	19
,,	29	18
கூறும்நாவே	145	16
கேட்டலுட	82	6
கேவல	93	15
கையுந்தலை	133	17
கைவினை	105	23
கொங்கையார்	76	14
கோழியுங்	6	25
கௌவை	68	18
சங்காரமே	51	22
சத்தியாய்	9	25
சத்தியுளா	11	17
சாம்பரை	19	13
சாறயர்	100	17
சிந்திப்பரியன	136	24
சிந்தைதனை	23	17
சிந்தையே	62	26
சிவபத்தர்	55	9
சிறந்து	60	18
சிறுபான்மை	1	16
சிற்றம்பலம்	82	23
சீரடியார்	55	1
சுத்தமார்	76	2
செங்கல்	129	13
செஞ்சிறை	48	4
செந்தமிழர்	132	13
செய்யமேனி	65	29
செய்யனே	65	12
செப்யன்	65	14
,,	65	11
செழிய	49	7
சென்றணைந்த	84	7

முதற்குறிப்பு	பக்கம் - வரி	முதற்குறிப்பு	பக்கம் - வரி
சென்ருடு	70 - 17	நசையுநர்	70 - 1
சொலவல	131 - 31	நயினில்	126 - 13
சொல்லக	83 - 23	நயன்பு	126 - 12
சொல்லக்	105 - 4	நலமலி	16 - 15
சொற்பால	132 - 6	நறுவீ	3 - 12
சோதியுஞ்	100 - 1	நன்வினு	105 - 31
தண்டியடி	34 - 9	நனவினுங்	106 - 3
தமக்கன்பு	104 - 18	நாக்குஞ்	145 - 17
தம்மை	87 - 27	நிலநீர்	112 - 3
தம்மைவிடு	29 - 1	நீறணிந்தார்	117 - 29
தனுகருளின்	93 - 27	நெஞ்சத்தி	124 - 23
தன்னுடைய	146 - 21	நெஞ்சமு	30 - 10
தாயின்	85 - 22	நெடியா	100 - 7
தாயுநீயே	104 - 24	படைப்பா	61 - 17
தாவினல்	113 - 13	பண்டே	57 - 9
திருவடிக்கு	109 - 29	பண்ணிசை	101 - 4
திருவுமெய்	89 - 11	பத்துகொலா	28 - 20
திரையில்லா	140 - 19	பந்துசேர்	148 - 21
தீக்கைமுறை	79 - 11	பவனெம்	54 - 22
துஞ்சடை	71 - 9	பவ்வத்	27 - 6
துஞ்சிருள்	22 - 17	பரந்தபரா	93 - 30
துன்பம்	154 - 13	பரப்பற்	140 - 18
தெய்வநா	92 - 1	பரமானந்த	18 - 28
தெருளார்	105 - 16	பரமானந்தப்	124 - 28
தெள்ளத்	144 - 23	பழகமாமலர்	132 - 30
தென்சொல்	132 - 19	பற்ருய்நினை	78 - 29
தென்னவ	45 - 21	பனிநிலாக்	5 - 19
தென்னுடு	45 - 19	பாண்வாய்	114 - 14
தேவாசுரர்	71 - 14	பாரார்	128 - 17
தேனுக்குங்	32 - 25	பிறந்தேன்	154 - 10
தொடருந்	59 - 19	பிறப்பிலா	137 - 15
தொண்டனே	131 - 23	புண்டரிகப்	77 - 11
தொழுத	134 - 4	புதியரிற்	54 - 3
தோற்றம்	34 - 21	புரண்டு	19 - 11
நகமெலா	149 - 3	புவம்வளி	51 - 14

முதற்குறிப்பு	பக்கம்	வரி
புறச்சமய	102	11
புறஞ்சிறை	48	10
பெண்ணே	101	21
பெண்ணும்	59	13
பெயர்	63	7
பெரும்பெயர்	105	27
,,	137	29
பொக்கம்	25	14
,,	37	22
பொங்கழல்	65	8
பொய்கைத்	114	21
பொலம்	110	25
பொறிமயிர்	129	7
பொன்னார்	105	5
பொன்னை	22	29
போக்கும்	137	13
போதுகுலா	60	17
போற்றிநின்	133	7
மம்மரறு	33	27
மயலாகுந்	89	22
மருதங்க	131	25
மருந்தவன்	33	19
மலந்தாங்கிய	78	16
மலையாக	37	7
மல்லலம்	106	25
மழலைவண்டு	126	20
மறையுமாய்	83	5
மற்றொரு	62	14
மனோன்மணி	11	16
மன்றுளீர்	42	3
மாதர்கொண்	8	15
மாதொரு	67	2
மானமழிந்	8	3
மானுடப்	154	2
மான்பெட்டை	40	28
மின்னுக்கொடி	68	12
முகத்திற்	34	7
முகம்பொழி	126	4
முத்துறழ்	27	1
முத்தாரும்	122	14
முன்புமாய்	54	5
முன்னே	101	23
மூப்பான்	53	17
மேலையார்	3	25
மைப்பய	41	7
வண்டார்	93	5
வந்திறை	100	12
வாக்கென்	16	20
வால்வெண்	129	20
,,	114	25
வாழ்த்துவது	25	10
வாழ்வெனு	54	29
வான்பழி	152	3
வான்பெய	3	15
விருப்போடு	129	18
விழுமியார்	16	10
வீழ்நாள்	154	8
வெம்பாத	2	6
வெம்பிறவி	120	22
வெம்மை	97	25
வெள்ளந்தாழ்	17	1
வெறுப்பன	78	8
வேகங்	140	16
வையெயிற்	3	9

இந்நூல் கிடைக்கும் இடங்கள் :—

1. திரு. ம. சி. நித்தியானந்தம், பொருட்காப்பாளர்,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, தாச்சி அருணாசல முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை 4.

2. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்,
பி. எ., பி. எல்.,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-1.

3. திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள்,
"திருவதிகை", 167, பெரியகூடல்,
ஷெணய்நகர், சென்னை-30.

4. திரு. செ. இரத்தினசாமி செட்டியார் அவர்கள்,
நடராஜ விலாஸ் ஜுவெல்லரி ஹால்,
சிதம்பரம்.